Regd. No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.

ஆகஸ்டு 18ல வெள்ளிக்கிழமை
மகத்தான ஆரம்பம்!

சென்னை மதுரை
பாரகனில் தேவி டாக்கீஸில்

★

பூம்பாவை

(தமிழ்)

யு. ஆர். ஜீவரத்தினம்
கே. ஆர். ராமஸ்வாமி ... டி. ஆர். ராமச்சந்திரன்
கே. சாரங்கபாணி ... கே. ஆர். செல்லம்
என். எஸ். கிருஷ்ணன் ... டி. ஏ. மதுரம்
நடிப்பது

டைரக்ஷன் : ஸ்டுடியோ :
டி. பாலாஜி சிங் ★ நியூடோன்

2வது வாரம்

கோயமுத்தூர்	—	கர்னடிக் டாக்கீஸ்
காரைக்குடி	—	ராம விலாசம்
புதுச்சேரி	—	ஸ்வாமி பிக்சர் பாலெஸ்
வேலூர்	—	நியூ ஆபரா

★


டிஸ்ட்ரிபியூட்டர்கள் :

கந்தன் & கம்பெனி

மதுரை — கோயமுத்தூர் — கோட்டயம்

மைசூர் சமஸ்தானம், பெங்களூர் கன்டோன்மெண்ட், வட, தென் கன்னடம்.
மைசூர் பிலிம் கார்ப்பொரேஷன்
196, காந்தி நகர் — பெங்களூர் ஸிடி

சென்னை நகர் :
ஸ்ரீ சாயா & கம்பெனி
145, பிராட்வே — மதராஸ்



3 வது - வாரம்

ஆகஸ்டு 20௳ முதல்

கிருஷ்ணா பிக்சர்ஸ்

பிரயாவதி

டைரக்‌ஷன் :- T.R. ரகுநாத்

சிந்தாமணி டாக்கீஸ்	...	மதுரை
ராஜா & டயமண்டு டாக்கீஸ்	...	கோயமுத்தூர்
பாபுலர் டாக்கீஸ்	...	திருநெல்வேலி
ரத்னா டாக்கீஸ்	...	பாண்டிச்சேரி

மற்றும் பல பிரதான நகரங்களில்
கூடிய சீக்கிரம் திரையிடப்படும்.

MTF ரிலீஸ்

டிஸ்ட்ரிப்யூடர்ஸ் :- முருகன் டாக்கீ பிலிம் கம்பெனி
மதுரை — பெங்களூர் — பெஜவாடா

கல்கி



KALKI ஆகஸ்ட் 20, 1944 4 அணா



சிறந்ததை விரும்பும் சகலருக்கும்

நறுமணம் கமழும் சிகரெட்டை விரும்புவோர் டிலக்ஸ் டெனரை வரவேற்பார்கள். சிகரெட்டின் நறுமணத்தின் உயர்நிலையை டெனர் சிகரெட் அடைந்திருக்கிறதென அதை உபயோகிப்பவர்களால் கருதப்படுகிறது. உத்தரவாதமுள்ள 100% பொருக்கின வர்ஜீனியா புகையிலை இந்த சிகரெட்டுகள் செய்வதில் உபயோகப்படுவதே இதை எல்லாரும் விரும்புவதற்கு முக்கிய காரணம்.

tenor

டி லக்ஸ் டெனர் சிகரெட்டு
ஜேம்ஸ் கார்ல்டன் லிட், லண்டன்

is truly a
de Luxe Cigarette

JAMES CARLTON LTD, LONDON. EASTERN LICENCEES, POST BOX No. 470, CALCUTTA

சிறு சேமிப்பு திட்டம்

யுத்த காலத்திற்கு மட்டுமின்றி, அதன்பின் பல வருஷங்களுக்குங்கூட நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவும்.

இப்பொழுது சேமிப்பு செய்வதற்கும், யுத்தத்திற்குப்பின் ஏற்பட வேண்டிய அபிவிருத்திக்கு திட்டம் போடவும் இப்பொழுதுள்ள அரிய சந்தர்ப்பத்தை இந்தியா இழக்க முடியாது.

இந்தியாவிடம் உங்களுக்கு அபிமானமிருந்தால், உங்களால் முடிந்த அனைத்தையும் சேமித்து நாஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட்டுகளை வாங்க வேண்டும். மற்றவைகளை அதிகம் தேவையாயுள்ள பிறருக்கு விட்டு விடுங்கள்.

உங்களுக்கு தாராளமான வட்டி கிடைக்கும். செய்துள்ள முதலிடும் பத்திரமாக இருக்கும்.

தொகைகள் — ரூ. 10, ரூ. 50, ரூ 100, ரூ. 500, ரூ. 1000 வருஷத்திற்கு 4 1/6 சத விகிதம் வட்டி கிடைக்கும். 12 வருஷங்களுக்குப் பின் தொகை திருப்பிக் கொடுக்கப் படும். உங்கள் ரூ. 10. கால கெடுவடைந்ததும் ரூ. 15/- கொடுக்கும். 3 வருஷங்களுக்குப் பின் என்று வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளலாம்.

இவற்றிற்கு வருமான வரி இல்லை

தபால் ஆபீஸ்களிலும், ஸேவிங்ஸ் பீரோக்களிலும், அதிகாரம் பெற்ற ஏஜன்டுகளிடமும் கிடைக்கும். அங்கீகாரம் பெற்ற ஏஜன்டுகளது உதவி உங்களுக்கு முற்றிலும் இலவசம்.

இதற்கு முன் சேமிக்க சந்தர்ப்பமில்லாதவர்களுக்கு இது அரிய சந்தர்ப்பம்.

எதிர்கால நன்மைக்கு இப்பொழுதே ஏற்பாடு செய்யுங்கள்.


நாஷனல் ஸேவிங்ஸ் ஸர்டிபிகேட்டுகளை உடனே வாங்குங்கள்.

மாடர்ன் தியேட்டர்ஸின் மகத்தான படம்

வெளிவரும் நன்னாளை எதிர்பாருங்கள்



EASTERNS



திருப்தி, அமைதி
ஒரு கப் டீ அருந்தியவுடன். கேட்பானேன், நரசூஸ் டீ தான்! நல்ல காபி, டீயை அனுபவிக்க அறிந்தவர்கள் நரசூஸ் காபி, டீயையே விரும்புகிறார்கள்.
நரசூஸ்
இந்தியத் தயாரிப்பில் தலைசிறந்தது
நரசூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி,
சேலம் தென்னிந்தியா
NHK-22-TM

புத்திசாலிகள் தெரிந்தெடுப்பது

கட்டாவ் வாயில்களைத்தான் விவேகமும் பகுத்தறிவுமுடைய பெண் மணிகள் மனமுவந்து தெரிந்தெடுப்பது. 65 ஆண்டுகளுக்கு மேலான பிரசித்தி வாய்ந்த மில்லில் நெசவு செய்யப் படும் இந்த வாயில்களின் அலாதி மினுப்பும், பளபளப்பும், இழைகளின் சேர்த்தியும் மிகவும் சிறந்த நிலை யடைந்து விளங்குகின்றன. பற்பல மனமோகன நிறங்கள் கண்ணைக் கவரும் கவர்களில் வாங்கக் கிடைக்கும்.

கட்டாவ் வாயில்கள்

அச்சடித்து, சாயம் தோய்த்து வெளிக்கொணர்பவர்:
தி கட்டாவ் மகான்ஜி ஸ்பின்னிங்
& வீவிங் கம்பெனி லிமிடெட்
டிலைல் ரோடு   பைகுல்லா   பம்பாய்



KM. 39

குழந்தைகளின் சுரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு ஜம்மிஸ் "லிவர்க்யூர்"

அறிவிப்பு

சென்னை, ஜம்மி வெங்கட்ரமணய்யாவின் குமாரர், சுரல் குலைக்கட்டி நிபுணர் கீழ்க்கண்ட இடங்களுக்கு விஜயம் செய்கிறார். அது சமயம் குழந்தைகளின் சுரல் குலைக்கட்டி சம்பந்தமான எல்லா வியாதிகளையும் நேரில் காண்பித்து அவரிடம் யோசனைகள் கேட்டுக் கொள்ளலாம்.

பரிசோதிக்கும் நேரம் காலை 9 முதல் 11-30 வரை. மாலை 3 முதல் 5-30 வரை.

தென்காசி : 27-8-44 மெஸர்ஸ். மெடிகல் ஸ்டோர்ஸ்.
கல்லிடைக்குறிச்சி: 28-8-44 (அரை நாள்) டாக்டர் சுப்பையர் (காலை 9 மணி முதல் 12 மணி வரை)
திருநெல்வேலி : 29, 30-8-44 "சந்திர விலாஸ்" திருநெல்வேலி ஜங்ஷன்
தூத்துக்குடி : 1-9-44 மெஸர்ஸ். தூத்துக்குடி மெடிகல் ஸ்டோர்ஸ்
திண்டுக்கல் : 3-9-44 C. ஆறுமுகம் பிள்ளை, மெயின் ரோடு
பழனி : 4-9-44 மெஸர்ஸ். S. ராஜரத்னம் செட்டியார், அல்லது (மாலை 2 மணி முதல் 5 மணி வரை) S. முத்துகிருஷ்ண செட்டியார் & சன்ஸ்
தஞ்சாவூர் : 6, 7-9-44 T. G. சுவாமிநாத ராவ், கெமிஸ்ட், தெற்கு மெயின் வீதி.

குறிப்பு :— கல்லிடைக்குறிச்சியிலும், பழனியிலும் அரை நாள்தான் தங்குகிறார்.

8-9-44ல் நாகப்பட்டணம், 9-9-44ல் திருவாரூர், 10-9-44ல் மன்னார்குடி முதலிய இடங்களுக்கும் விஜயம் செய்கிறார்.

●

ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்
கும்பகோணம் :: மதராஸ்

இந்த பரதன் எவ்வளவு கேவல மானவன் பாருங்கள்! தமையன் என்று கூட எண்ணவில்லையே! லக்ஷ்மணன் என்ற வீரப்புலி இன்று நிற்கிறது என் பதும் பரதனுக்குப் புத்தியில் படவில்லை.

முன்னவன் என்று
நினைந்திலன்; மொய்ம்புலி
அன்னான் ஓர்
பின்னவன் நின்றனன்
என்றிலன்; அன்னவை
பொறு வேன்,
என் இவன் எனை
இகழ்ந்த(து)இவ் எல்லை
கடந்து இங்கே!—
மன்னவர் நெஞ்சினில்
வேடர் விடும்சரம்
வாயா வோ!

[முன்னவன் என்று: தமையன் என்ப தாக; மொய்ம்புலி அன்னான் ஓர் பின்னவன் நின்றனன் என்றிலன்: பெரும்புலி போன்ற தம்பி லக்ஷ்மணன் ராமன் பக்கத்திலேயே நிற்கிறான் என்றும் நினைக்கவில்லை; அன்னவை பொறுவேன்: இந்த விஷயங் களை நினைக்கவில்லை, போகட்டும். எப்படி இவன் என்னை இகழலாம் — இந்த என் ராஜ்யத்தின் எல்லையைத் தாண்டி வந்து! வாயாவோ: தைக்க மாட்டாவோ.]

பரதன்மேல் ஏற்பட்ட ஆங்காரம் சகல அரசர் களையுமே ஒரு தாக்குத் தாக்குகிறது!

வேடுவர்களைப் பார்த்து மேலும் பேசுகிறான்: இந்த பரதன் பாய்கிறதும் அவனுடைய சேனைகள் கிளர்ந்து பாய்கிறதும் நமக்கு ஒரு லக்ஷியமா? [illegible] இன்றிருக்கிறது. அதைக் கேளுங்கள்.


நாடு கொடுத்தஎன்
நாயக னுக்கிவர்,
நாமா ளும்
காடு கொடுக்கிலர்
ஆகி எடுத்தது
காணீ ரோ!
ஆடு கொடிப்படை
சாடி அறத்தவ
ரேயா ள,
வேடு கொடுத்தது
பார்,எனும் இப்புகழ்
மேவீ ரோ!

[நாடு கொடுத்த என் நாயகனுக்கு: நாடல்லவா கொடுத்தான் எம்பெருமான் இந்த பரதனுக்கு; அதற்குக் கைமாறு செய்கிற அழகைப் பாருங்கள், நம் போன்ற வர்கள் ஆளும் வெறும் காட்டைக்கூடக் கொடுக் கக் கூடாதென்றல்லவா படை எடுத்து வருகிறார்கள்; ஆடு கொடிப் படை சாடி: ஆகாயத்தில் பறக்கும்படியான பெரிய பெரிய கொடிகளைப் பிடித்துக்கொண்டு வரும் இந்தப் படைகளை எதிர்த்து; அறத்த வரே ஆள: தர்மவான்களான ராமனும் அவனது வாரிசுகளுமே ஆளும்படியாக; வேடு கொடுத்தது பார்; வேடுவர் கொடுத் தது தான் இந்த ராஜ்யம்; பார்: பூமி.]

இதயம் ஒரே கொதிப்பாய்க் கொதிக் கிறது குகனுக்கு. அதோடு ஒரு ஆசை யும் அவனது உள்ளத்தில் பிறக்கிறது. "அயோத்தியை உத்தமமான மன்னர் களே கேட்டிலும் ஆளப்போகிறார்கள். அவர்கள் அடடா என்ன சொல்லப் போகிறார்கள் — 'இந்த ராம ராஜ்யம் நம்ம ராஜ்யம் எப்படி நமக்கு வந்தது? வேடுவர் கொடுத்தல்லவா வந்தது' என்று சொல்லப் போகிறார்கள்;" வேடு வர்களுடைய வீரச் செயல்களுக்கு எப்பேர்ப்பட்ட லக்ஷியம்!

பிரங்கிகளைச் செம்பு வெள்ளீயம் வேறு பல உலோகங்கள் இவைகளைச் சேர்த்து வார்க்கிறார்கள். தமிழ் வார்த்தைகளைக் கொண்டும் வார்க் கலாம் என்று சொல்லத் தோன்று கிறது — மேலேசொன்ன பாடல்களைப் பார்க்கும்போது!





73. ராஜ்யம் கொடுத்தது வேடுவராக்கும்!

கங்கையின் வட கரையில் பரதன் வந்து தங்கினான். தேர்ப்படை, யானைப் படை, குதிரைப் படை மற்றும் படை வீரர்கள் எல்லாவற்றோடும் வந்து தங்கினான்.

தென் கரையிலிருந்து இவ்வளவையும் பார்த்தான் குகன். சரி சரி தமையன் ராமனைக் கொல்லுவதற்காகவே இப்படிப் படையெடுத்து வருகிறான் என்று எண்ணிக் கொண்டான். ஒரே கோபாவேசம் வந்து பொங்குகிறது. உடுக்கை யெடுத்து சப்தம் செய்கிறான், கொம்பை எடுத்து ஊதுகிறான் — தன்னுடைய படைகளைத் திரட்டுகிறான். படைகளும் வந்து மொய்த்துவிட்டன. கருங் கடல் ஒன்று கொதித்துக் கொண்டு வந்து சூழ்ந்த மாதிரி மொய்த்து விட்டன.

இப்படித் தன்முன் தோன்றிய வேடர்களைப் பார்த்துச் சொல்லுகிறான்.

'அதோ, வடகரையில் தோன்றுகிற சேனையை என்ன செய்யப் போகிறேன் தெரியுமா. வானுலகத்துக்கே அனுப்பப் போகிறேனாக்கும்!

> தோன்றிய புளினரை
>   நோக்கிச், 'சூழ்ச்சியின்
> ஊன்றிய சேனையை
>   உம்பர் ஏற்றுதற்(கு)
> என்றனன், என்னுயிர்த்
>   துணைவற்(கு) ஈகுவான்
> ஆன்றபேர் அரசு; நீர்
>   அமைதிர் ஆல்' என்றான்.

[புளினரை நோக்கி: வேடர்களைப் பார்த்து; சூழ்ச்சியின் ஊன்றிய சேனையை: ராமனைக் கொன்று விட யோசனை பண்ணி வந்த இந்தச் சேனையை; உம்பர் ஏற்றுதற்கு என்றனன்: கொன்று விட உறுதி பண்ணியிருக்கிறேன்; என் உயிர்த் துணைவற்கு: ராமனுக்கு; ஈகுவான் ஆன்ற பேரரசு: சிறந்த நிலையிலிருக்கும் பெரிய ராஜ்யத்தைக் கொடுக்கும்படியாகத்தான்; நீர் அமைதிரால்: எல்லாவற்றிற்கும் நீங்கள் தயாராய் இருங்கள்.]

மனசு பொறுக்கவில்லை குகனுக்கு. ராமன்மேல் படை எடுக்கவாவது! இந்த கங்கை யாற்றில் ஆழத்தை இவர்கள் கண்டார்களா! ஒரு பெரிய அலை வந்தால் எல்லாரையும் கபளீகரம் பண்ணிவிடும் என்பது தெரியவா செய்யும் இவர்களுக்கு? யானைப் படையாம் — யானைப் படையைக் கண்டு விலகி வழி விடுகிற ஆசாமிகளா நம் வீரர்கள்!

வேறு

> 'ஆழநெ டுந்திரை
>   ஆறுக டந்திவர்
>   போவாரோ!
> வேழநெ டும்படை
>   கண்டுவி லங்கிடும்
>   வில்லாளோ!
> தோழமை என்றவர்
>   சொல்லிய சொல்லொரு
>   சொல்அன் றோ!
> ஏழமை வேடன்
>   இறந்திலன் என்றெனை
>   ஏசாரோ!

[வேழநெடும்படை: யானைகளாலான பெரிய படை; என்னைத் தோழன் என்று ராமன் சொன்னானே — அது சாமானியமான சொல்லா! ஏழமை வேடன் இறந்திலன் என்று: ஒன்றுக்கும் உதவாத இந்த குகன் உயிரை விட்டிருக்க வேண்டாமா என்பதாக ஏசமாட்டார்களா உலகத்தவர்?]



இந்தக் காலத்தில்தான் டாக்டரே கையில் மருந்து வைத்துக் கொள்ளும் வழக்கம் கிடையாதே. டாக்டர் மருந்து எழுதிக் கொடுக்க வேண்டியது, நாம் ஒவ்வொரு கடையாக மருந்து இருக்கிறதா என்று அலைய வேண்டியது. இதுதானே தற்கால முறை?

இதே முறைப் பிரகாரம், பாலுவைக் கொண்டு போய் வீட்டில் சேர்த்து விட்டு, ரிக்ஷாக்காரனோடும் சண்டை போட்டு விட்டு, டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்தைத் தேடிக்கொண்டு கடை கடையாக அலைந்தேன். ஒரு கடையிலாவது மருந்து கிடைக்கணுமே, கிடையாது.

நான் எதிர்பார்த்ததுபோல் பாலுவுக்கு மருந்தில்லாமலே காரிந்து வலி குணமாகி விட்டது. ஆனால் தற்கால வைத்தியர்கள் மேல் எனக்குள்ள கசப்பு மாத்திரம் குறையவேயில்லை.

தற்கால வைத்தியர்களையும், வைத்திய முறைகளையும் கண்டால் மகாத்மா அவர்களுக்குப் பிரிட்டிஷ் ஆட்சியைவிடக் கசப்பு என்பது பிரசித்தம். ஆனால் மகாத்மா ஏன், எல்லாருக்கும்தான், எனக்கும்தான் கசப்பாயிருக்கிறது.

அத்தனைக்கும் தற்கால வைத்தியர்கள் மருந்துக்குக்கூடக் கசப்பு மருந்து கொடுப்பதில்லையே, அவர்கள்மீது எனக்கு ஏன் இத்தனை கசப்பு என்று நேயர்கள் கேட்கலாம்.

பின் நமக்கு வேண்டிய மருந்துகளெல்லாம் அமெரிக்காவையும், ஆஸ்திரேலியாவையும்தான் நம்பிக் கிடக்க வேண்டுமென்றால் கோபம் வருமா, வராதா? இந்த யுத்தம் வந்து, கப்பல்கள் வருவது குறைந்தாலும் குறைந்தது மருந்து கிடைக்காமல் திண்டாட வேண்டியிருக்கிறது. அப்படியாவது நாட்டு வைத்தியர்களைப்போல் நம் ஊர் சாமான்களை வைத்துக்கொண்டு மருந்து பண்ணிக் கொடுக்கத் தெரிகிறதா? கிடையாது. தற்கால டாக்டர்கள் எட்டு வருஷமும், பத்து வருஷமும் பிரமாதமாக வைத்தியம் படிக்கிறார்களே யொழிய, கடைசியில் அமெரிக்காவில் உற்பத்தியாகும் மருந்துகளுக்கு விற்பனை ஏஜண்ட் உத்தியோகம்தான் பார்க்கத் தெரிகிறது. ஏதோ சீட்டு எழுதிக் கொடுத்து, கடைக்காரனிடமிருந்து கமிஷன் பெறும் உத்தியோகம்தான் செய்ய வேண்டியிருக்கிறது.


இந்த டாக்டருக்கும் நல்ல பெயர் வாங்கிக் கொடுக்கும் டாக்டர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு 'ஸ்பெஷலிஸ்டு'கள் என்று பெயர்.

இவர்களிடம் வைத்தியம் செய்து கொள்ள விரும்புகிறவர்கள் தாங்கள் பாதி வைத்தியர்களாயிருப்பது நலம். தங்கள் வியாதி உடம்பின் எந்தப் பாகத்தைச் சேர்ந்தது என்பதை நிர்ணயிக்கத் தெரிந்தவர்கள்தான் 'ஸ்பெஷலிஸ்டு'களிடம் போகலாம்.

இருதயத்திலிருந்து இரண்டு அங்குலச் சுற்று வட்டாரத்தில் உள்ள வியாதிகளுக்கென்று ஒரு ஸ்பெஷலிஸ்ட் இருப்பார். இருதயத்திலிருந்து மூன்று அங்குலத்துக்கு அப்பால் வியாதி உள்ளவர்கள் இவரிடம் போனால் வீண் பணச் செலவும் கால விரயமும்தான் ஆகும். "இந்த வியாதி என் இலாகாவைச் சேர்ந்ததல்ல" என்று கண்டு பிடிப்பதற்கே ஸ்பெஷலிஸ்டுக்கு ஒரு மாத காலம் ஆகும்.

அப்படிக் கண்டு பிடிப்பதற்குள் அவர் இருபது தடவையாவது நம் ரத்தத்தைப் பரிசோதித்து விடுவார். ஒரு பத்து தடவையாவது நம்மை 'எக்ஸ்ரே' எடுத்து விடுவார். இன்னும் என்னென்னவோ மருந்துகள் கொடுப்பார். வியாதியைக் குணப்படுத்துவதற்காக மருந்து கொடுக்கிறார் என்று நினைத்து ஏமாறுகிறவர்கள் எத்தனையோ பேர்! இந்த மருந்து உடம்பில் என்னென்ன கோளாறுகள் ஏற்படுத்துகிறது என்று கவனித்து, அதன் மூலம் என்ன வியாதி, அந்த வியாதி தங்கள் இலாகாவைச் சேர்ந்ததுதானா என்று கண்டு பிடிப்பதே இந்த டாக்டர்களின் நோக்கம். நம் வியாதி இவர் இலாகாவைச் சேர்ந்ததல்ல, இவரால் குணப்படுத்த முடியாது என்று கண்டு பிடிப்பதற்காக நாம் பணம் கொடுத்தாக வேண்டும்!

நீங்களே சொல்லுங்கள்: இத்தகைய வைத்தியர்களைக் கண்டால், "வைத்தியர்கள், ஜாக்கிரதை" என்று சொல்லத் தோன்றுமா, தோன்றாதா?



பிறகு தீப்பெட்டியைத் திறந்து தீக் குச்சி ஒன்று எடுத்தார். தீக் குச்சியினால் வயிற்றில் என்னென்னமோ கோடுகள் போட்டார். அதிலும் அவருக்கு ஒன்றும் புலனாகவில்லை.

பிறகு பாலுவைக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தார். அவர் போட்ட கேள்விகளைக் கேட்டபோது எனக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. சில போலீஸ் ஸ்டேஷன்களில் சாமான் பறி கொடுத்தவர்களைக் கேள்வி கேட்பார்களே, தெரியுமா?

“உங்கள் சாமானைத் திருடியிருக்கலாம் என்று யார் பேரிலாவது சந்தேகப் படுகிறீர்களா?”

“சாமான் திருட்டுப் போனபோது யாராவது பக்கத்தில் சாட்சி இருந்தார்களா?”

“திருட்டுப் போன சாமான்கள் உங்களுக்குத்தான் சொந்தம் என்பதற்கு ஏதாவது ருஜு உண்டா?”

அன்று டாக்டர் பாலுவை இதே மாதிரிதான் கேட்டார்.

“உனக்கு இதற்கு முன்னர் இதே மாதிரி வயிற்றுவலி வந்ததுண்டா?”

“அப்பொழுது என்ன மருந்து சாப்பிட்டாய்? ஞாபகம் இருக்கிறதா?”

“வயிற்று வலி எத்தனை மணிக்குச் சரியாக ஆரம்பம் ஆயிற்று என்று சொல்ல முடியுமா?” என்று இப்படிக் கேட்டுக்கொண்டே போனார்.

எனக்கா, “ஐயோ நாழியாகிறதே, வாசலில் ரிக்ஷாக்காரனை வேறு நிறுத்தி வைத்துவிட்டு வந்துவிட்டோமே, இன்றைக்கு அவனோடு ஒரு சண்டை போட்டுத்தான் தீரவேண்டியிருக்கும் போலிருக்கே” என்று பயம்!

கேள்விப் படலம் முடிந்ததும் டாக்டர் கொஞ்ச நேரம் தலையைச் சொறிந்தார். பிறகு என்னைச் சமிக்ஞை செய்து வெளியே அழைத்தார்.

அவர் அப்படி சமிக்ஞை செய்து அழைத்ததும் நான் பயந்தே போய் விட்டேன். பாலுவுக்கு என்னமோ, ஏதோ என்று நடுங்கினேன்.

இரண்டு பேரும் அறையின் முன் பக்கம் போனதும் டாக்டர், “எனக்குத் தெரிந்த டாக்டர் ஒருவர் பக்கத்தில் இருக்கிறார். அவரையும் அழைத்துக் கொண்டு வந்து காட்டி ‘கன்ஸல்ட்’ பண்ணினால் தேவலை என்று படுகிறது. என்ன சொல்கிறீர்கள்?” என்று கேட்டார்.

“எதற்காக இத்தனை சிரமம்! நான் வேண்டுமானால் நாளைக்குப் பையனை அழைத்துக் கொண்டு வருகிறேன்” என்றேன்.

“இல்லை, இல்லை. இதோ நானே போய் டாக்டரை அழைத்துக்கொண்டு வருகிறேன்” என்று டாக்டர் தம் கைபையை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்.

பத்து நிமிஷத்தில் இன்னொரு டாக்டரை அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தார். அந்த டாக்டரும் முதல் டாக்டர் செய்ததுபோலவே முதலில் வயிற்றில் குத்தினார், பிறகு முதுகில் குத்தினார், பிறகு ஸ்டெதாஸ்கோப்பினால் அழுத்தினார், தீக்குச்சியினால் கீறினார், கடைசியில் கேள்விகள் கேட்டார்.

கடைசியில் தம் தலையைச் சொறிந்து கொண்டு, முதல் டாக்டரைச் சமிக்ஞை செய்து வெளியே கூப்பிட்டார்.

இதைக் கண்டதும் பாலு பயந்தே விட்டான். எங்கே மூன்றாவது டாக்டர் ஒருவரை அழைத்துக்கொண்டு வர வேண்டும் என்று சொல்லிவிட்டுப் போகிறார்களோ என்று அவனுக்குப் பயம்! ஆனால் நல்ல வேளையாக அந்தமாதிரி விபரீதம் ஒன்றும் நிகழவில்லை. இரண்டாம் டாக்டர் முதல் டாக்டரை சமிக்ஞை செய்து கூப்பிட்டது ‘கன்ஸல்ட்’ பண்ணுவதற்காகத்தான்.

இரண்டு டாக்டர்களும் ஒரு பத்து நிமிஷம் ஏதோ குசு, குசு என்று பேசிக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் பேசிக் கொண்டது காதில் விழாதபடி வாசலில் இருந்த ரிக்ஷாக்காரன் கத்த ஆரம்பித்து விட்டான்!

கடைசியாக இரண்டு டாக்டர்களும் ஒரு வகையாகப் பேசி முடித்ததும் முதல் டாக்டர், “இந்தப் பௌடரை இரண்டு மணிக்கொரு தடவை கொடுங்கள். குணமாகவில்லையென்றால் நாளைக்கு வாருங்கள். ரத்தத்தைப் பரிசோதனைக்கு அனுப்புகிறேன்” என்று ஒரு கடிதத்தைக் கையில் கொடுத்தார்.



[குறிப்பு:—"திருடர்கள் ஜாக்கிரதை" என்ற பதச் சேர்க்கையில் யார் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று அர்த்தமோ, அதே அர்த்தத்தில்தான் மேலேயுள்ள தலைப்பு எழுதப்பட்டிருக்கிறது.]

★

அன்று என் தம்பி அரட்டைக் கல்வி பாலுவுக்கு ஒரே வயிற்று வலி! வயிற்று வலிக்கு என்ன காரணம் என்பது எனக்கும் தெரியும், பாலுவுக்கும் தெரியும். பக்கத்து ஹோட்டலில் ஒரே சமயத்தில் ஒரு ரூபாய்க்கு இட்லியும் சாப்பாடுமாக 'மொக்கினால்' வயிற்றை வலிக்காமல் பின் என்ன பண்ணும்?

ஆனால் என் தாயாருக்கு அது தெரியாது. நானும் சொல்லவில்லை. ஆகவே, வயிற்று வலி பொறுக்காமல் பாலு கத்த ஆரம்பிக்கவே, அவனை டாக்டர் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போகும்படி என் தாயார் கத்த ஆரம்பித்து விட்டாள். கத்தல் பொறுக்காமல் (தாயாரின் கத்தல்தான், பாலுவின் கத்தல் அல்ல.) பாலுவை அழைத்துக் கொண்டு பக்கத்தில் இருந்த ஒரு டாக்டர் வீட்டுக்குப் போனேன்.

டாக்டரின் இள வயதிலிருந்தும், வர்ணம் அழியாமல் பளபளவென்று மின்னிக்கொண்டிருந்த அவர் போர்டிலிருந்தும் அவர் வைத்தியத் தொழில் ஆரம்பித்து இரண்டு, மூன்று வருஷங்களுக்கு மேலாகாது என்று பட்டது.

பாலுவுக்கு வயிற்றுவலி என்று சொன்னதும் அவர் பாலுவை அதே அறையில் படுதாவினால் மறைக்கப்பட்டிருந்த பாகத்துக்கு அழைத்துக் கொண்டு சென்றார். அதில் ஒரு பெஞ்சும், தலையணையும் போடப்பட்டிருந்தது. டாக்டர் பாலுவைப் பெஞ்சியில் படுத்துக் கொள்ளச் சொல்லி, தொப்புளண்டை பலமா ஒரு குத்து விட்டார். பாலு "ஐயோ" என்று அலறினான்.

"எங்கே வலிக்கிறது, இங்கேயா?" என்று கேட்டார் டாக்டர்.

"இல்லை" என்றான் பாலு.

இந்தப் பதில் டாக்டருக்குப் பெருத்த ஏமாற்றம் அளித்தது என்பது அவர் முகத்தைச் சுளித்துக் கொண்டதிலிருந்து தெரிந்தது. ஆகவே அவர் பாலுவின் வயிற்றில் இன்னொரு இடத்தில் முன்னை விட இன்னும் பலமாகக் குத்து விட்டார்.

"இங்கேயா வலிக்கிறது?"

"இல்லை."

இப்படியாகத்தானே டாக்டர் வயிறு முழுவதும் பலமாகக் குத்தியும் பாலுவுக்கு எங்கே வலிக்கிறது என்று சொல்லத் தெரியவில்லை. ஆனால் முன்னை விடப் பலமாக, "வயிறு வலிக்கிறதே" என்று அழ ஆரம்பித்து விட்டான். வயிற்றில் டாக்டர் அத்தனை குத்துகள் விட்டிருக்கும்போது வலிக்காமல் என்ன பண்ணும்?

வயிற்றில் குத்திக், குத்தி, டாக்டருக்குக் கைதான் வலித்ததோ, அல்லது யோசனை பண்ணுவதற்குத்தான் சற்று அவகாசம் வேண்டியிருந்ததோ, பாலுவின் வயிற்றில் குத்துவதை நிறுத்தி, ஒரு சிகரெட்டைப் பற்றவைத்து, சிறிது நேரம் புகை விட்டார். சிகரெட்டைக் குடித்து முடித்ததும், பாலுவைத் திரும்பிப் படுத்துக் கொள்ளச் சொல்லி முதுகில் ஒவ்வொரு இடமாகக் குத்த ஆரம்பித்தார். குத்து பொறுக்காமல் பாலு அழுதானே யொழிய பாலுவால் எங்கே வலிக்கிறது என்று மாத்திரம் சொல்ல முடியவில்லை.

டாக்டருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. பாலுவை மறுபடியும் திரும்பிப் படுத்துக் கொள்ளச் சொன்னார். கையினால் குத்துவதற்குப் பதில் 'ஸ்டெதாஸ் கோப்'பினால் ஒவ்வொரு இடமாக அமுக்கினார். ஊஹும், அப்பொழுதும் பலன் இல்லை.

காத்திருக்கவில்லை. வரப்போகும் தன் இன்பக் குழந்தைக்காக அவள் சின்னச் சின்ன சட்டைகள் தைக்க ஆரம்பித்து விட்டாள். ஆபீஸிலிருந்து வந்த தன்னைக்கூடக் கவனியாமல் அவள் சட்டை தைத்துக் கொண்டிருப்பதைக் கண்டு பாலசுந்தரம் சந்தோஷத்தில் ஆழ்ந்து விடுவான். தன் குழந்தைக்குச் சட்டை தைக்கும் ஆனந்தத்தில் அவளுக்கு நேரம் போவதே தெரியாது.

"என்ன அதற்குள்ளாகவா வந்து விட்டீர்கள்? நிர்மலாகூட இன்னும் பள்ளிக்கூடத்தி லிருந்து வரவில்லையே? மணி என்ன ஆறு ஆகிவிட்டதா?" என்று அவள் தன் கணவனை ஆச்சரியத்துடன் கேட்பாள்.

"நிர்மலா எப்பொழுதோ வந்துவிட்டாள். நீ என்னையே கவனிப்பதில்லையே? அவளைக் கவனிப்பாயா?......" என்று அன்பும் ஆசையும் பொங்கச் சொல்லுவான் பாலு.

"ஆமாம், உங்களுக்கு எப்பொழுதும் கேலிதான். இதைப் பார்த்தீர்களா?" என்று தான் அன்று முழுதும் கஷ்டப்பட்டுத் தைத்த சட்டை, குல்லாய் முதலியவைகளை அவனுக்குக் காண்பிப்பாள்.

"அப்பா! குழந்தை பிறந்த பிறகு சட்டை தைத்துக் கொள்ளக் கூடாதா?" என்று கேட்டு விட்டு, அவன் ஆசையோடு அவள் கன்னத்தில் ஒரு தட்டுத் தட்டுவான்.

அன்று எல்லாரும், "ஆண் குழந்தையா, பெண் குழந்தையா?" என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். பாலசுந்தரத்துக்கு மனத்திற்குள் ஆண் குழந்தைதான் பிறக்க வேண்டும் என்று ஆசை. ஒவ்வொரு நிமிஷமும் ஆவலோடு நர்ஸை எதிர்பார்த்துக் கொண்டு ஏக்கத்துடன் உட்கார்ந்திருந்தான். அந்தச் சமயத்தில், "அண்ணா! மன்னிக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கு" என்று சொல்லிக் குதித்துக் கொண்டே ஓடி வந்தாள் நிர்மலா.

அப்படியே அவளை அணைத்து முத்தமிட்டான் பாலு. அடுத்த நிமிஷம் அவன் ஆசையெல்லாம் நிராசையாகி விட்டது. தனக்கு ஆண் குழந்தை பிறந்து விட்டது என்று பெருமிதத்துடன் இருந்த பாலு, "என் கல்யாணி என்ன ஆனாள்?" என்று கதற ஆரம்பித்து விட்டான்.

என்ன ஆவது? அந்தப் பொல்லாத காலன் கல்யாணியைக் கொண்டே போய் விட்டான்!

பாலசுந்தரத்துக்கு அந்தக் குழந்தைமேல் சொல்ல முடியாத கோபம் வந்துவிட்டது. "என் கல்யாணியைக் கொல்ல வந்த காலனே!" என்று அவன் அதைப் பார்த்துக் கதறினான்.

★

அன்று அப்படி அழுத அவனுக்கு இன்று ஆராவமுதம் இல்லாவிட்டால் உயிர் வாழ முடியாது போலிருந்தது. குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு, காப்பியை ஆற்றிக் கொண்டிருந்த அவன், "இதோ இருக்கிறாள்" என்ற தன் தாயின் குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். நிர்மலா பயந்துபோய் நின்று கொண்டிருந்தாள்.

தன் தாயின் பக்கத்தில் பயந்துகொண்டு நின்ற நிர்மலாவைப் பார்த்ததும் அவனுடைய பழைய நினைவுகள் எல்லாம் தோன்றி அவன் உள்ளத்தில் விவரிக்க முடியாத வேதனையை உண்டாக்கி விட்டது.

அந்த வேதனையைக் கண்டு தாங்க முடியாமல் தானோ என்னவோ ஆராவமுதம் தன் குஞ்சுக் கைகளால் தன் தந்தையின் முகத்தைத் தடவினான்.

தன் உணர்வுபெற்ற பாலு கரை கடந்து வந்த அன்பை அடக்க முடியாமல், "என் அன்பில் விளைந்த அமுதமே!" என்று ஆராவமுதத்தைத் தழுவிக் கொண்டான்.



வைத்தியர்:— நீங்க நடக்கிறதே இல்லே போலிருக்கு. தினம் இரண்டு மைலாவது நடந்தால்தான் வியாதி தீரும்.

வியாதியஸ்தர்:— "சரியாப் போச்சு! என் உத்தியோகமே தபால் சேவகன் உத்தியோகமாச்சே! தினம் பத்து மைலுக்குக் குறையாமல் நடக்கிறேனே!

டேன். கல்யாணி வந்தவுடன் என்னை நீ மறந்தே போய்விடுவாய், இல்லையா?" என்று சொல்லி விட்டு அவள் வேடிக்கையாக அழ ஆரம்பித்து விட்டாள்.

நிர்மலா எட்டு வயதுப் பெண் ஆனாலும் உலக விஷயங்கள் எல்லாம் தெரிந்தவள் போல் பேசுவாள். அவளிடம் பாலசுந்தரத்துக்கு ஒரு அலாதி ஆசை.

★

ஊருக்கு வந்து இரண்டு தினங்கள் ஆகியும் பாலசுந்தரத்தின் மனத்தில் அமைதி கொள்ளவில்லை. அத்தையும் மாமனும் எவ்வளவுதான் உபசரித்தாலும் அவன் உள்ளத்தில் ஏதோ குறையாக இருந்தது.

"அத்தான்!" என்று எவ்வளவு ஆசையாக அவள் என் மடியில் கிடந்து புரளுவாள்! ஒரு காலத்தில் "உன்னைத்தான் நான் கல்யாணம் செய்து கொள்வேன், அத்தான்!" என்று தன் மழலைச் சொல்லால் என் மனத்தை மகிழ்வித்து வந்த கல்யாணியா இப்பொழுது இரண்டு தினங்களாக என் கண்ணில் படாமலே இருக்கிறாள்?

இப்படி வேதனைப் பட்டுக்கொண்டிருக்கும்போது 'கல்கல்' என்ற பாதசரத்தின் ஒலியைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அதேசமயம் பாலசுந்தரத்தைப் பார்த்த கல்யாணி அசையாது மரம்போல் நின்று விட்டாள். இப்படி இருவரும் எத்தனை நாழி நின்று கொண்டிருந்தார்களோ, தெரியாது. "கல்யாணி!" என்ற குரல் கேட்டதும், "இதோ வந்தேன், அம்மா!" என்று சொல்லிக்கொண்டே அவள் மறைந்து விட்டாள்.


பாலசுந்தரம் எவ்வளவோ கூப்பிட்டும் நிர்மலா ஊருக்கு வர மறுத்துவிட்டாள். ஆகவே அவன் மட்டும் ஊர் திரும்பவேண்டியதாகி விட்டது.

அன்று அவள் என்னை அப்படியே விழுங்கி விடுபவள்போலல்லவா பார்த்தாள்! ஆகா! அந்தப் பார்வையிலேதான் எவ்வளவு குளுமை? அவள் முகத்திலே எவ்வளவு குறுகுறுப்பு; "சோலை மலரொளியோ உனது சுந்தரப் புன்னகைதான்!" என்று பாரதியார் கல்யாணியைப் பார்த்துத்தான் பாடினாரோ! — இப்படி யெல்லாம் அவன் என்னென்னவோ சிந்தனை செய்து கொண்டே தன் வீடு வந்து சேர்ந்தான்.

எவ்வளவோ புயல்களுக்கு மத்தியில் பாலசுந்தரம் கல்யாணியையே கல்யாணம் செய்து கொண்டான். ஆனால் அந்தக் கல்யாண சமயத்தில் தன் தந்தை உயிருடன் இல்லையே என்ற வருத்தம் மட்டும் பாலசுந்தரத்துக்கு இல்லாமற் போகவில்லை.

ஆபீஸில் வேலை பார்த்துவிட்டு, எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியில் சோர்ந்த முகத்துடன் வீட்டுக்கு வரும் பாலசுந்தரத்துக்கு, தனக்காகத் தங்கச் சிலை போல் வாசலில் காத்துக் கொண்டு நிற்கும் கல்யாணியின் வதனம் ஆறுதல் அளிக்கும்.

இப்படியே அவன் செலோன்





தங்கச் சிலை

பகீரதன்

"அன்பில் விளைந்த அமுதமே"

என்று உல்லாசமாகப் பாடிக்கொண்டே பாலசுந்தரம் வீட்டிற்கு வந்தான். அவன் வருகிறான் என்பதைத் தெரிந்துதானே என்னவோ குழந்தை ஆராவமுதம் நிலைப் படியைத் தாண்டி வாசலுக்கு வந்து கொண்டிருந்தான்.

ஆராவமுதம் இரண்டு வயதுகூட நிரம்பாத குழந்தையானாலும் சுவரைப் பிடித்துக் கொண்டு நிற்பான்; மெதுவாகத் தவழ்ந்து தவழ்ந்து வீதிக்குக்கூடப் போய்விடுவான்.

கள்ளங் கபட மில்லாத அந்தக் குழந்தையின் கனிவு ததும்பும் முகத்தைப் பார்த்ததும் கவலை யெல்லாம் காற்றில் பறந்து விடும் என்பார்கள். ஆனால் பாலசுந்தரத்துக்கோ தன் குழந்தையைப் பார்க்கும் போதுதான் இல்லாத கவலை யெல்லாம் வந்து விடும்.

அவன் தெரு வாயிலிலிருந்து குழந்தையை எவ்வளவு ஆவலோடு தூக்கிக்கொண்டு உள்ளே சென்றானோ, அவ்வளவு ஆத்திரத்தோடு, "அம்மா!" என்று இரைந்தான்.

"பாலு!" என்று பதிலுக்குச் சொல்லிக் கொண்டே கையில் காப்பியுடன் வந்தாள் அவன் தாயார்.

தனக்கு வந்த ஆத்திரத்தில் தன் தாயை அப்படியே சுட்டு எரித்து விடுபவன்போல் பார்த்தான் பாலு. கல்லைவோ, கடவுள் எல்லாருக்கும் தெற்றிக் கண் வைக்காத ரகசியம் அப்பொழுதுதான் தெரிந்தது.

"எனக்கு என்னத்துக்குக் காப்பி?" என்று எரிந்து விழுந்தான் பாலு.

"காலையிலே சாப்பிட்டுப் போனவன்; சாயங்காலம் களைப்போடு வருவாயே என்றுதான் காப்பி போட்டு வைத்தேன்."



"நான் களைப்போடு வரப் போகிறேனே என்பதற்காக, என் மகனைக் கொன்றுவிடப் பார்த்தாயே!"

"என் மகனைக் கொன்று விடப் பார்த்தாயே!" என்றதும் பாலுவின் தாயாருக்கு மூச்சே நின்று விடும்போலிருந்தது. "நானா உன் மகனைக் கொன்றுவிடப் பார்த்தேன்!" என்று சொல்லும்போது அவள் குரல் கம்மிற்று.

"தெருவில் ஏராளமான மோட்டார்கள் அடிக்கடி போய்க் கொண்டிருக்கிறதே, அம்மா! அடுத்த வீட்டுப் பையன் மோட்டாரில் அடிபட்டு இன்னும் ஒரு நாள்கூட ஆகவில்லையே, அதற்குள்ளாகவா அதை மறந்து விட்டாய்?" என்று சற்றுச் சாந்தமாகச் சொல்லிக் கொண்டே ஆராவமுதத்தை ஆவலோடு அணைத்து ஒரு முத்த மிட்டான் பாலு.

"அப்பா! இதற்குத்தானா இவ்வளவு கோபம்? காப்பியைச் சாப்பிடு!"

"அது சரி, அம்மா! நீதான் காப்பி போடப் போயிருந்தே. அவள் எங்கே போனாள்?"

"அவளா? அவளுக்கும் உனக்குந்தான் சரி!" என்று அலுப்புடன் சொல்லிக் கொண்டே பின்பக்கம் போனாள் பாலுவின் தாயார்.

★

ஒவ்வொரு வருஷமும் பாலு கோடை விடுமுறையின்போது, தன் மாமன் வீட்டிற்குச் செல்வது வழக்கம். என்ன காரணத்தினாலோ அவன் கடந்த மூன்று வருஷமாகத் தன் மாமன் வீட்டுக்குப் போகவில்லை. இப்பொழுது தன் தாயின் வற்புறுத்தலுக்கு இணங்கி, அவன் மாமன் வீட்டுக்குச் சென்றான் என்றாலும், அவனுடைய மன ஆழத்திலே அங்கு போக வேண்டும் என்ற ஆசையும் இருந்தது.

இந்தச் சமயம் அவன் மட்டும் தனியே போகவில்லை. தன் தங்கை நிர்மலாவையும் அழைத்துக்கொண்டு போனான். அவன் வழியில் அவளைக் கேலி செய்து கொண்டே போனான். "கல்யாணிக்கு இந்த வருஷம் கல்யாணமாம். நீ இப்பொழுது கல்யாணியைப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் அம்மா உன்னை ஊருக்குப் போகச் சொல்லி வற்புறுத்தினாள். நானும் என் மன்னியைப் பார்க்கணுமோ, இல்லையோ! அதனால்தான் நானும் உன்னுடன் புறப்பட்-

ஸ்ரீ சர்ச்சில் :—ஏனாவது, தானாவது? அந்த காந்தியை வெளியில் விட வேண்டாம் என்று அப்பொழுதே சொன்னேன். நீர் கேட்கவில்லை. காந்தியைத்தான் வெளியில் விட்டீர், அந்த ஜின்னாவையாவது பிடித்துச் சிறையில் போட்டீரா?

ஸ்ரீ அமெரி :—ஜின்னாவையா? சிறையிலா? எதற்காக மகாராஜா? ஜின்னா நம் ஆள் அல்லவா?

ஸ்ரீ சர்ச்சில் :—ரொம்ப ஆள்! நீர் தான் மெச்சிக் கொள்ளணும்! இப்பொழுது ஜின்னா வெளியில் இருப்பதால் தானே காந்தி அவரைக் கண்டு பேசுகிறார் என்கிறீர்? இப்பொழுது இருக்கிற நிலையைப் பார்த்தால் இரண்டு பேரும் ஏதாவது சமரசத்துக்கு வந்து விடுவார்களோ என்று பயப்படுவதாக நமது வேவல் துரை எழுதி அனுப்பியிருக்கிறார். இரண்டு பேரில் யாராவது ஒருவர், ஜின்னாவோ, காந்தியோ சிறையில் இருந்தால் இத்தகைய விபரீதம் ஏற்படுமா? இப்பொழுது என்ன சொல்கிறீர்?

ஸ்ரீ அமெரி (சிறிது நேரம் யோசித்து விட்டு ஆனந்தக் களிப்பு மெட்டில் பாட ஆரம்பிக்கிறார்.) :—

இல்லை இல்லை
என்றே சொல்வோம் — இந்த
இல்லை யெனும் பல்லவியை
எந்நாளும் பாடுவோம்

காசினி ஆனாலும் நம்மை—கை
விட்டு நீங்கா தென்று கனவிலும் கருதேன்
வாயில் இல்லையென்ற வார்த்தை
—நமக்கு
எப்பொழுதுந்தான் உண்டு அச்சமே
இல்லை!

ஸ்ரீ சர்ச்சில் :—ஆமாங்காணும்; ஒரு வேளை ஜின்னா நம்மைக் கைவிட்டுக் காந்தியுடன் சேர்ந்துகொண்டால்?

ஸ்ரீ அமெரி :—

காந்தியும் ஜின்னாவும் சேர்ந்து
—ஒருகால்
கருத்தொருமித்துக் கடிதே வந்து
இந்தியா தேசத்தை விட்டு—அப்பால்
நடந்திடு என்றுமே கட்டளையிட்டால்
இல்லை இல்லை என்றே சொல்வோம்.

ஸ்ரீ சர்ச்சில் :—'இரண்டு பேரும் ஒத்துப்போனால் சுயாட்சி கொடுப்போம்' என்று நீர் சொன்ன வார்த்தை என்ன ஆவது?

ஸ்ரீ அமெரி :—

இந்துவும் முஸ்லிமும் சேர்ந்து - ஒத்து
வந்திடும் பட்சத்தில் சுயராஜ்யம் என்று
மந்திரி நான் சொன்னதோர் வார்த்தை
— வெறும் சாக்கன்றி
நிஜமென்று நீர் நினைத்தீரோ?

ஸ்ரீ சர்ச்சில் :—சபாஷ்! அப்படிச் சொல்லும்! அதுதானே பார்த்தேன்! அப்படியானால் பயமில்லை யென்று சொல்லும்!

ஸ்ரீ அமெரி :—துளிக்கூடப் பயமில்லை. இந்தச் சாக்குப் போனால் இன்னும் எத்தனையோ சாக்குகள் கிடைக்கும்.

சிக்குகள் பார்ஸிகள் என்று—இன்னும்
பிரிந்தவர், தாழ்ந்தவர், உயர்ந்தவர்
என்று
ஆயிரமுண்டிங்கு ஜாதி — எனில்
அன்னியர் நமக்கிங்கே என்னவோ
பீதி?


ஸ்ரீ சர்ச்சில் :—சபாஷ்! மந்திரி! ஆனால் தும்பை விட்டு வாலைப் பிடிப்பதைப்போன்ற வைத்தியக்காரத்தனம் வேறு ஒன்றும் கிடையாது. ஆகவே காந்தியும், ஜின்னாவும் ஒன்று சேராமல் இருப்பதற்கு ஏதாவது வழி பண்ணி ஆக வேண்டும்.

ஸ்ரீ அமெரி :—அதைப்பற்றிக் கவலைப் படாதீர்கள். நமக்கு வேண்டியவர்கள் எத்தனையோ பேர் இந்தியாவில் இருக்கிறார்கள். மகாகனம் சீனிவாச சாஸ்திரியார் இருக்கிறார். ஸர் ஸி. பி. ராமசாமி அய்யர் இருக்கிறார். டாக்டர் கரே இருக்கிறார். இன்னும் வீர சவர்க்கர் இருக்கவே இருக்கிறார். அவர்கள் எல்லாம் காந்தியை ஒரு கை பார்க்காமல் சும்மா விட்டு விடுவார்களா? நீங்கள் கவலையற்றுச் சுருட்டுக் குடியுங்கள்.

ஸ்ரீ சர்ச்சில் :—பேஷ்! நீர் இருக்கும்வரை நமக்கு என்ன குறை?

[சுருட்டும் புகை இன்னும் அதிகமாகிறது.]

திரை



"இந்தா, சம்பளப் பணத்தைப் பத்திரமாக வைத்துக்கொள். 'முட்டாள் கையை விட்டுப் பணம் போகும்' என்னும் பழமொழி தெரியுமல்லவா?"

"தெரியுமுங்க. உங்கக் கையை விட்டு என் கைக்கு வரும் போதே அந்தப் பழமொழிதானுங்க நினைவுக்கு வந்தது."



டௌனிங் தெருவில்

வழிப்போக்கன்

இடம்: டௌனிங் தெரு, பத்தாம் நம்பர் வீடு.

காலம்: சாயங்காலம்.

[வீடு பற்றி எரிவது போல் ஒரு அறையிலிருந்து புகை வந்து கொண்டிருக்கிறது. அந்தப் புகைக்கும் காரணமான ஸ்ரீ சர்ச்சில் அந்த அறையின் மத்தியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். பக்கத்தில் இந்தியா மந்திரி ஸ்ரீ அமெரி காணப்படுகிறார்.]

ஸ்ரீ சர்ச்சில் :—மந்திரி! மந்திரி! மந்திரி! எங்கே நம் மதி மந்திரியைக் காணோம்!

ஸ்ரீ அமெரி :—இல்லை மகாராஜா! இதோ இருக்கிறேன். இதோ இருக்கிறேன். இதோ இருக்கிறேன்.

ஸ்ரீ சர்ச்சில் :—யாரை ஏமாற்றலாம் என்று பார்த்தீர்? உம் குரல் இருக்கிறதே ஒழிய உடலைக் காணோமே! உடலை எங்கே விட்டு விட்டுக் குரலை மாத்திரம் எடுத்துக்கொண்டு வந்தீர்?

ஸ்ரீ அமெரி :—இல்லை மகாராஜா! உடலை எங்கேயும் விட்டு விட்டு வரவில்லை. குரல் இருக்கிற இடத்தில்தான் உடலும் இருக்கிறது!

ஸ்ரீ சர்ச்சில் :—பின் ஏன் உம் உடல் நம் கண்ணுக்குத் தெரியவில்லை?

ஸ்ரீ அமெரி :—இப்படி குபு, குபு என்று புகைவிட்டுக் கொண்டிருந்தால் எப்படிக் கண் தெரியும்?

ஸ்ரீ சர்ச்சில் :—சரி, அது இருக்கட்டும். மேற்கொண்டு நம் தர்பாரை ஆரம்பிப்போம். மந்திரி!

ஸ்ரீ அமெரி :— இல்லை, மகாராஜா!

ஸ்ரீ சர்ச்சில் :—என்ன, நீர் இல்லையா?

ஸ்ரீ அமெரி :— இல்லை மகாராஜா! இல்லை, இல்லை என்று சொல்லி வாயில் இல்லையென்று வந்து விட்டது.



ஸ்ரீ சர்ச்சில் :—பரவாயில்லை, மந்திரி! நம் அருமை இந்தியா தேசத்தில் தினம் மூன்று தடவை பசிப்பிணி ஜனங்களைப் பிடித்து வாட்டுகிறதா?

ஸ்ரீ அமெரி :—வாட்டுகிறது, பிரபோ!

ஸ்ரீ சர்ச்சில் :—பசிப்பிணியால் வாடி இறந்து போனவர்களுக்கெல்லாம் வைத்திய உதவி அளிக்கப்படுகிறதா?

ஸ்ரீ அமெரி :—அளிக்கப் படுகிறது, பிரபோ!

ஸ்ரீ சர்ச்சில் :—நம் விரோதிகள் எல்லாம் சிறையில் கிடந்து வாடுகிறார்களா?

ஸ்ரீ அமெரி :— வாடுகிறார்கள், பிரபோ!

[இந்தச் சமயம் ஒரு சேவகன் அங்கு வருகிறான்.]

ஸ்ரீ சர்ச்சில் :—மந்திரி! யார் அங்கே! யாரோ ஆள் வந்து நிற்பதுபோல் சப்தம் கேட்கிறதே!

ஸ்ரீ அமெரி :—யாரப்பா அங்கே!

சேவகன் :—நான் தான் சேவகன்.

ஸ்ரீ சர்ச்சில் :—சேவகா! நீ என்னைத் தேடி வந்த காரணம் யாதோ?

சேவகன் :— மகாராஜா! நமது படைத் தலைவர் வேவல் பிரபு இக் கடிதத்தைத் தங்கள் சமூகத்தில் சமர்ப்பிக்கச் சொன்னார்.

[ஸ்ரீ சர்ச்சில் கடிதத்தைப் படித்து விட்டுத் துள்ளிக் குதிக்கிறார்.]

ஸ்ரீ சர்ச்சில் :—மந்திரி! மோசம் போய் விட்டது! நாசம் வந்து விட்டது!

ஸ்ரீ அமெரி :— நாசமா? மோசமா? ஏன் மகாராஜா! என்ன மகாராஜா!

இதோ என் கட்டுரை

டி. எஸ்.வி.எஸ். ஐ

நான் ஒரு கட்டுரை எழுதி விட்டேன். ஆமாம். கட்டுரை எழுதிய பிறகு பெரிய கஷ்டம் வந்து சேர்ந்தது. 'என்ன தலைப்பு இடுவது என்ற யோசனை வந்து விட்டதாக்கும்' என்று மௌனமாகக் கேட்கிறீர்கள். அது எனக்குத் தெரிகிறது. ஆனால் வாஸ்தவத்தில் அது அல்ல என் கஷ்டம். எனக்கு என்ன புனைப் பெயர் இட்டுக் கொள்ளுவது என்ற பிரமாத யோசனை வந்து விட்டது.

ஏதனாலோ என்ன எழுதினாலும் சொந்தப் பெயரில் பிரசுரிக்கக் கூடாது என்று தோன்றி விட்டது. பிறகு யோசனை செய்தேன். மாடு, ஆடு, ஒட்டை, உடைசல் என்று என்ன வெல்லாமோ மனதில் பெயர்கள் உதித்தன. ஒன்றும் பிடிக்கவில்லை.

அப்பொழுதுதான் அடடா நாம் ஒரு பள்ளிக்கூடத்து வாத்தியாராக இருந்தோமில்லையே என்று தோன்றிற்று. பள்ளிக்கூடத்து ஆசிரியராக இருந்திருந்தால் எனக்கு இப்பொழுது ஏற்பட்ட கஷ்டத்தை மாணவர்களே தீர்த்து வைத்திருப்பார்கள் அல்லவா?

நான் படித்த பள்ளிக்கூடத்தில் ஒரு வாத்தியாருக்காவது 'புனைப் பெயர்' இல்லாமல் இல்லை. இன்றும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. எங்கள் கணக்கு வாத்தியாருக்குப் பெயர் "ஒன் பாயிண்ட் பயில்" என்பது. 'ஒன் பாயிண்ட் பயில்' என்றால் ஒன்றரை என்று அர்த்தம். கணக்கு வாத்தியார் 'ஒன் பாயிண்ட் பயில், ஒன் பாயிண்ட் பயில்' என்று அடிக்கடி சொல்லுவார் போலிருக்கிறது. வாஸ்தவந்தானே கணக்கில் அடிக்கடி வாத்தானே செய்யும்? அதையே வைத்து விட்டார்கள் போலிருக்கிறது என்று நீங்கள் எண்ணலாம். இல்லவே யில்லை. அவருக்குக் கண் கொஞ்சம் ஒன்றரைக் கண். அவ்வளவுதான். கணக்கு வாத்தியாரானதால் அந்த பாஷையிலேயே அவருக்குப் பெயர் வைத்து விட்டோம்.

இன்னொரு வாத்தியாருக்குச் சரீரம் கொஞ்சம் ஸ்தூலம். அவருக்கு 'அரிசி மூட்டை' என்று பெயர் வைத்து விட்டோம். இப்படி அழைத்ததில், இப்பொழுது என்னடா என்றால் அவர்களுடைய சொந்தப் பெயர் மறந்துவிட்டது. இந்தப் பெயர் மட்டும் ஞாபகமிருக்கிறது. அப்படியானால் இந்தப் புனைப் பெயர்களின் மகத்துவம் எவ்வளவு என்று பார்த்தீர்களா?

அதனால்தான் நான் ஆசிரியராக இருந்தால் எவ்வளவு சுலபமாக எனக்குப் புனைப் பெயர் கிடைத்து விடும்? எனக்கு அந்த பாக்கியம் கிடைக்க வில்லையே என்றுதான் வருத்தமாக இருக்கிறது. என்ன செய்ய?

ஆனால் நீங்கள் "இப்போது இப்படிச் சொல்லுவாய். உண்மையில் உபாத்தியாயர் ஆகி விட்டால் பையன்கள் ஒவ்வொருவரும் மறைவிலிருந்து கொண்டு உனக்கு வைத்த 'புனைப் பெயர்' கொண்டு அழைத்தால் ரொம்பக் கஷ்டப்படுவாய். அப்போது தெரியும் உன் மனசு படுகிற பாடு" என்கிறீர்கள்.

அப்படி யில்லை. மாணவர்கள் இட்ட பெயரை நான் ஸ்வீகரித்துக்கொண்டு அதே பெயரில் ஒரு கட்டுரை எழுதி விடுகிறேன் என்று வையுங்கள். அவர்களுக்கு அவமானமாகப் போய் விடும். அன்றையிலிருந்து நம்மையும் கேலி பண்ண மாட்டார்கள் பிள்ளைகள். ரொம்ப பிரியத்தோடு இருக்க ஆரம்பித்து விடுவார்கள்.

இந்த வேதாந்த மெல்லாம் எதற்கு? கடையில் என்ன புனைப் பெயர் போட்டுக் கொள்ளப் போகிறீர்கள் என்கிறீர்களா? ஏதோ என் பெயரிலுள்ள சில எழுத்துக்களைத்தான் போட்டுக் கொள்ளப் போகிறேன்.

"சரி கட்டுரை எங்கே?"

"இன்னும் என்ன? இதோ இவ்வளவு தூரம் எழுதினதுதான் என் கட்டுரை!"



நீதிபதி:—வழக்கில் சம்பந்தப்பட்ட பாருக்கும் இவைந்தக் குட்டிச் சுவருக்கும் எவ்வளவு தூரம் இருக்கும்?

சாட்சி:—வக்கீல் ஐயா இருக்கிற இடம் பாருங்க இலை. என்னுடைய வாசல் இருக்கிற இடம் குட்டிச் சுவருங்க.

காலக்ஷேபம்

சமாராதனை !

ஒரு சிஷ்யனுக்கு, ஆராதனைப் பிரசங்களை வரிசையாகச் சொல்லிவைத்தபின், "சிஷ்யா! இப்பொழுது சொல். எந்த ஆராதனை மேன்மையாகப் படுகிறது?" என்று கேட்டார்.

பசியோடிருந்த சிஷ்யன் :—ஸ்வாமி! எல்லாம் ஒன்றுபட்டதாக இருக்கிறது. எதிலும் சம நோக்கு வேண்டும். ஆனால் நான் விரும்புவது சமாராதனையே!

—ப. சே. ராஜரத்னம்.

★

தெரியாத பதில்

கேசவன் :—இந்த ரயில் எங்கே போகிறது என்று தெரியுமா?

ராமமூர்த்தி (சிந்து யோசித்து) :—எனக்குத் தெரியாது. அது எப்போதும் இங்கேதான் இருக்கிறது.

—என். எம். ராசி.

★

தேசத்துக்காக!

தேசியவாதி :—ஏய், நீ தேசத்திற்காக ஒரு துரும்பெடுத்துப் போட்டதுண்டா?

மற்றவன் :—துரும்பென்னடா? ஒரு கல்லையே தூக்கிப் போட்டிருக்கிறேனே, ஒரு காங்கிரஸ் கூட்டத்தில்!

"தேசத் தொண்டன்"

★

பார்த்துக் கொள்வான்!

பையன் பிரைவேட் உபாத்தியாயருக்குக் கீழ்ப்படியாது எதிர்த்து வாயாடிக் கொண்டிருந்தான்.

அவன் தந்தை (பையனைப் பலமாகத் தண்டித்துவிட்டு) :—ஏய்! என்ன அக்கிரமம்! நான் வரவேண்டுமா என்ன?

பையன் :—வேண்டாம் டாடி! நானே பார்த்துக் கொள்ளுகிறேன்.

எ. கே. பட்டுசாமி.

★

சுயபுத்தித் தொந்தரவு

வந்தவர் :—ஜோசியரே! ஐயா! இப்பொழுதெல்லாம் எனக்கு புத்தி ஒரு நேரம் இருந்தால் மறுநேரம் இல்லீங்க. ஜாதகத்தைக் கொஞ்சம் நல்லாப் பார்த்துச் சொல்லுங்க.

ஜோசியர் : இப்ப நடப்பது ராகு தசையில் சுயபுத்தி. நாலு மாசத்துக்குக் கொஞ்சம் கஷ்டம். உங்களுக்குச் சுயபுத்தி போய் விட்டால் அப்புறம் தொந்தரவே இருக்காதுங்க.

—க. பு. சொக்கலிங்கம்.

போதனை!

கோபாலன் (அழுது கொண்டே) :—அவன் என்னைக் குளத்தில் விழுந்து சாகப் போ போவென்கிறான்.

மாமியார் :—அவன்தான் கோபக்காரனாயிற்றே, அவன் சொன்னபடி கேட்டால்தான் என்ன?

—என். டி. சந்திரசேகரன்.

★

சாமர்த்தியம்!

முதல் திருடன் : இந்த நாயை எதற்காகக் கொண்டு வந்தாய்?

இரண்டாவது திருடன் :—நான் திருடப் போன வீட்டில் ஒன்றும் இல்லே. வெறுங் கையாய் வருவது கூடாதென்று அவர்கள் காவலுக்காக வைத்திருந்த நாயைக் கொண்டு வந்தேன்.

—எம். கே. சண்முகப்பன்.

★

ரொம்ப சரி

உபாத்தியாயர் (பையனைப் பார்த்து) :—அடேய் விநாயகம்! அரையைக் காலால் கூட்டினால் என்ன ஆகும்?

விநாயகம் (சிந்து யோசித்து) :—அரையைக் காலால் கூட்டினால் கால் தேய்ந்து ரத்தம் வரும் ஸார்!

—கே. அமலாதேவி.

★

சரியான இடம்!

ஒரு ஓட்டல் வாசலில் ஒரு போர்டு தொங்கவிடப்பட்டு அதில் பின் வருமாறு எழுதியிருந்தது:—

"இந்த ஓட்டல் மாடியில் பிரபல வைத்தியர் திருவாளர் ஸ்ரீ.........தங்கியிருக்கிறார். இங்கு விஜயம் செய்யும் அனைவரும், அவசியம் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் மேற்படி வைத்தியரைப் பார்க்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

—எம். வி. துரைசாமி.

★

காலண்டர் பஞ்சாங்கம்

மானேஜர் :—அடே! சாமு, ஏண்டா தேதிக் காகிதத்தைக் கிழிக்காமலிருக்கிறாய்; இன்றைக்குத் தேதி 20 ஆகிறது. இன்னும் இரண்டாம் தேதியையே வைத்திருக்கிறாயே?




சாமு :—ஒரே காகிதப் பஞ்சமா இருக்கு. ஆகையினாலே எந்தக் காகிதமா யிருந்தாலும் கிழிக்கக் கூடாதுன்னு நீங்கதானே சொல்லியிருக்கீங்க?

—கே. கருணை.

நான் சொல்கிறபடி செய். போ!" என்று கூறிப் பூனை டைகரின் காதோடு என்னவோ ரகசியம் கூறி அனுப்பியது.



அன்று மாலை, ஜமீன்தார் வீட்டில் ஒரு பெரிய கலவரம் உண்டாயிற்று. ஜமீன்தாருக்கு ஒன்றும் ஓடவில்லை. அவர் ஆசையுடன் வளர்த்து வந்த பஞ்சவர்ணக் கிளியைத் தெருக் கோடிப் பூனை வாயில் கௌவிக் கொண்டு எடுத்தது ஓட்டம். அந்தக் கிளியைப் பூனை கொண்டுபோனதென்



றால் அவர் சும்மா இருப்பாரா? பூனையைப் பிடித்து வரும்படி ஆட்களைத் துரத்தினார். பூனை கிளியுடன் மாயமாக மறைந்து விட்டது. வேலைக்காரர்கள் ஒன்றும் புரியாமல் திகைத்தனர்; இங்கும் அங்கும் ஓடினர்.

இந்தச் சமயத்தில் டைகர், ஒரு தாவுத்தாவிப் பூனை ஓடிய திக்கைக் குறித்து வேகமாய் ஓடியது. சில நிமிஷங்களுக்குள் வாயில் பஞ்சவர்ணக் கிளியுடன் டைகர் இரைக்க இரைக்க ஓடி வந்தது. ஜமீன்தார் டைகரின் சாமர்த்தியத்தை நினைத்துச் சந்தோஷத்தினால் இன்னது செய்வது என்று தெரியாமல் தவித்தார்; ஓடி அதை எடுத்து அணைத்துக் கொண்டார்.

இப்பொழுதெல்லாம் டைகருக்கு ரொட்டி, பிஸ்கத்து, வெண்ணெய் முதலிய தின்பண்டங்களுக்குக் குறைவே இல்லை. ஜமீன்தார் அதனிடம் ரொம்பவும் அன்புடன் இருந்தார். டைகரின் நண்பன் பூனைக்கும் வெண்ணெயும் பிஸ்கத்தும் வேண்டியமட்டும் கிடைத்தன. பேஷான யோசனை சொல்லித் தன்னைக் காப்பாற்றிய பூனைக்குக் கொடுக்காமல் தின்பண்டங்களை டைகர் வேறு யாருக்குக் கொடுக்கும்?





நாலைந்து வருஷங்களுக்கு முன்பு டைகரைப் பார்த்தவர்கள் அதைப் புலி என்றே கூறுவார்கள். அப்பொழுது ஜமீன்தார் வீட்டில் செல்வாக்கும் அதற்கு அதிகமாக இருந்தது. ஜமீன்தார் எங்கே போனாலும் டைகர் அவரது காரில் ஜம் என்று உட்கார்ந்து கொண்டு போகும். இப்பொழுது டைகரை வீட்டில் ஏன் என்று கேட்பார் கிடையாது. ஜமீன்தார் இப்போது புதிய நாய் வாங்கி விட்டார். ரொட்டியும் பிஸ்கத்தும் இப்பொழுதெல்லாம் டைகருக்குக் கிடையாது. எல்லாத் தின்பண்டங்களும் புதிய நாய்க்குத்தான். இதற்கெல்லாம் காரணம் டைகருக்கு வயதாகி விட்டதுதான். கிழ நாயினால் என்ன உபயோகம்?



இப்பொழுது டைகரைப் பார்க்கிறவர்கள் அதை நாயென்றே சொல்ல மாட்டார்கள். அவ்வளவு இளைத்து எலும்புந் தோலுமாக மாறிவிட்டது. அவ்வூர் வைத்தியப் பள்ளிக்கூட உபாத்தியாயர் அந்த நாயை விலைக்குக் கேட்டார். மாணவர்களுக்கு களைப் பற்றிச் சொல்லும்பொழுது ஒவ்வொரு எலும்பையும் பற்றிச் சொல்லுவதற்கு ரொம்பவும் சௌகரியமாயிருக்கும் என்றுதான். ஜமீன்தாரும் டைகரைக் கொடுத்து விடுவதாக உபாத்தியாயரிடம் ஒப்புக் கொண்டார். பக்கத்தில் நின்று இதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த டைகருக்கு அழுகை அழுகையாக வந்தது. அதற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இந்தத் துக்க சமாசாரத்தை அந்தத் தெருக்கோடியிலிருந்த தன் பூனை நண்பனிடம் சொல்லி இதற்கு ஏதாவது ஒரு வழி செய்யவேண்டும் என்று தீர்மானித்தது டைகர்.

டைகரைக் கண்ட பூனை பிரமித்து நின்றுவிட்டது. "என்ன நண்பா, ஏன் இப்படி இளைத்துவிட்டாய்?" என்று கேட்டது. டைகர் தனக்கு நேர்ந்த கஷ்டங்களை யெல்லாம் சொல்லிற்று.

பூனை, "ப்பூ! இவ்வளவுதானே! இதற்காகவா இப்படி வருந்துகிறாய்? இன்றைக்கே உன் எஜமான் உன்னிடம் பிரமாதமான அன்பு காட்டுவார். அதற்கு நான் வழி சொல்லுகிறேன்."

"அது ஒரு நாளும் நடக்காது. எஜமான் என்னைக் கவனிப்பதே கிடையாது. என் ஞாபகமே அவருக்கு இல்லை. ஆகா! என் இளமைப் பருவத்தில் நான் தேக திடத்துடன் இருந்த காலத்தில் எஜமான் என்னிடம் எவ்வளவு அன்பு காட்டினார்! அந்த நாள் இனிமேல் மறுபடியும் வருமா?" என்று கூறித் தேம்பித் தேம்பி அழுதது டைகர்.

"அட அசட்டு நாயே, வயதானதற்காக யாராவது வருந்துவார்களா?

கர்நாடக சங்கீத வித்வான்கள்

சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர்



42. வீணை சேஷண்ணா

மைசூர் ஸமஸ்தானத்தில் மிக்கத் திறமை வாய்ந்த ஒரு வைணிக வித்வான் இவர். இவருடைய வாத்தியத்தை நான் முதன் முதலில் அனுபவித்தது ஸ்ரீரங்கத்தில் இருந்த "ஸங்கீத ஸமாஜம்" என்ற சபையில்தான். இவருக்குப் பக்க வாத்தியமாக மிருதங்கம் துகா ராமப்பா வாசித்தார். இவர் வீணையிலிருந்து உண்டான கம்பீரமான நாதமும், கீர்த்தனம் வாசித்து ஸ்வரத்தைக் கோவையாக வாசித்த மார்க்கமும் எல்லோரையும் பிரமிக்கச் செய்தன. அநேகரின் சாரீர நாதத்தைக் காட்டிலும் இவருடைய வாத்தியத்தின் நாதப் பிரும்மம் காம்பீர்ய முள்ளதாயும் மேன்மையுடையதாயுமிருக்கும்.

ஒரு சமயம் தஞ்சையில் கியாதி வாய்ந்த மிருதங்கம் நாராயணஸ்வாமி அப்பா அவர்கள் தம் வீட்டுப் பஜனையில் வாசிக்க வேணுமென்று கேட்டுக் கொள்ள, அவ்விதமே ஸ்ரீ சேஷண்ணா அவர்கள் அப்பா மிருதங்கத்துடன் அபாரமாக வாசித்து ஜனங்களுக்கு இன்பத்தை ஊட்டினார். அவர் அன்று அப்பா அவர்கள் மிருதங்கத்துடன் கமாஸ் ராகத்தில் "ரவிகுல ஸார்வ பௌமா ராஜா ராமச்சந்திர" என்ற பல்லவியை அபாரமாய் வாசித்தது இன்னமும் என் காதை விட்டகலவில்லை. அப்பா அவர்கள் மிருதங்கமும் இவருடைய வாத்தியமும் ஜோடி விசேஷமாக விளங்கிற்றேயொழிய, வேறு வித்தியாசமே இல்லை. வைணிக வித்வான்களில் ரொம்ப உயர்ந்த யோக்யதையுடனும் கியாதியுடனும் விளங்கி வந்தவர்களில் ஒருவர்.

43. மான்பூண்டியா பிள்ளை

கஞ்சிரா வாத்தியத்திற்கு ஒரு பெரிய கௌரவத்தை அளித்து அதைக் கச்சேரிகளில் உபயோகப் படுத்த வேண்டியது அவசியம்தான் என்பதை முதலில் வெளிப்படுத்தியவர் இவர்தான். எனக்கு இவர் பால்ய முதல் நிரம்பவும் பரிச்சயமுள்ளவர். ஆரம்ப காலத்தில் வேடிக்கையாய் அநேக இடங்களில் சில்லறைப் பாட்டுகளுக்கு வாசித்து வந்தவர். நாளடைவில் இவ்வாத்தியத்தில் முதன்மையான தேர்ச்சியை அடைந்தார். இவருடைய தாள ஞான வலுவினால் நிகரில்லாத பெருமையைப் பெற்றார். பல்லவி ஸ்வரம் பாடுகிற வித்வான்கள், வாத்தியக்காரர்கள் எல்லோரும் இவருடைய வாத்தியத்திற்கு விசேஷ கௌரவம் கொடுத்து இவரைத் தாளத்திற்கு ஆதாரமாக வைத்துக் கச்சேரி செய்து வந்தார்கள். பால்யமுதல் பரமேச்வர விடத்தில் அன்பும், எப்பொழுதும் விபூதி தாரணமும், குருபக்தியும் விசேஷமாய் இவருக்கிருந்து வந்தது.

இவருக்கு வேணுகானம் சரபசாஸ்திரிகளின் வாத்தியத்திலும், தாள ஞான வலுவிலும், உயர்ந்த மதிப்பு இருந்தது. இவர் வாத்தியத்தில் அநேக ஜமீன்தார்களும் தனவான்களும், மைனர்களும் பிரியப்பட்டு, இவரை முக்கிய குருவாக வைத்துக் கொண்டு, வாத்திய அப்பியாசம் செய்து இவரை வெகுவாகக் கொண்டாடியிருக்கிறார்கள். தக்க வித்வான்களுடனும், சாமான்ய யோக்யதை உள்ள வித்வான்களுடனும் சமமாகவே பழகி, அவர்களுடன் வாசித்துப் பெருமையடைந்து வந்தார். லக்ஷக்கணக்கான ரூபாய்களைச் சம்பாதித்துச் சிவனடியார்களுக்கும் பிரேமிகர்களுக்கும் செலவு செய்தார். கடைசியில் காஷாயம் தரித்து மிக்க வைராக்கியத்துடன் சிவத்தில் கலந்த இவருக்கு, வருஷந்தோறும் சிஷ்யர்கள் உத்சவம் செய்து வருகிறார்கள்.

இவருடைய முக்கிய சிஷ்யர்களில் பிரசித்தி பெற்றவர் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி பிள்ளை ஆவார்.



ஸா .... ஸா .... ஸா

சமையல் சங்கீதம் ஆரம்பமாகிவிட்டது

வீட்டு சமையலறைகளின் இருளும், நிசப்தமும் ஒழிந்தன. காமதேனு வந்தது; பொரியலும் சமையலும் பரபரவென்று நடக்கின்றன. ஆகா! என்ன ருசியான லட்டு, ஜாங்கிரி, பேணி, உப்புமா, சொஜ்ஜி பஜ்ஜி! வாருங்கள் வேண்டியமட்டும் சாப்பிடலாம்! கலப்பற்ற, மணமற்ற பொரியல் சாதனமான காமதேனு சமையலுக்கு மிகச்சிறந்தது. ஆரோக்கியமளிக்கும் வைடமின்கள் மிகுந்தது. உயர்தர நெய்யைப் போன்று மணல் மணலாக உள்ள காமதேனு பரிசுத்தமானது, கைபடாதது. 4 காலன், 10 பவுண்டு,5 பவுண்டு கொண்ட சீல் வைத்த டின்களில் விற்கப்படுகிறது. காமதேனுவை உபயோகிப்பதால் சிக்கனமும் உண்டு; நெய், வெண்ணெயைப் போன்ற குணமுள்ளதாயினும் விலையில் மட்டும் மலிவு.



சிறந்த சமையற்காரர்கள்

வேண்டுவது

காமதேனு

வனஸ்பதி

தயாரிப்பாளர் :

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்

மேட்டூர்டாம் — தென்னிந்தியா

KVK .2.T.H.

மாவட்டத்து ஏஜண்டுகள் :
சேஷசாயி பிரதர்ஸ் லிட்.,
திருச்சிராப்பள்ளி.

சோல் விற்பனை ஏஜண்டுகள் :
அங்கோட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிபியூடர்ஸ்
லிட்., 120, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.

வும் நீ உன் தங்கைக்காக இந்த அற்பத் தியாகத்தைக் கூடச் செய்யவில்லையென்றால், மனித ஜன்மம் எடுத்துத்தான் என்ன பிரயோசனம்?

"பார்க்கப் போனால், 'இந்த உலகமே என்னத்திற்கு?' என்று எனக்குத் தோன்றுகிறது. அது இருக்கத்தானே நாம் வாழ்க்கை என்று ஒன்றை ஆரம்பித்து விடுகிறோம்? அந்த வாழ்க்கையில் பந்தமென்றும் பாசமென்றும் பாராட்டிக் கண்ணீர் விடுகிறோம்? இன்பமென்றும் துன்பமென்றும் எண்ணித் தவியாய்த் தவிக்கிறோம்? நீயே சிந்தித்துப் பார்: எல்லாவற்றுக்கும் காரணம் நம்முடைய கற்பனைதான். இந்தத் தொல்லை தொலைவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அந்த வழி துன்பத்தையும் இன்பமாகக் கருதுவதுதான். என்ன, நான் சொன்னதெல்லாம் புரிந்ததா?" என்று கேட்டுக் கொண்டே அவர் தம் ஆசனத்தை விட்டு எழுந்தார்.

நான் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டேன். "எல்லாம் புரிந்தது; ஆனால் நீங்கள்?"

"நான் தற்கொலை செய்து கொள்ள மாட்டேன். பைத்தியக்காரனாகவும் ஆக மாட்டேன். சந்நியாசியாகவும் மாற மாட்டேன். வேறொரு பெண்ணை ஜம்மென்று கல்யாணம் செய்துகொள்வேன். உன்னைக் கல்யாணம் செய்து கொண்டிருந்தால் என்னென்ன இன்பங்கள் அனுபவிப்பேன் என்பதற்குப் பதிலாக, என்னென்ன துன்பங்கள் அனுபவிப்பேன் என்று கற்பனை செய்துகொள்வேன். 'நல்லவேளையாக அந்தத் துன்பங்களெல்லாம் இப்பொழுது நமக்கு இல்லையல்லவா?' என்று எண்ணிச் சந்தோஷப் படுவேன். புது மணப் பெண்ணிடம் நான் அனுபவிக்கும் துன்பங்களைக் கூட இன்பமாகவே பாவித்துக் கொள்வேன். அதை எண்ணி யெண்ணி எனக்குள்ளேயே நான் இன்பம் அனுபவித்துக் கொள்வேன். உன்னைத் தற்செயலாக எங்கேயாவது சந்தித்தால் என் சகோதரிக்குச் சமமாகப் பாவிப்பேன்."

இதற்குமேல் நான் அவரிடம் என்ன பேசுவது, ஹம்ஸா?

★

எனக்கும் அந்த சர்க்கார் உத்தியோகஸ்தருக்கும் கல்யாணமாயிற்று. அவருடைய தம்பியும் என் தங்கையைக் கல்யாணம் செய்துகொண்டு தனிக் குடித்தனம் சென்று விட்டார்.



"என் ஐயா, தோசை எல்லாம் ஒரே மாவாயிருக்கிறதே?"

"ஆமாம்; நீங்கள் கேட்டது மாவு தோசைதானே?"

அவர் சொன்ன முறைப்படி என் • வாழ்க்கையின் இன்ப துன்பங்களைக் கற்பனை செய்து கொள்ள ஆரம்பித்தேன். என் கணவருக்கு என்னைப் பற்றியோ, என் அழகைப் பற்றியோ கவலை ஒன்றும் கிடையாது. அவருடைய கவலையெல்லாம் தம்முடைய குழந்தைகளை நான் சரிவரக் கவனிக்கிறேனா என்பதில் தான் இருக்கிறது. எவ்வளவு மேலான குணம்? என்ன பெருந்தன்மை!

"பரிமளா!" என்று என் கணவர் என்னை அன்புடன் அழைக்கும்போது, அந்த அன்பில் நான் பேரின்பத்தைக் காண்கிறேன். அந்த இன்பத்துக்கு இந்த உலகில் ஈடேது, இணையேது?

என் கணவர் என்னை எதிர்பாராமலே படுக்கை யறைக்குச் சென்றுவிடுவார். பின்னால் நான் பால் கொண்டு போய்க் கொடுப்பதற்குள் அவர் தூங்கி விடுவார். நானும் அவரைப்போல் நிம்மதியாகத் தூங்க வேண்டுமென்பதில் அவருக்கு எவ்வளவு ஆசை?

என் முகத்தை என் கணவர் எப்போதும் மூக்கு முழியற்ற சந்திர பிம்பத்துக்கு ஒப்பிட்டுப் பழித்ததில்லை! கண்களைக் கருவண்டுகளென்றும், கன்னங்களைக் கோவைக் கனிகளென்றும் சொல்லி அவர் என்னை நகைத்ததில்லை. நீயே சொல்லு: நான் அந்த வாலிபரான டாக்டரைக் கல்யாணம் செய்து கொண்டிருந்தால், அவர் என்னை அப்படியெல்லாம் சொல்லிப் பழிக்காம லிருப்பாரா?

சமய சந்தர்ப்பமின்றிச் சதா தம்பதிகளைக் கவனிப்பதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கும் மாமியார், நாத்தனார் முதலியவர்களுடன் குடித்தனம் செய்வதைவிட, இந்த சாது குழந்தைகளுடன் கூடிக் குடித்தனம் செய்வது எவ்வளவோ மேலாயிருக்கிறது. அவை "அம்மா, அம்மா!" என்று தங்கள் அமுத கானத்தால் என்னை அழைக்கும்போதெல்லாம் நான் என்னையே மறந்து இன்ப சாகரத்தில் ஆழ்ந்து விடுகிறேன்.

ஆகக் கூடி அவர் சொன்ன முறையில் நான் வெற்றியைத்தான் காண்கிறேன். இதுதான் என் வாழ்க்கையின் ரகசியம், ஹம்ஸா!

இப்படிக்கு,
உன்னை என்றும் மறவாத,
-பரிமளா.

கடைசியில் ஒரு சம்பந்தம் வந்தது. நாலு பிள்ளைகளுக்குத் தகப்பனுரான பின் தம் மனைவியைப் பிரிந்த ஒருவர், என்னை இளையாளாக அடைய இஷ்டப்பட்டார். அதற்குச் சம்மதித்தால் அவர் தம்முடைய தம்பிக்கு என் தங்கையை வரதட்சிணையில்லாமலே கல்யாணம் செய்து வைப்பதாக வாக்களித்தார். அப்பொழுது என் தந்தை திருவாங்கூர் பாங்கியில் பணம் போட்டு மோசம் போயிருந்த சமயம். மேற்சொன்ன சம்பந்தத்தை நிராகரிப்பதாயிருந்தால் பணம் நிறையத் தேவை. அதற்கு வழியில்லாத அவர் எந்த விதமான முடிவுக்கும் வர முடியாமல் திணறி, எனக்குக் கடிதம் எழுதி என்னை அபிப்பிராயம் கேட்டிருந்தார்.

அந்தக் கடிதத்தைப் படித்ததும் நான் எந்தவிதமான நிலைமையை அடைந்தேன் என்பது இங்கே விவரிக்க முடியாத விஷயம். ஒன்றும் தோன்றாமல் அந்தக் கடிதத்தைக் கொண்டு போய் அவரிடம் கொடுத்தேன். அதைப் படித்த பிறகு அவர் நடந்து கொண்ட விதம் எனக்கு அளவில்லாத வியப்பையும் திகைப்பையும் உண்டாக்கிற்று.

என் கண்களில் கசிந்துவரும் கண்ணீரைக் கண்டதும் அவர், "இதென்ன, பைத்தியமா உனக்கு? ஏன் அழுகிறாய்? கல்யாணமென்றால் யாராவது கவலைப்படுவார்களோ?" என்று கேட்டார்.

இதற்கு நான் என்னடி பதில் சொல்வது? பேசாமல் இருந்தேன். அவரே மேலும் தொடர்ந்து சொன்னார்:

"நான் சொல்வதைக் கேள்: என்னைக் கல்யாணம் செய்து கொண்டால் எவ்வளவு தூரம் இன்பம் அநுபவிக்க முடியும் என்று கற்பனை செய்து கொள்வதற்குப் பதிலாக, எவ்வளவு தூரம் துன்பம் அநுபவிக்க முடியும் என்று கற்பனை செய்து பார். டாக்டரான பின் எனக்கு நிறையக் கேஸ்கள் கிடைத்தால் தான் ஆச்சு. இல்லாவிட்டால் கஷ்டத்துக்குக் கேட்கவேண்டுமோ? அப்படியே கேஸ்கள் தான் நிறையக் கிடைக்கட்டும். அதனாலென்ன? கஷ்டம் தீர்ந்து விடுமோ? ஒரு போதும் தீராது. உன்னிடம் ஒரு நிமிஷமாவது என்னை ஒருவனும் பேச விடமாட்டான். தூங்கும் போதுகூட, 'டாக்டர் ஸார், டாக்டர் ஸார்! ஆபத்து, ஆபத்து!' என்று அலறுவது வந்து கதவை இடிப்பான். இரும்பு மனம் படைத்தவன்கூட அவன் இடிக்கு அசையாமலிருக்க முடியாது. எழுந்து போக வேண்டித்தான் வரும்.



"'இதோ, ஒரு நிமிஷத்தில் வந்து விட்டேன்!' என்றுதான் உன்னிடம் நான் சொல்லிவிட்டுப் போவேன். ஆனால் ஒன்பது மணி நேரத்துக்குப் பிறகுதான் திரும்பி வருவேன். இம்மாதிரி சமயங்களில் உனக்கு எவ்வளவுதான் என்மீது காதல் இருந்தாலும் அது காற்றாய்ப் பறந்துவிடும்."

"இப்பொழுது உன்னை இளையாளாக அடைய விரும்புபவர், வேலையிலிருந்து விலகிய சர்க்கார் உத்தியோகஸ்தர் என்று இந்தக் கடிதத்தில் எழுதியிருக்கிறது. என்னை மறந்து நீ அவரைக் கல்யாணம் செய்து கொண்டால் எவ்வளவு சந்தோஷமாயிருக்கலாம் தெரியுமா? நாள் பூராவும் அவர் உன் பார்வையிலேயே இருந்து கொண்டிருப்பார். அதனாலென்ன, அலுப்பு ஏற்பட்டுவிடுமா? அப்படி ஏற்பட்டால் நாலு குழந்தைகள் இருக்கின்றன. அவற்றின் கள்ளங் கபடமற்ற சேஷ்டைகள் உனக்கு எவ்வளவோ குதூகலத்தைக் கொடுக்கும். என்னைக் கல்யாணம் செய்து கொண்டால் என் அம்மாவும் அக்காவும் செய்யும் சேஷ்டைகள் உனக்கு என்ன குதூகலத்தைக் கொடுக்கும்?

"இன்னொரு விஷயம். கிழவனைக் கல்யாணம் செய்துகொண்டால் சீக்கிரத்தில் விதவையாகி விடுவார்கள் என்று சிலர் சொல்லுவார்கள். நீயே சொல்லு: வாலிபனைக் கல்யாணம் செய்து கொள்கிறவள் மட்டும் விதவையாவதில்லையா? எமனை ஏமாற்றும் வித்தை நமக்குத் தெரியாது. ஏன், எல்லோருக்குந்தான் தெரியாது!

"எல்லாவற்றையும் விட இந்தக் கல்யாணத்தில் இன்னொரு விசேஷம் இருக்கிறது. வாழ்க்கையில் தியாகத்தைப் போல் சிறந்தது வேறு ஒன்றும் கிடையாது. செத்த பிறகும் வாழ வைக்கும் சிறப்பான குணம் தியாகத்தினிடந்தான் இருக்கிறது. அது



இன்பதுன்பம்

விந்தன்



திருச்சி, 4—5—43

அன்புள்ள ஹம்ஸா!

நீ என்னுடன் இரண்டு நாட்கள் தங்கியிருந்தபோதே உன் முகத்தில் ஒருவிதமான ஆச்சரிய பாவம் குடிகொண்டிருந்ததை நான் பார்த்தேன். ஆனால் அந்த ஆச்சரியத்திற்குக் காரணம் என்னவென்று எனக்கு அப்பொழுது ஒன்றும் தெரியவில்லை. இப்பொழுது உன் கடிதத்தைப் பார்த்தபோது தான் அந்தக் காரணம் எனக்குத் தெரிந்தது.

"எந்நேரம் பார்த்தாலும் ஈஸி சேரில் சாய்ந்து கொண்டு, எப்பொழுதும் வாய் ஓயாமல் இருமிக் கொண்டிருக்கும் உனது கணவரை இரண்டு நாள் என்னால் பார்த்துச் சகிக்க முடியவில்லையே, அவரை இரண்டு வருஷமாக நீ எப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்? 'கை நிறைந்த பொன்னைவிடக் கண் நிறைந்த கணவனே மேல்' என்பார்கள். அப்படியிருக்க நீ எப்படி அந்த மனிதரைக் கல்யாணம் செய்து கொண்டாய்? அவருக்குச் செய்யும் சிச்ருஷை போதாதென்று அவருடைய நாலு குழந்தைகளை வேறு கட்டி அழுதுகொண்டிருக்கிறாயே! நிஜமாகவே நீ அவருக்கு மனைவியா யிருக்கிறாயா, அல்லது அவர் வீட்டு வேலைக்காரியா யிருக்கிறாயா?— இத்தனை கஷ்டத்தில் சிக்கிக்கொண்டிருக்கும் நீ எப்பொழுது பார்த்தாலும் எப்படி மலர்ந்த முகத்துடன் இருக்கிறாய்? அந்த ரகசியத்தை எனக்குச் சொல்லித்தான் தீரவேண்டும்" என்றெல்லாம் நீ உன் கடிதத்தில் எழுதியிருக்கிறாய். இதோ, அந்த ரகசியம் என் கதையில் இருக்கிறது:

★

சென்னையில் நான் படித்துக் கொண்டிருந்த போது எனக்கு ஒரு சிநேகிதர் கிடைத்தார். அவர் எனக்கு எப்படிச் சிநேகிதமானார், அப்புறம் எப்படிக் காதலரானார் என்பதைப் பற்றி யெல்லாம் இப்பொழுது நான் எத்தனையோ தடவை நினைத்துப் பார்க்கிறேன்; ஒன்றும் தோன்றவே மாட்டேன் என்கிறது!

வைத்தியப் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்த அவர், ஹாஸ்டல் வாசத்தை விரும்பாமல் ஒரு தனி அறை எடுத்துக் கொண்டு வாசம் செய்து வந்தார். எல்லாக் காதலர்களையும் போல் நாங்கள் கல்யாணம் செய்து கொள்வதென்றும் இல்லா விட்டால் பிராணனை விடுவதென்றும் தீர்மானம் செய்து கொண்டிருந்தோம். ஆனால் இந்தத் தீர்மானத்தை நாங்கள் கைவிடும்படியான ஒரு சந்தர்ப்பம் என் வாழ்க்கையில் நேர்ந்தது.

என்னுடைய தங்கை தங்கமணியை உனக்குத் தெரியும். அவள் குரூபி என்பதையும் நான் உனக்குச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அவளுடைய கல்யாண விஷயத்தில் பெரிய தகராறு இருந்து வந்தது. அழகில்லை என்பதற்காக அவளைப் பார்க்க வந்த வரன் வீட்டுக்காரர்களெல்லாம் கண்ணை மூடிக் கொண்டு வரதட்சிணை கேட்டனர். அப்படிக் கொடுத்தால் அவளுக்கு அழகு தானே வந்து விடுமென்பது அவர்களுடைய நினைப்புப் போலும்!

நீங்கள் எதை விரும்புவீர்கள்



"ஏன், அம்மா அழுகிறாய்? அந்த நகை அவ்வளவும் 25 ரூபாய்க்கு மேல் இராது. அவ்வளவும் தங்க கில்ட் நகை தானே! போனால் போகிறது!" என்று லலிதா சொல்லிக் கொண்டிருந்தாள். கனகசபை சட்டென்று திரும்பித் தன் அறைக்கு வந்தான்.

சிறிது நேரம் கழித்து, அவன் எதிர் வீட்டு வேலைக்காரனை ரகசியமாகக் கூப்பிட்டு ஐந்து ரூபாயை அவன் கையில் கொடுத்தான்.

"இங்கே பார்! நிஜத்தைச் சொல்! உங்கள் எஜமானி வீடு சொந்த வீடா, வாடகை வீடா?"

"வாடகை வீடு!"

"ரொம்ப சந்தோஷம்!" என்று சொல்லி, கனகசபை இன்னும் இரண்டு ரூபாயை எடுத்து அவன் கையில் வைத்தான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"பாங்கில் அவர்களுக்கு எவ்வளவு பணம் இருக்கும்?"

"ஒரு எழவும் கிடையாது. 5000 ரூபாய் கடன்தான் இருக்கு!"

"பின்னே எதற்காக இப்படி வெளி வேஷம் போடுகிறார்கள்?"

"அப்படிக் கேளுங்க, சாமி! அந்தப் பொண்ணு பெரிய பணக்காரனைத்தான் கலியாணம் பண்ணிக் கொள்ளுமாம். அவங்களையும் பணக்காரங்க என்று நினைத்துக் கொள்ளட்டும் என்றுதான் இப்படியெல்லாம் செய்யறாங்க!"

கனகசபை மறுபடியும் மணிபர்ஸைத் தடவிப் பணம் இல்லாததைப் பார்த்து விட்டு, அவனைப் போகச் சொன்னான். அவனுக்கு ஆனந்தம் தாங்கவில்லை.

அடுத்த நாள் காலை, வெளியில் உலாவி விட்டுத் திரும்பிய கனகசபை எதிர் வீட்டு வாசலில் ஒரு கார் நிற்பதையும், ஒரு கனவானும் ஸ்திரீயும் உள்ளே போவதையும் பார்த்து விட்டு ஓட்டமாக ஓடிவந்தான். அவ் வீட்டிற்குள் நுழையும்போது, அந்த கனவான் லலிதாவைப் பார்த்து,

"ஏன், அம்மா! இந்தத் தெருவிலே கனகசபை என்று எங்கள் பையன் இருக்கிறான். அவன் விலாசம் தெரியுமோ?" என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

"ஓ! தெரியுமே! இதோ எதிர் அறையில்தான் குடியிருக்கிறார்!" என்றாள் லலிதா. இதற்குள் கனகசபையைப் பார்த்து விட்ட அந்த அம்மாள் ஓடி வந்து,

"கனகசபை! ஏண்டா இப்படிப் போய்விட்டாய்? என்ன கோலமடா இது? கனத்தூர் ஜமீன்தாருக்குப் பிள்ளையாகப் பிறந்து, உன் தலையிலே இப்படியாடா எழுதியிருக்கணும்?" என்று குழந்தையை அணைத்தாள்.

"ஒரு மாதமாய்க் கடிதம் போடாமல் இருந்தால் என்னடா அர்த்தம்? புத்தி கித்தி இருக்கிறதோ இல்லையோ?" என்றார் ஜமீன்தார்.

ஃ ஃ ஃ

சில மாதங்களுக்குப் பின்னர், ஒரு நாள் காலை கனகசபை வழக்கமாகச் செய்யும் சிரஸாசனம் செய்து கொண்டிருந்தான். "இப்பொழுது உலகம் சரியாயிருக்கிறதா?" என்று கேட்டுக் கொண்டே வந்தாள் ஸ்ரீமதி லலிதா கனகசபை.

"உலகம் சரியாயிருக்கிறது. ஆனால் நீதான்......" என்றான் கனகசபை.

"ஆமாம்; இத்தகைய உத்தமரை, லட்சியவாதியை, தேசபக்தரைக் கணவனாக அடைந்திருக்கும்போது நான் என் தலை கீழாய் நிற்கமாட்டேனா?" என்றாள் லலிதா!



"இந்தாங்க! ஒண்ணு இப்படி சாலையை விட்டு ஓராமா ஒதுங்கி வாங்க! இல்லேன்னு, அந்தச் சோத்து மூட்டையையாவது என்கிட்டக் கொடுத்திடுங்க!"

தலைகீழ்ப் பாடம்!

ஸ்ரீ எஸ். கனகசபை பி. ஏ., பி. எல். அவர்களைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. நவீன சமதர்மக் கட்சியின் நிரந்தரப் பொதுக் காரியதரிசியாக இருந்தபடியாலும், வாரத்தில் மூன்று பொதுக் கூட்டங்களில் அவன் கட்டாயம் பேசி வந்தபடியாலும், யாரும் அவனைத் தெரிந்து கொள்ளாமல் இருக்க முடியவில்லை. அந்தப் பொதுக் கூட்டங்களில் எல்லாம் உலகம் தலை கீழாய்ப் போனதைப் பார்க்கச் சொல்லி, அவன் மகாஜனங்களை அறை கூவி அழைத்துக் கொண்டிருந்தான். "ஆஹா! உலகம் எவ்வளவு தலைகீழாய்ப் போய்விட்டது. பாருங்கள்! நாள் முழுதும் உழைப்பவனுக்கு அரை வயிறு சோறு இல்லை. ஒரு துரும்பை எடுத்துப் போடாத முதலாளிகளுக்குக் கொள்ளை லாபம்!"— இம்மாதிரி யெல்லாம் தலைகீழ் உலகத்தைப் பல்லவியாக வைத்துக் கொண்டு, அவன் தக்க உதாரணங்களை அடுக்கிக் கொண்டு போவான். அவனுடைய பிரசங்கத்தைக் கேட்பதற்கு ஏராளமான ஜனங்கள் கூடுவார்கள்.

கனகசபை சட்டக் கல்லூரியை விட்டு இரண்டு வருஷம் கூட ஆகவில்லை. மேற்கண்டவாறு தலைகீழ் உலகத்தைப் பற்றி அவன் ஆச்சரியப்பட்டுக்கொண்டு இருந்தபோது, அவன் சிநேகிதர்களும் அவனைப் பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண்டுதான் இருந்தார்கள். "ஐயோ, பாவம்! எதற்காக மனுஷன் 'லோ லோ' என்று ஊர் முழுதும் அலைகிறான்? எங்கேயாவது ஒரு வேலை பார்க்கக் கூடாதா?" என்று அவர்கள் ஆச்சரியப் பட்டார்கள். பாட்டாளி மக்களின் படு துயரை நினைத்துக் கனகசபை மனம் கலங்கியபோது, "அட கஷ்டமே! இந்தக் கிழிந்த சட்டையையும் வேஷ்டியையும் போட்டுக்கொண்டு இவன் ஏன் படுதுயரடைகிறான்?" என்று அவன் நண்பர்கள் எல்லோரும் வருந்தினார்கள்.


ஆனால் எல்லோரையும்விட ஆச்சரியமும் வருத்தமும் அடைந்தது யார்? ஆமாம், லலிதாவின் தாயார்தான். எதிர் வீட்டு அறையில் குடியிருந்த பிள்ளையாண்டானைக் காணும் போதெல்லாம், "இப்படியும் ஒரு பிள்ளை உண்டா? பார்த்தால் கண்ணுக்கு லட்சணமாக இருக்கிறான். ஆனால் கோலத்தைப் பார்த்தாலோ கண்றாவியாயிருக்கிறது. ஏன் இங்கே தனியாகக் குடியிருக்கிறான்? சொந்தக்காரர்கள் யாரும் இல்லையா? வேலை ஒன்றும் கிடையாதா?" என்றெல்லாம் வெகு நாட்களாக அவள் மனத்திற்குள் கேட்டு வந்தாள்.

பிறத்தியார் விஷயத்தில் தலையிடும்படி அப்படி ஒன்றும் அந்த அம்மாளுக்குப் புத்தி கெட்டுப் போயிருக்கவில்லை. தன் அருமைப் பெண் லலிதா அடிக்கடி எதிர் வீட்டைப் பார்த்துப் பெருமூச்செறிவதையும் ஏதோ மௌன வேதனை அனுபவிப்பதையும் பார்த்து விட்டுத்தான் அவ்வாறு கேட்டு வந்தாள். கனகசபையைப் பற்றி விசாரித்துப் பார்த்ததும் அவளுக்குத் 'திக்'கென்றது. அவன் வேலையற்றவன் என்பதையும் பரம ஏழை யென்பதையும் அறிந்ததும் அவளுக்குத் தன் மகளின் பேரில் அளவில்லாத பரிதாபம் உண்டாயிற்று.

தாயாருக்கே இவ்வளவு வருத்தம் ஏற்பட்டிருந்தபோது, பெண்ணுக்குக் கேட்கவா வேண்டும்? ஏற்கனவே கனகசபையைப் பற்றி அவளும் விசாரித்து வைத்துக்கொண்டிருந்தபடியால், அவனைப் பார்க்கும்போதும், அவன் கிழிந்த சட்டையைக் கவனிக்கும் போதும் அவள் உள்ளம் உருகிற்று. "உலகம் தலைகீழாம், மண்ணாங் கட்டியாம்! காசு காக சம்பாதிக்கப் பார்க்காமல் இப்படிச் சோம்பேறியாய்த் திரிவதல்லவா தலைகீழ்ப் பாடமாயிருக்கிறது?" என்று எண்ணி அவள் ஆத்திரம் கொண்டாள்.

கனகசபைக்கு எப்பொழுதும் ஓயாத வேலைதான். வேண்டுமென்றே அவன் காக்கை முதலிய பட்சிகள் மாதிரி இரவு நேரங்களில் அறையில் வந்து தங்குவதும், பொழுது விடிந்ததும் பறந்து போவதுமாயிருந்தான். அவன் இப்படிச் செய்ததற்கு லலிதாவின் முகத்தில்

வஸந்தன்



விரிக்க அவனுக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லாததுதான் முக்கிய காரணம்.

ஏனெனில், தன் அறையின் வாசலில் லைலினைத் திறக்கும்போது, அவனையுமறியாமல் அவன் பார்வை எதிர் வீட்டை நோக்கும். லலிதாவைப் பார்த்ததும் என்ன காரணத்தினாலோ அவன் இருதயம் வேகமாக அடித்துக் கொள்ளும்; மெய்சிலிர்க்கும். துன்பமும் ஏக்கமும் கலந்த ஓர் அதிசய ஆனந்த உணர்ச்சி உண்டாகும். இதனால்தான் அவன் அறைக்கு வருவதை வெகுவாய் ஒத்திப் போடுவது வழக்கம்.

கனகசபை லலிதாவின் பேரில் ஆத்திரம் கொள்வதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. அவளைப் பார்க்கும்போதெல்லாம், "ஆஹா! உலகம் எவ்வளவு தலைகீழாய்ப் போய்விட்டது!" என்று அவன் ஆச்சரியப்படாமல் இல்லை. லலிதாவின் நவநாகரிக ஆடையாபரணங்களைப் பார்க்கப் பார்க்க அவனுக்குப் பெரும் கோபம் உண்டாயிற்று.

லலிதா பெரும் பணக்காரி என்பதையும் அவளது நகைகள் மட்டும் எவ்வளவோ ஆயிரம் பெறும் என்பதையும் அறிந்தபோது கனகசபை அடைந்த ஏமாற்றம் இவ்வளவு அவ்வளவு அல்ல.

வெகு நாட்களாகவே, ஒரு ஏழைப் பெண்ணைத்தான் கலியாணம் செய்து கொள்வதென்று கனகசபை சபதம் செய்திருந்தான். ஏழ்மையின் கஷ்டத்தைத் தெரிந்த பெண்ணாக இருந்தால், அவளும் பொதுஜன சேவையில் பங்கெடுத்துக் கொள்வாளல்லவா? பணக்காரியான லலிதாவை அடைந்தால் என்ன பிரயோஜனம்? அந்தப் பணக்காரி அவன் புரட்சி மனப்பான்மையையே ஒழித்துவிடலாமல்லவா? அவன் லட்சியத்துக்கே அதனால் ஆபத்து உண்டாகலாமல்லவா?

இந்த ஏக்கத்தால் அவன் உடம்பு நாளடைவில் துரும்பாகிக் கொண்டே வந்தது. எதிலும் வேலையே ஓடவில்லை. அறையில் படுத்துக் கொண்டு கார்ல் மார்க்ஸையும் லெனினையும் ஆயிரத்து முப்பதாவது தடவையாகப் படித்துக் கொண்டிருந்தான். நவீன சமதர்மக்கட்சியின் அங்கத்தினர்கள், "காரியதரிசி எங்கே? எங்கே?" என்று தேடினார்கள். சந்திரனில்லாத வானம் போலவும் ஏ. ஆர். பி. இல்லாத நகரம் போலவும் அரசியல் உலகம் கனகசபை இல்லாமல் பாழாயிற்று.

ஃ

ஆனால், வெகு சீக்கிரத்தில் ஒருவரும் எதிர் பார்த்திராத சம்பவம் நடந்தது. ஒருநாள் நடுநிசியில் லலிதாவின் வீட்டில் ஏகக் கூக்குரல் கேட்டது. 'திருடன்! திருடன்!' என்று லலிதா கூக்குரலிட்டாள். அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் உதவிக்கு ஓடினார்கள். கனகசபையும் ஓட்டமாக ஓடினான். ஆனால், அதற்குள் திருடன் நகைப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு போயே போய் விட்டான் என்று தெரிந்தது.

மறுநாள் காலை லலிதாவைப் பார்த்து ஆறுதல் வார்த்தை சொல்லவேண்டும் என்று கனகசபை நினைத்தான். அவ்வாறே அவன் லலிதாவின் வீட்டிற்குள் செல்லும்போது, முன் பக்கத்து அறையில் இரு குரல்களைக் கேட்டு நின்றான்.

சீனவிடமிருந்து ஜப்பானியர்கள் கொரியாவைக் கைப்பற்றி 30 வருஷங்களுக்கு மேலாகிறது. பிரஜா உரிமை என்பதே கொரியர்களுக்குக் கிடையாது. தம் சொந்த அரசாங்கத்திலே பொறுப்புள்ள பதவி எதையும் அவர்கள் வகிக்க முடியாது. வியாபாரங்களெல்லாம் ஜப்பானியக் கம்பெனிகளின் வசம்தான். 'சுயேச்சை', 'கூட்டு முன்னேற்றம்' ஆகியவைபற்றி ஜப்பானியர்கள் எண்ணம் இது தான்.

வெற்றி வழியே விடுதலை

பொறுத்துக் கொள்ள வேண்டும்'' என்று அழுகுரலில் சொன்னான்.

* * *

ஒரு நாள் மைத்ரேய ரிஷி திருதராஷ்டிரன் சபைக்கு வந்தார். அரசன் ரிஷியை வணங்கி வரவேற்றான்.

"பகவானே! வீரர்களும் எனக்குப் பிரிய மக்களுமான பாண்டவர்களைக் குருஜாங்குலத்தில் கண்டீரே, அவர்கள் சுகமா? வனத்திலேயே இருக்க விரும்புகிறார்களா? நம்முடைய குலத்தில் ஸ்நேகம் குறைவடையாமல் இருக்குமா? ஆசீர்வதிக்க வேண்டும்" என்று திருதராஷ்டிரன் முனிவரைக் கேட்டான்.

மைத்ரேயர், "காம்யக வனத்தில் தற்செயலாகத் தருமபுத்திரரைப் பார்த்தேன். வனத்திலுள்ள ரிஷிகளும் அவரைப் பார்க்க வந்திருந்தார்கள். அப்போது நான் ஹஸ்தினபுரத்தில் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் சொல்லக் கேட்டேன். அதனால்தான் நான் இவ்விடம் வந்தேன். நீரும் பீஷ்மரும் உயிருடன் இருக்கும் பொழுது இவ்வாறு நடந்தது யோக்கியமன்று" என்றார்.

பிறகு, சபையிலிருந்த துரியோதனனைப் பார்த்து, "ராஜகுமாரனே! உனக்கு நன்மையைச் சொல்லுகிறேன். பாண்டவர்களை மோசம் செய்யப் பார்க்க வேண்டாம். அவர்கள் மகா சூரர்கள். கிருஷ்ணனுக்கும் துருபதனுக்கும் பந்துக்களானவர்களை விரோதம் செய்து கொள்ள வேண்டாம். சமாதானம் செய்துகொள்" என்றார்.

இவ்வாறு ரிஷி சொன்னபோது, பிடிவாதக்காரனும் மூடனுமான துரியோதனன் தன் தொடையைக் கையால் தட்டிப் புன்னகை புரிந்துப் பூமியைக் காலால் கீறிக்கொண்டு ஒன்றும் சொல்லாமல் வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டு நின்றான்.

மைத்ரேயர் கோபம் கொண்டு துரியோதனனைச் சபித்தார். "இந்த கர்வத்தின் பலனை நீ நிச்சயமாக அடைவாய். பீமனுடைய கதையால் உன் தொடை பிளக்கப்பட்டு யுத்தத்தில் மாள்வாய்" என்றார். திருதராஷ்டிரன் துள்ளி எழுந்து ரிஷியின் காலில் விழுந்தான். "சபிக்காதீர்! பகவானே!" என்றான்.

மைத்ரேயர், "அரசனே! உன் புத்திரன் சமாதானம் அடைந்தால் என் சாபத்தின் பயன் உண்டாகாது. இல்லாவிடில் உண்டாகும்" என்று சொல்லி எழுந்து சபையினின்று வெளியேறினார்.

நல்ல ஆபீஸ்!



"நான் ஊருக்குப் போயிருந்தபோது, ஆபீஸிலே சண்டை சச்சரவு இல்லாமல் நிசப்தமாக இருந்ததா?"



"ஓ! ரொம்ப நிசப்தமாக இருந்தது!"



"ரொம்ப ஆச்சரியமாயிருக்கிறதே! எப்படி அவ்வளவு நிசப்தமாயிருந்தது?"



"ஒருவரும் ஆபீசுக்கு வரவில்லை. அதனால்தான்."

வஞ்சிக்கப்பட்டான். உம்முடைய குமாரர்களைக் கெட்ட வழியிலிருந்து திருப்புவது உம்முடைய கடமையல்லவா? உம்மால் கொடுக்கப்பட்ட ராஜ்யத்தைப் பாண்டு புத்திரர்கள் அடைந்து அனுபவிக்க நீர் ஏற்பாடு செய்ய வேண்டும். யுதிஷ்டிரனை வனத்திலிருந்து திரும்பி வரச் செய்து சமாதானம் செய்யும். துரியோதனன் உம்முடைய ஆலோசனையைக் கேட்காவிட்டால் அவனை அடக்க வேண்டும்" என்று விதுரன் பலதடவை திருதராஷ்டிரனுக்குச் சொன்னான்.

முதலில் இவ்வாறு சொல்லும்போது திருதராஷ்டிரன் சும்மா கேட்டுக்கொண்டிருப்பான். விதுரனுடைய அறிவு மேலானது என்று திருதராஷ்டிரனுக்கு அவனிடத்தில் பூரண மதிப்பு.

ஆனால் வரவரப் பொறுமையை இழந்தான்.

ஒரு நாள், "விதுரனே! நீ எப்போதும் பாண்டவர்களைப் பற்றிச் சாதகமாகவும் என் மக்களைப் பற்றி விரோதமாகவுமே பேசுகிறாய். நீ எனக்கு சத்ருவென்றே தோன்றுகிறது. எங்கள் நன்மையை நீ விரும்பவில்லை. துரியோதனன் என் தேகத்திலிருந்து உண்டானவன். அவனை நான் எவ்வாறு விட்டுவிட முடியும்? நியாயமில்லாமலும் இயற்கைக்கு விரோதமாகவும் யோசனை சொல்லுவதில் என்ன பயன்? இனி நான் உன்னை நம்ப முடியாது. நீ எனக்கு இனிமேல் வேண்டியதில்லை. உனக்கு இஷ்டமானால் பாண்டவர்கள் இருக்குமிடம் நீயும் போகலாம்" என்று கோபமாகச் சொல்லிவிட்டு விதுரனுடைய மறுமொழிக்குக்கூடக் காத்திராமல் திருதராஷ்டிரன் எழுந்து அந்தப்புரம் போய்விட்டான்.

"இனி இந்தக் குலம் நாசமே" என்று விதுரன் தீர்மானித்துக்கொண்டு வேகமான குதிரைகள் பூட்டிய ரதத்தில் ஏறிப் பாண்டவர்கள் இருந்த வனத்துக்குச் சென்றான்.

* * *

விதுரன் நகரத்தை விட்டுப் போனதும் திருதராஷ்டிரன் மறுபடி கவலை அடைந்தான். "என்ன செய்தேன்! பாண்டவர்களுடைய பலத்தை இன்னும் அதிகரித்து விடும்படியான வழியைத் தேடினேனே! விதுரனைத் துரத்தியது பெருந் தவறு" என்று நினைத்துச் சஞ்சயனைக் கூப்பிட்டு, "சஞ்சயனே! நான் என் பிரிய சகோதரனைத் தகாத சொல் சொல்லி விட்டேன். அவன் கோபங்கொண்டு வனம் சென்று விட்டான். நீ உடனே போய் விதுரனைக் கண்டு சமாதானம் சொல்லி அழைத்து வா!" என்றான்.

சஞ்சயன் விரைவிலேயே சென்றான். வனத்தில் பாண்டவர்கள் இருந்த ஆசிரமத்தை அடைந்தான். பாண்டவர்கள் மான் தோல் உடுத்தி ரிஷிகளுடன் இருந்ததைப் பார்த்தான். அவ்விடம் விதுரன் இருப்பதையும் கண்டான். திருதராஷ்டிரன் தான் விதுரனுக்குச் செய்த குற்றத்திற்குப் பச்சாத்தாபப்படுவதைத் தெரிவித்தான்.

"நீர் திரும்பாமற் போனால் திருதராஷ்டிரன் உயிர் நீப்பான். சீக்கிரம் பாண்டவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு அரச சபையைச் சேருவீராக" என்று வணக்கமாகச் சஞ்சயன் விதுரனிடம் சொன்னான்.

இந்தச் செய்தியைக் கேட்டதும் தருமமே உருவான விதுரன், யுதிஷ்டிரனிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டு ஹஸ்தினாபுரம் திரும்பி அடைந்தான்.

திருதராஷ்டிரனும் விதுரனைக் கட்டித் தழுவிக்கொண்டு, "குற்றமற்றவனே! என்னால் அவசரத்தில் சொல்லப்பட்ட பேச்சை நீ



யாரும் வெல்ல முடியாது. இது அறிவுடையோரின் அபிப்பிராயம். இதை நான் அறிந்திருந்தாலும் என்னைச் சரணடைந்த திருதராஷ்டிர புத்திரர்களை நான் விட்டுவிட முடியாது. அவர்களுக்கு என்னால் கூடிய அளவு முழு மனத்தோடும் அன்போடும் உதவி செய்வேன். ஆயினும் விதி மிக்க வலிமையுடையது. பாண்டவர்கள் வனவாசம் முடிந்து கோபத்தோடு திரும்பி வருவார்கள். துருபதன்மேல் உண்டான கோபத்திற்காக நான் அவனை ராஜ்யத்திலிருந்து தள்ளி அவமானப் படுத்தினேன். என்னைக் கொல்லுவதற்காகவே ஒரு புத்திரனை வேண்டி யாகம் செய்து துருபதன் திருஷ்டத்யும்னனைப் பெற்றிருக்கிறான். அவன் பாண்டவர்களுக்கு நெருங்கிய பந்துவும் சிநேகிதனும் ஆய்விட்டான். என்னைக் கொல்லுவதற்காகவே அவனுக்கும் பாண்டவர்களுக்கும் சிநேகமும் சம்பந்தமும் விதி வசமாக ஏற்பட்டிருப்பதாக உலகத்தார் எல்லாரும் பேசி வருகிறார்கள். நீங்கள் செய்துவந்த காரியங்களெல்லாம் அந்தப் பேச்சை உண்மையாக்குவதாகத்தான் இருக்கிறது. உங்களுடைய நாள் கிட்டி வருகிறது. காலதாமதம் செய்யாமல் உங்களுடைய நன்மையைச் செய்து கொள்ளுங்கள். பெரிய யாகங்களைச் செய்யுங்கள். சுகங்களை அனுபவித்து விடுங்கள். தானங்களைக் கொடுங்கள். பதினான்காவது வருஷத்தில் ஆபத்து வரப்போகிறது. துரியோதனா! நான் சொல்லுவதைச் சொன்னேன். பிறகு உன் இஷ்டம். தரும புத்திரனோடு சமாதானம் செய்துகொள்'' என்றார்.



துரியோதனனுக்குத் துரோணர் சொன்னது கொஞ்சமும் பிடிக்கவில்லை.

* * *

“பூமிக்கு அதிபதியே! ஏன் துயரப்படுகிறீர்?'' என்று திருதராஷ்டிரனைச் சஞ்சயன் கேட்டான்.


"பாண்டவர்களைப் பகை செய்துகொண்டபிறகு துயரமின்மை ஏது?'' என்றான் கண்ணில்லாத அரசன்.

சஞ்சயன், "நீர் சொல்லுவது உண்மையே. கெட்டுப் போகவேண்டியவனுடைய மதி அழிந்து போகிறது. நல்லவை யெல்லாம் தீயவை போலும் தீயவை எல்லாம் நல்லவை போலும் அவனுக்குத் தோன்றும். காலமானது ஒரு தடியை எடுத்து மனிதன் தலையை உடைப்பதில்லை. காரியா காரியங்களை மாறாக அவனையே செய்யச் செய்து மனிதனைப் பள்ளத்தில் தள்ளுகிறது. உம்முடைய பிள்ளைகள் பாஞ்சாலியை அவமானப் படுத்தினார்கள். தங்கள் நாசத்தைத் தாங்களே தேடிக்கொண்டார்கள்'' என்றான் சஞ்சயன்.

"அறிவாளியான விதுரன் தருமத்துக்கும் ராஜநீதிக்கும் ஒத்த சொல்லைச் சொன்னான். நான் அதைக் கேட்கவில்லை. மூட மகனுடைய விருப்பத்தை அனுசரித்தேன்; நாம் ஏமாந்தோம்'' என்றான் திருதராஷ்டிரன்.

* * *

அடிக்கொருதரம் விதுரன் திருதராஷ்டிரனை வற்புறுத்துவான்: "உம்முடைய மகன் பெரும் பாவம் செய்தான். தருமபுத்திரன்





திருதராஷ்டிரன் கவலை

பாண்டவர்கள் வனம் செல்லப் புறப்பட்டபோது வீதிகளில் ஜனங்கள் நிறைந்து நடக்க இடமில்லாமலிருந்தது. மாளிகைகளிலும் தேவாலயங்களின் கோபுரங்கள் மேலும் மரங்கள் மேலும் ஜனங்கள் ஏறி உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஸ்திரீகள் உப்பரிகைகளிலும் பலகணிகள் வழியாகவும் பார்த்துக்கொண்டிருந்தனர். குடையுடனும் வாத்தியத்துடனும் பவனி செல்லவேண்டிய தரும புத்திரன் மரவுரியும் தோலும் உடுத்துக் கால் நடையாக வனம் செல்கின்றதைப் பார்த்து நகரத்து ஜனங்கள் எல்லாரும் துக்கமடைந்தார்கள். "ஆ! ஆ!" "ஓ! ஓ!" என்று சொல்லிக் கண்ணீர் சொரிந்தனர்.

திருதராஷ்டிரன் விதுரனுக்குச் சொல்லியனுப்பினான். "விதுரா! பாண்டு புத்திரர்களும் திரௌபதியும் எப்படிச் செல்கின்றனர்? கண்ணால் பார்த்துத் தெரிந்துகொள்ள இயலாதவனுக்கு நீ சொல்லவேண்டும்" என்று கேட்டான்.

விதுரன், "குந்தி புத்திரனான யுதிஷ்டிரன் துணியினால் முகத்தை மூடிக் கொண்டு போகிறான். பீமன் தன் கைகளிரண்டையும் பார்த்துக்கொண்டு போகிறான். அர்ச்சுனன் மணலை எடுத்துத் தூவிக்கொண்டு போகிறான். நகுல சகதேவர்கள் உடலெல்லாம் புழுதி பூசிக்கொண்டு தருமராஜாவின் பின் போகின்றனர். திரௌபதி விரிந்த கூந்தலினால் முகம் முழுதும் மூடியவளாகக் கண்ணீர் சொரிந்துகொண்டு தரும புத்திரன் பின் செல்லுகிறாள். புரோகிதர் தௌம்மியர் யமனைப் பற்றிய ஸாம கீதங்களை ஸ்வரத்துடன் பாடிக்கொண்டு கூடச் செல்லுகிறார்" என்றான்.

இதைக் கேட்ட திருதராஷ்டிரனுக்கு முன்னைவிட அதிகமான பயமும் கவலையும் உண்டாயின. "நகரத்திலுள்ள ஜனங்கள் என்ன சொல்லுகிறார்கள்?" என்று மறுபடியும் கேட்டான்.

"மகாராஜாவே! எல்லா வருணத்தாரும் சொல்லும் சொற்களைச் சொல்லுகிறேன், கேளும்! 'நம்முடைய நாயகர்கள் நம்மை விட்டுப் போகின்றனரே! குரு வம்சத்துப் பெரியோர்களெல்லாம் அறிவடையாத பாலர்களைப் போல் நடந்துகொண்டார்களே! ஓ! ஓ! துராசை கொண்டு பாண்டு புத்திரர்களைத் திருதராஷ்டிரன் காட்டுக்கு அனுப்பினான்' என்று நகரத்து ஜனங்கள் எல்லாரும் நம்மை ஏசுகிறார்கள். ஆகாயத்தில் மேகமில்லாமலே மின்னல்கள் உண்டாயின. பூமியும் நடுங்கிற்று. இதைப் போன்ற வேறு கெட்ட உற்பாதங்களும் தோன்றின" என்றான்.

இவ்வாறு திருதராஷ்டிரனும் விதுரனும் பேசிக்கொண்டிருந்த பொழுது நாரதர் திடீரென்று பிரசன்னமானார். "இன்றைக்குப் பதினான்காவது வருஷத்தில் துரியோதனன் செய்த பிழையினால் கௌரவர்கள் அழியப் போகின்றனர்" என்று திருதராஷ்டிரனுக்குச் சொல்லிவிட்டுத் தேவரிஷி மறைந்தார்.

துரியோதனனும் அவன் சகாக்களும் பயமடைந்து துரோணரிடம் சென்றார்கள்.

"ஆசாரியரே! ராஜ்யமெல்லாம் உமது! நீரே தஞ்சம். எங்களைக் கைவிடலாகாது" என்று அவரைக் கெஞ்சினார்கள்.

இதைக் கேட்ட துரோணர், "பாண்டவர்கள் தேவர்களின் அம்சம். அவர்களை




கப்பல் மார்க்கு

தேயிலையும், காப்பியும்

குணத்திலும் மணத்திலும் சிறந்தது. எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

Indian Tea & Coffee Co.,

52, BUNDER STREET :: G. T. MADRAS. GPS.



குழந்தைகளுக்கு ஆரோக்கியத்துடன் தேக புஷ்டியையும் முக மலர்ச்சியையும் கொடுப்பது பெரீஸ் பிஸ்கட்டுகள் என்று ஒவ்வொரு தாய் தந்தையர்களும் அறிந்திருப்பதால் அவர்கள் எப்பொழுதும் பெரீஸ் பிஸ்கட்டுகளையே விரும்புகிறார்கள்.

பெரீஸ்

பிஸ்கட்ஸ்

குழந்தைகளை போஷித்து வளர்க்கும் ஆகாரம்

சிற்றுண்டிகளுக்கு சிறந்ததோர் உணவு

PERRY & CO. Biscuits Manufacturers. Usilampatti

காந்தி மலர் 2.

'பெண்களுக்கு'

பெண்கள் சம்பந்தமாகவும், அவர்கள் செய்யவேண்டிய சேவை, கடமை ஆகியவை பற்றியும் அவர்களுக்குரிய உரிமை, மேன்மை ஆகியவை பற்றியும் காந்திஜி இந்தப் புத்தகத்தில் நன்கு விளக்கி இருக்கிறார். 'மாணவருக்கு' என்ற புத்தகத்தை தமிழில் மொழி பெயர்த்த வெ. ராமசாமி, அ. வெ. நடராஜன் ஆகிய இருவருமே இந்தப் புத்தகத்தையும் மொழி பெயர்த்து இருக்கிறார்கள்.

கதர்ப் பைண்டு—அழகிய பதிப்பு
காந்திஜியின் படமும் சேர்ந்தது

விலை ரூ. 6/-

புதுமைப் பதிப்பகம்

பூரண விற்பனை உரிமையாளர்:

நவயுகப் பிரசுராலயம்

காரைக்குடி.



பேபி பிராண்டு நெய்

சுவைக்கும்
சுகத்திற்கும்
போஜனத்திற்கும்
உத்தமமானது.

ராஜம் & கோ., கோயமுத்தூர்



லும், எனக்கு முன்னால் சிவகாமி தேவியின் புகழ் போயிருக்கக் கண்டேன். காஞ்சியிலிருந்து நான் வந்ததாகத் தெரிந்ததும் எல்லாரும் சிவகாமி தேவியின் பரத நாட்டியக் கலையைப் பற்றியே கேட்டார்கள். புத்த பிக்ஷுக்களும் ஜைன முனிவர்களும் கேட்டார்கள். சைவப் பெரியார்களும் வைஷ்ணவ பக்தர்களும் கேட்டார்கள். உறையூரில் சோழ மன்னன் கேட்டார்; மதுரையில் பாண்டிய மன்னர் கேட்டார். சிதம்பரத்திலே சிற்பிகள் கேட்டார்கள்; நாகப்பட்டினத்திலே சீன தேசத்திலிருந்து வந்திருக்கும் சித்திரக்காரர்கள் கேட்டார்கள். ஆயனரே! உம்முடைய அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். இப்பேர்ப்பட்ட கலைச் செல்வியைப் புதல்வியாகப் பெற நீர் எவ்வளவோ பாக்கியம் செய்திருக்க வேண்டும்......!"

இவ்வாறு, புத்த பிக்ஷு சொன்மாரி பொழிந்து வருகையில் ஆயனரும் சிவகாமியும் இடையில் பேசச் சக்தியற்றவர்களாய்ப் பிரமித்து நின்றார்கள்.

கடைசியில், நாகநந்தி "ஓ! மகா சிற்பியே! சென்ற எட்டு மாதத்திற்குள் சிவகாமி தேவியின் நடனத் திறமை இன்னும் எவ்வளவோ வளர்ந்திருக்க வேண்டுமே? தென்னாடெல்லாம் புகழும் நடன ராணியின் நாட்டியத்தைப் பார்க்கும் பாக்கியம் இன்று எனக்குக் கிட்டுமா?" என்றார்.

நாகநந்தியின் விஷயத்தில் சிவகாமியின் மனம்கூட அவருடைய புகழுரைகளினால் சிறிது மாறித்தான் போயிருந்தது.

எனவே, ஆயனர் அவளை நோக்கி, "ஆடுகிறாயா, அம்மா!" என்று கேட்டதும், உடனே, "ஆகட்டும், அப்பா!" என்றாள்.

* * *

மூவரும் வீட்டுக்குச் சென்றதும், சிவகாமி ஒரு நொடியில் நடன உடை தரித்துக் கொண்டு நாட்டியத்துக்கு ஆயத்தமாக வந்து நின்றாள்.

அவளுடைய முகத்திலும் மேனி முழுவதிலுமே ஒரு புதிய ஆனந்தக் கிளர்ச்சி காணப்பட்டது. மாமல்லரின் காதல் கனிந்த மொழிகளும், அவளுடைய கலைச் சிறப்பைக் குறித்து நாகநந்தி கூறிய புகழ் மொழிகளும் அத்தகைய ஆனந்தக் கிளர்ச்சியை உண்டு பண்ணியிருந்தன.

"என்ன ஆடுகிறாய், அம்மா?" என்று ஆயனர் கேட்டதற்கு, "நிருத்தம் ஆடுகிறேன், அப்பா!" என்று சிவகாமி கூறினாள்.

ஆயனர் போட்ட தாளத்துக் கிசைய நிருத்தம் ஆரம்பமாயிற்று.

பாட்டு இல்லை, பொருள் இல்லை, உள்ளக் கருத்தை வெளியிடும் அபிநயம் ஒன்றும் இல்லை.

ஒரே ஆனந்த மயமான ஆட்டந்தான்.

சிவகாமியின் ஒவ்வொரு அங்கத்திலும் ஒவ்வொரு அங்கத்தின் அசைவிலும் அந்த ஆனந்தம் பொங்கி வழிந்தது.

ஆஹா! அந்த ஆனந்த நடனத்திலே எத்தனை வித விதமான நடைகள்?

மத்த கஜத்தின் மகோன்னதமான நடை, பஞ்ச கல்யாணிக் குதிரையின் சிருங்கார நடை, துள்ளி விளையாடும் மான் குட்டியின் நெஞ்சை யள்ளும் நடை, வன மயிலின் மனமோகன நடை, அன்னப் பட்சியின் அமுதம் ஒழுகும் நடை — இவ்வளவு நடைகளையும் சிவகாமியின் ஆட்டத்திலே காணக்கூடியதா யிருந்தது.

ஆட்டம் ஆரம்பித்துச் சிறிது நேரத்துக்கெல்லாம் சிவகாமி நடனம் ஆடுவதாகவே தோன்றவில்லை. தன் செயல் என்பதையே இழந்து அவள் ஆனந்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருப்பதாகவே தோன்றியது. ஆயனரும் தன்னை மறந்து, கால எல்லையையெல்லாம் கடந்த காலாதீதமான மனோ நிலைக்குப் போய்விட்டார்.

யும் போராடின. முடிவிலே, காதல் தான் வெற்றி பெற்றது.

"ஆகா! எத்தகைய பேதை நாம்! மகிதலம் போற்றும் மண்டலாதிபதியின் குமாரரிடம் காதல் கொள்ளத் துணிந்துவிட்டு, அவருடைய கௌரவத்துக்குப் பங்கம் விளையக் கூடிய காரியத்தைச் செய்தோமே?" என்று பச்சாத்தாபப் பட்டாள். இனிமேல், பல்லவ குமாரரின் விருப்பந் தெரியாமல் காஞ்சிக்கே போவதில்லையென்று தீர்மானித்தாள். அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியும் வந்தாள்.



இப்போதும் தன்னை மாமல்லர் காஞ்சிக்கு வரும்படி எழுதவில்லை. தாம் நேரிலே வந்து சொல்லும் வரையில் அங்கேயே இருக்கும்படி பணித்திருக்கிறார். அபாயம் எதுவும் நேராது என்று அபயப்பிரதானமும் அளித்திருக்கிறார். பின், எதற்காகத் தான் கவலைப்பட வேண்டும்? அல்லது யோசனை செய்யத்தான் வேண்டும்? இவ்விதமெல்லாம் சிந்தித்து, அப்பா ஒரு வேளை புறப்படலாமென்று சொன்னாலும் அவருடைய மனதை எப்படியாவது மாற்றி, பல்லவ குமாரர் வரும் வரையில் அங்கேயே இருக்கச் செய்ய வேண்டுமென்று சிவகாமி முடிவு கட்டியிருந்தாள். ஆகையினாலேதான் மேற்கண்டவாறு சொன்னாள்.

அதற்கு மறுமொழியாக ஆயனர் கவலை தொனித்த குரலில் கூறினார்:— "ஆமாம், சிவகாமி! ஆமாம்! எனக்கும் இங்கேயே இருப்பதில்தான் இஷ்டம். ஆனாலும், என் மனது ஏனோ நிம்மதியாயில்லை. என்ன இருந்தாலும், மகேந்திர பல்லவர் தீர்க்கமான அறிவு படைத்தவர். அவருடைய கட்டளைக்கு மாறாக நடந்தால் ஏதாவது விபரீதம் வருமோ, என்னமோ? யாரிடமாவது யோசனை கேட்கலாமென்றால், அதற்கும் ஒருவரும் இல்லை. நாகநந்தியடிகளாவது வரக்கூடாதோ? எட்டு மாதத்துக்கு முன்பு போனவர் இன்னும் வரவில்லை. அந்த புத்த பிக்ஷுவுக்கு என்ன நேர்ந்து விட்டதோ, என்னமோ?"

ஆயனரின் மனச் சோர்வைக் கவனித்த சிவகாமி அவரை உற்சாகப் படுத்தும் பொருட்டு, மறுபடியும், "அப்பா! நான் நடனம் ஆடி வெகு காலமாயிற்றே? இன்றைக்கு ஆடுகிறேன்; பார்க்கிறீர்களா?" என்றாள்.

"சிவகாமி தேவியின் நாட்டியத்தை நானும் பார்க்கலாமா?" என்று ஒரு குரல் கேட்டது.

இரண்டு பேரும் ஏக காலத்தில் திரும்பிப் பார்த்தார்கள். சற்றுத் தூரத்தில் நாகநந்தி அடிகள் நின்று கொண்டிருந்தார்.

"புத்தம் சரணம் கச்சாமி"[sic: printed "புத்தம் கச்சாமி"]

"சங்கம் கச்சாமி"

"தர்மம் கச்சாமி"

என்று நாகநந்தி கோஷித்து முடித்ததும் ஆயனர், "அடிகளே! வரவேணும்! வரவேணும்! நினைத்த இடத்தில் நினைத்த போது வந்து அருள் செய்கிறவர் கடவுள்தான் என்று பெரியோர் சொல்வார்கள். தாங்களும் கடவுள் மாதிரி வந்திருக்கிறீர்கள். உங்களைப் பற்றி இப்போதுதான் பேசிக்கொண்டிருந்தோம்" என்றார்.

"அப்படியா? இந்தக் காவி வஸ்திரதாரியைப் பற்றி நினைவு வைத்துக் கொண்டிருந்தீர்களா? சிவகாமி தேவியின் திருநாவினால் கூட நாக நந்தியின் பெயர் உச்சரிக்கப் பட்டதா? அவ்விதமானால் என்னுடைய பாக்யந்தான் ... ஆயனரே! உங்கள் குமாரியின் புகழ் தேசமெல்லாம் பரவியிருக்கும் அதிசயத்தை நான் என்னவென்று சொல்வேன்? திருவதிகைக்கும் தில்லைக்கும் போனேன்; உறையூருக்குப் போனேன்; கருருக்குப் போனேன்; தஞ்சைக்கும் நாகைக்கும் போயிருந்தேன்; இன்னும் தெற்கே, மதுரைப் பதிக்கும் கொற்கைத் துறைமுகத்துக்கும் சென்றிருந்தேன். எங்கே போனா

தும். அவனுடைய முகத்தில் தோன்றிய நாணம் அதன் வனப்பை இன்னும் அதிகமாக்கிற்று.

உடனே மறுமொழி சொல்ல முடியாமல் சிவகாமி சிறிது திகைத்து விட்டு, பிறகு "கமலியைப் பற்றிக் கேட்டதிலிருந்து எனக்கு உற்சாகமாயிருக்கிறது, அப்பா! காஞ்சிக்குப் போய்க் கமலியைப் பார்த்து விட்டு வரலாமா?" என்றாள். உடனே, தான் பிழை செய்துவிட்டதை உணர்ந்து நாவைப் பற்களினால் கடித்துக்கொண்டாள்.

அதற்கு ஆயனர், "கமலியைப் பார்த்துவிட்டு வருவதா, அல்லது காஞ்சியிலேயே தங்கி விடுவதா என்றுதான் தெரியவில்லை. சக்கரவர்த்தியின் விருப்பம்......" என்பதற்குள்,

"ஆமாம், அப்பா! சக்கரவர்த்தி ஏதோ நமக்குச் செய்தி அனுப்பியதாகச் சொன்னீர்களே, அது என்ன?" என்று சிவகாமி கேட்டாள்.

"எதிரி சைன்யம் வடபெண்ணை ஆற்றைக் கடந்து விட்டதாம். காஞ்சியை நெருங்கி வந்து கொண்டிருக்கிறதாம். காஞ்சியை முற்றுகை போட்டாலும் போடுமாம். ஆகையால், 'ஒன்று நீங்கள் காஞ்சி நகருக்குப் போய் விடுங்கள், அல்லது சோழ தேசத்துக்குப் போங்கள்' என்று சக்கரவர்த்தி சொல்லியனுப்பினாராம். திருவெண்காட்டுக்குப் போய் நமசிவாய வைத்தியர் வீட்டிலே இருக்கலாமென்று பரஞ்சோதி சொல்கிறான். நீ என்ன சொல்கிறாய், அம்மா?"

"நான் என்ன சொல்ல, அப்பா! எனக்கு என்ன தெரியும்? உங்கள் இஷ்டம் எதுவோ, அதுதான் எனக்கும் இஷ்டம்......"

"என் இஷ்டம் இங்கேயே இருக்க வேண்டுமென்பதுதான். இந்தக் காட்டை விட்டுப்போக எனக்கு விருப்பமே இல்லை, அம்மா! இதை விட்டு எங்கே போனாலும் எனக்கு மனநிம்மதி இராது."

"எனக்கும் அப்படித்தான் அப்பா! இங்கேயே நாம் இருந்து விடலாமே?"

"ஆனால், சக்கரவர்த்தியின் கட்டளை வேறு விதமாக இருக்கிறதே? மேலும், நான் மட்டுமாயிருந்தாலும் பாதகமில்லை. யுத்த காலத்தில் உன்னை வைத்துக் கொண்டு இங்கே தனியாக இருக்கலாமா? எதிரி வீரர்கள் எப்பேர்ப் பட்டவர்களோ, என்னமோ?"

"எதிரி சைன்யம் வந்தபிறகு பார்த்துக் கொள்ளலாமே, அப்பா! இப்போதே பிடித்து ஏன் கவலைப்பட வேண்டும்?" என்றாள் சிவகாமி.

* * *

மாமல்லரின் ஓலையில், தாம் வந்து அவளைச் சந்திக்கும் வரையில் ஒன்றும் முடிவு செய்ய வேண்டாம் என்று எழுதியிருந்ததை நினைத்துக் கொண்டுதான் மேற்கண்ட விதம் சிவகாமி சொன்னாள்.

அவளே சுயமாகச் சிந்தித்து இது விஷயத்தில் ஒரு முடிவுக்கு வரக் கூடாதவளாயிருந்தாள்.

காஞ்சிக்குப் போய்க் கமலியைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை ஒரு பக்கத்தில் அவளுக்கு அளவில்லாமல் இருந்தது. ஆனால், எட்டு மாதத்துக்கு முன்பு திருநாவுக்கரசரைப் பார்ப்பதற்காகக் காஞ்சி போய்த் திரும்பியதும், முதன் முதலாக மாமல்லர் தனக்கு எழுதிய ஓலையை நினைவு படுத்திக் கொண்டாள். "அரண்மனை நிலா மாடத்தில், முத்துப் பதித்த பட்டு விதானத்தின் கீழ், தங்கக் கட்டிலின்மேல் விரித்த முல்லை மலர்ப் படுக்கையிலே படுத்துறங்க வேண்டிய நீ, என்னுடைய ரதசாரதியின் வீட்டில் தரையிலே விரித்த கோரைப் பாயில் படுத்துறங்கினாய் என்பதை எண்ணி எண்ணி என் மனம் புண்ணாகிறது!" என்று பல்லவ குமாரர் எழுதியிருந்தார். இதிலே, அவர் சிவகாமியிடம் கொண்டிருந்த காதலின் மேன்மையும் வெளியாயிற்று; அதுபோலவே, கண்ணபிரான் வீட்டிலே வந்து சிவகாமி தங்குவதை அவர் அவ்வளவாக விரும்பவில்லையென்பதும் புலனாயிற்று.

இதைப் பற்றிச் சிவகாமியின் உள்ளத்தில் ஒரு சிறு போராட்டம் நடந்தது. கமலியிடம் அவளுக்கிருந்த நட்புணர்ச்சியும், பல்லவ குமாரரிடம் அவள் கொண்டிருந்த காதல் வெறி

சொல்லியனுப்பியிருக்கிறார், அம்மா! அதைப்பற்றி உன் அபிப்பிராயத்தைக் கேட்கலாமென்றுதான் பார்த்தேன். உன்னைக் காணோம்! வா! வீட்டுக்குப் போய்ச் சாவகாசமாகப் பேசலாம். உன் அத்தை, நாம் இரண்டு பேரும் சாப்பிடாமல் எங்கே தொலைந்து போய்விட்டோம் என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருப்பாள்" என்றார்.

இருவரும் காட்டு வழியில் ஒற்றையடிப் பாதையில் வீடு நோக்கி மௌனமாக நடந்தார்கள். ஆயனரின் உள்ளம் சிவகாமியின் வருங் காலத்தைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்தது. சிவகாமியின் உள்ளமோ, தேன் மலரை மொய்க்கும் வண்டைப்போல் மகிழ மரத்தின் பொந்தில் இருந்த மாமல்லரின் ஓலையைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது.



அத்தியாயம் 10

ஆனந்த நடனம்

"அப்பா! நான் நடனம் ஆடி வெகு காலம் ஆகி விட்டதே; இன்றைக்கு ஆடட்டுமா?" என்று சிவகாமி கேட்டாள்.

ஆயனர் சிறிது அதிசயத்துடன் சிவகாமியை உற்று நோக்கினார்.

"இன்றைக்கு என்ன, குழந்தாய், உன் முகம் இவ்வளவு களையாயிருக்கிறது?" என்று வினவினார்.

இருவரும் வீட்டுக்குச் சற்றுத் தூரத்தில் ஒரு மரத்தடியில் கிடந்த கல்லின் மீது உட்கார்ந்திருந்தார்கள். பக்கத்து மரத்தடியிலே ஆயனர் வர்ணம் அரைக்கும் குழிக் கற்களும், வர்ணம் காய்ச்சகம் அடுப்புகளும், சட்டிப் பானைகளும் கிடந்தன. ஆயனருடைய ஆனை மட்டும் காணவில்லை. அவன் வரட்டும் என்று ஆயனர் காத்திருந்த போதுதான் சிவகாமி அங்கு வந்து சேர்ந்தாள்.

ஆயனர் மேற்கண்டவாறு சிவகாமியின் முகக் களையைப் பற்றிக் கேட்ட-

கிறான். கேவலம் ஒரு சிற்பியின் மகளை அவன் மணந்து கொள்வானா?

"அப்பா! என்ன யோசிக்கிறீர்கள்?" என்று சிவகாமி கேட்கவும், "ஒன்றுமில்லை, அம்மா! பரஞ்சோதியுடன் நான் பேசிக் கொண்டிருந்த போது நீ திடீரென்று எங்கே போய் விட்டாய்?" என்றார் ஆயனர்.

"அந்தப் பிள்ளையை எனக்குப் பிடிக்கவில்லை, அப்பா! அதனால் தான் எழுந்து வந்துவிட்டேன்."

"ரொம்ப நல்ல பிள்ளையாச்சே, அம்மா! அவனை ஏன் உனக்குப் பிடிக்காமல் போகவேண்டும்? அதனால் பாதகமில்லை. அவனிடம் சக்கரவர்த்தி ஒரு முக்கியமான சமாசாரம்



கொண்டிருந்தீரா?" என்று சொல்லிக் கொண்டு சிவகாமி திரும்பிப் பார்த்தாள். அவள் பார்த்த இடத்தில் செடி கொடிகளை விலக்கிக் கொண்டு ஆயனர் நிற்பதைக் கண்டாள். தான் ரதியுடன் பேசிக் கொண்டிருந்தது அவர் காதிலே விழுந்ததோ என்ற எண்ணத்தினால் அவளுடைய முகத்தில் நாணமும் அச்சமும் கலந்து தோன்றின.



ஆனால், மலர்ந்த முகத்துடன் ஆயனர் கூறிய வார்த்தைகள் அவளுடைய பயத்தைப் போக்கின.

"குழந்தாய்! எனக்குத் தூக்கி வாரிப் போட்டுவிட்டது. நடுக் காட்டிலே யாரோடு பேசிக் கொண்டிருக்கிறாய் என்று பார்த்தேன். ரதியுடன் பேசிக் கொண்டிருக்கிறாயா? பாவம்! நீ என்ன செய்வாய்? உன்னோடு பேசுவதற்குக்கூட இவ்விடத்தில் யாரும் இல்லை. பொழுது போவதே உனக்குக் கஷ்டமாய்த்தானிருக்கும். காஞ்சியிலாவது உன் தோழி கமலி இருக்கிறாள் ......"

இப்படிப் பேசிக்கொண்டே தன்னை நெருங்கி வந்த ஆயனரைச் சிவகாமி திடீரென்று கட்டித் தழுவிக் கொண்டு, "அப்பா! உங்களுக்குத் தெரியுமா? கமலி ... கமலி ...." என்று மென்று விழுங்கினாள்.

ஆயனர் பதறலுடன், "ஐயோ! கமலிக்கு என்ன, அம்மா? ஏதாவது உடம்பில் வந்திருக்கிறதா?" என்று கேட்டார்.

ஆயனருடைய பதறலைப் பார்த்ததும் சிவகாமிக்குத் தாங்க முடியாத சிரிப்பு வந்தது.

"ஆமாம், அப்பா! கமலிக்கு உடம்பிலேதான் வந்திருக்கிறதாம்" என்று கூறிவிட்டுச் சிவகாமி இடி இடியென்று சிரித்தாள்.

அதைப் பார்த்த ஆயனர் விபரீதமாக ஒன்றுமிராது என்று தீர்மானித்துக்கொண்டு, "பின்னே, என்ன சிவகாமி! ஒரு வேளை இங்கே வருகிறதாகச் சொல்லி அனுப்பியிருக்கிறாளோ?" என்றார்.

"இல்லை, அப்பா, இல்லை. கமலிக்கு உண்மையாகவே உடம்பு நன்றாயில்லையாம்" என்று சொல்லி, ஆயனரின் காதினருகில் நெருங்கி, "கமலி வயிற்றில் சின்னக் கண்ணன் வந்திருக்கிறானாம்!" என்றாள்.

ஆயனர் சற்று நிதானித்து விஷயம் இன்னதென்று தெரிந்து கொண்டார். உடனே, முன்னைவிட அருமையுடன் சிவகாமியை அணைத்துத் தழுவிக் கொண்டு, "ரொம்ப சந்தோஷம், அம்மா! சிவகாமியின் கல்யாணத்தின் போதே நான் ஆசீர்வாதம் பண்ணினேன்..."

"அப்பா! உங்கள் குமாரிக்கு எப்போது கல்யாணம் ஆயிற்று?" என்றாள் சிவகாமி.

தாம் வாய் தவறி, "சிவகாமி" என்று சொல்லிவிட்டது ஆயனருக்குச் சட்டென்று புலப்பட்டது. அவர் ஒரு அசட்டுப் புன்னகை செய்துவிட்டு, "என்ன அம்மா சொன்னேன்? 'சிவகாமியின் கல்யாணத்தின் போது' என்று சொல்லிவிட்டேனா? அதனால் என்ன? உனக்கும் ஒருநாள் கல்யாணம் நடக்கத்தான் போகிறது... நான் சொல்ல வந்தது என்னவென்றால், கமலியின் கல்யாணத்தின் போது நான் அவளுக்கு ஆசீர்வாதம் செய்தேன்: 'சீக்கிரத்தில் உனக்கு ஆண் குழந்தை பிறக்க வேண்டும், அவன் என்னிடம் சிற்பம் கற்றுக் கொள்ள வரவேண்டும்' என்று......"

இவ்விதம் கூறிய ஆயனர் பேச்சை நிறுத்தி விட்டு மௌனத்தில் ஆழ்ந்தார். அவருடைய உள்ளமானது சிவகாமியின் விவாகத்தைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியது. பரஞ்சோதிக்கு அவளை மணம் செய்விக்கலாம் என்று தான் முன்னம் எண்ணியதும் நினைவு வந்தது. அவனே இப்போது பெரிய போர் வீரனாகவும் கோட்டைத் தளபதியாகவும் ஆகியிருக்

மென்று வெறுத்துத் தள்ளச் சித்தமா யிருக்கிறார்! எதற்காக? அரண்மனை மான்யம் பெற்று ஜீவனம் செய்யும் ஒரு ஏழைச் சிற்பியின் மகளுக்காக! அந்தப் பெண்ணிடம் தாம் கொண்ட காதல் நிறைவேறுவதற்கு இந்த சாம்ராஜ்யம் தடையா யிருக்கிறதென்பதற்காக! ... இம்மாதிரி அதிசயத்தைக் கதைகளிலோ, காவியங்களிலோ யாராவது கேட்டதுண்டா?

துஷ்யந்த மகாராஜன் காட்டிலே சகுந்தலையைக் காதலித்தான்; இராஜ்யத்துக்குத் திரும்பியதும் அவளை அடியோடு மறந்தான்.

நளன் சூதாடி இராஜ்யத்தைத் தோற்றான்; நடுக் காட்டிலே தமயந்தியைத் தவிக்கவிட்டு ஓடினான்.

துணி தோய்க்கும் வண்ணான் ஏதோ உளறினான் என்பதற்காக ஜனக மகாராஜனின் புத்திரியான உத்தம பத்தினியை இராமன் காட்டுக்கு விரட்டினான்.

துரோபதைக்கு நாயகன்மார் ஐந்து பேர் இருந்தும், நடுச் சபையில் அவளை மானபங்கம் செய்த அநியாயத்தைத் தடுக்காமல் வெறுமனே பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

ஆனால் பல்லவ குமாரரோ, குடிசையில் பிறந்து வனத்திலே வளர்ந்த ஒரு அபலைப் பெண்ணின் காதலுக்காகத் தமக்குரிய சாம்ராஜ்யத்தையே துறக்கச் சித்தமா யிருக்கிறார்!

"ரதி! உன் தோழி சிவகாமியைப் போல் பாக்கியசாலியான பெண் இந்த ஈரேழு பதினாலு லோகத்திலும் இல்லையடி!" என்று கூறிச் சிவகாமி தன்னைத் தொடர்ந்து வந்த மானின் முகத்தை இரு கரங்களாலும் பிடித்து நிமிர்த்தினாள். ரதியோ தன் அழகிய கண்களை அகல விரித்து அவளை ஆவலுடன் நோக்கிற்று.

"இதோ பார், ரதி! நீயும் அதிர்ஷ்டசாலிதான்! எட்டு மாதத்துக்குமுன்பு உன்னிடம் மாமல்லரைப் பற்றி நான் குறைவாகக் கூறியதை மறந்து விடு! அப்போது நான், 'இவர் சக்கரவர்த்தி குமாரரா யிருந்தால் எனக்கென்ன வந்தது? இவருக்காக நான் என் பழைய தோழிகளை யெல்லாம் விட்டுவிட வேண்டுமா? இன்று இவர், கமலி வீட்டுக்கு நான் போகக் கூடாது என்பார். நாளைக்கு, ரதியை உன்னுடன் அரண்மனைக்கு அழைத்து வரக் கூடாது என்பார்! இப்படிப்பட்ட பெரிய மனிதர்களின் உறவு நமக்கு ஒத்து வராதடி அம்மா!' என்று சொன்னேனல்லவா? அதையெல்லாம் மறந்து விடு! அதே பல்லவ குமாரர்தான் இன்றைக்கு 'இராஜ்யம் என்னத்திற்கு, சிவகாமி! எனக்கு நீயே போதும்!' என்கிறார். அவர் சொல்வது நியாயந்தானே, ரதி! எனக்கு அவரும், அவருக்கு நானும் இருந்தால் போதாதா? இராஜ்யம் என்னத்திற்கு? சண்டை, கொலை, சாவு எல்லாம் என்னத்திற்கு?"

இவ்விதம் கூறி ரதியின் இரண்டு தூக்கிய காதுகளுக்கும் நடுவில் சிவகாமி முத்தமிட்டு விட்டு, மறுபடியும் சொல்வாள்:—

"ரதி! உன்பாடு யோகந்தான்! மாமல்லர் 'இராஜ்யமும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். எனக்குச் சிவகாமியே போதும்' என்று சக்கரவர்த்தியிடம் சொல்லி விட்டு வந்து என்னை மணந்து கொள்ளப் போகிறார். நாங்கள் இருவரும், மனித சஞ்சாரமே இல்லாத நடுக்காட்டில் பர்ணசாலை கட்டிக்கொண்டு ஆனந்த வாழ்க்கை நடத்தப் போகிறோம். அப்போது இந்தச் சுகப்பிரம்ம ரிஷியை அடித்துத் துரத்தி விட்டு உன்னை மட்டுந்தான் எங்களுடன் வைத்துக் கொள்ளப் போகிறேன். உனக்கு வேலை நிரம்ப இருக்கும், ரதி! எனக்கும் மாமல்லருக்கும் இடையில் நீ அடிக்கடி தூது போக வேண்டியதா யிருக்கும். தாமரைக் குளக்கரையில் ஒரு நாள் எனக்கும் அவருக்கும் நடுவில் நடந்து நீ தூது சொன்னாயே, அது ஞாபக மிருக்கிறதா?"

ரதி கண்களினாலேயே ஒரு புன்னகை புரிந்துவிட்டு, "போதும் இந்த அசட்டுத்தனம்!" என்பதுபோல் தலையை ஒரு ஆட்டு ஆட்டி விட்டு, சிவகாமியின் கையிலிருந்து திமிறிக் கொண்டு புல் மேயச் சென்றது.

"அம்மா! சிவகாமி!" என்ற குரலைக் கேட்டதும், "ஓ சுகப்பிரம்ம ரிஷியே! நீர் எல்லாம் கேட்டுக்

சிவகாமியின் சபதம்

கல்கி

[பூர்வ கதை: சோழ நாட்டிலிருந்து கல்வியும் கலையும் பயில்வதற்காகக் காஞ்சிமா நகர் வந்த பரஞ்சோதி என்னும் வாலிபன், ஆயனச் சிற்பியையும் அவருடைய புதல்வி சிவகாமியையும் மத யானையின் கோபத்திலிருந்து தப்புவிக்கிறான். பின்னர், ஆயனருக்காக அஜந்தா வர்ண இரகசியத்தை அறிந்து கொண்டு வரும் பொருட்டு வடநாடு செல்கிறான்.

வழியில், பல்லவ சாம்ராஜ்யத்தின் மீது படையெடுத்து வந்த சளுக்க சைன்யத்தையும், சளுக்க சக்கரவர்த்தி புலிகேசியையும் பார்க்கிறான். அங்கிருந்து தப்பிச் சென்று பல்லவ சைன்யத்தில் சேர்ந்து பல வீரச் செயல்கள் புரிகிறான். பல்லவ சைன்யத்துக்குத் தலைமை வகித்த மகேந்திர பல்லவ சக்கரவர்த்தி, காஞ்சிக் கோட்டையை முற்றுகைக்கு ஆயத்தம் செய்வதற்காக அவனை அனுப்பி வைக்கிறார்.

சக்கரவர்த்தியின் கட்டளையின் பேரில் காஞ்சியிலேயே தங்கியிருந்த குமார சக்கரவர்த்தி மாமல்ல நரசிம்மரும் பரஞ்சோதியும் சிநேகப் பிரதிக்ஞை செய்து கொள்கிறார்கள்.

மறுநாள் காலையில் பரஞ்சோதி ஆயனரைப் பார்ப்பதற்காக அவருடைய அரண்ய வீட்டுக்குக் கிளம்பிய போது, மாமல்லர் நரசிம்மர் ரதசாரதி கண்ணபிரானிடம் சிவகாமிக்கு ஓலை கொடுத்தனுப்புகிறார். காதலும் கவிதா ரஸமும் ததும்பிய அந்த ஓலையைத் தாமரைக் குளக்கரையில் தனிமையில் படித்து விட்டுச் சிவகாமி உள்ளக் கிளர்ச்சியுடன் வீடு திரும்புகிறாள்.]

இரண்டாம் பாகம்: காஞ்சி முற்றுகை

அத்தியாயம் 9

ரதியின் புன்னகை

சாப்பாட்டில் பிரியம் அதிகம் உள்ளவன் தான் அருந்திய விருந்தில் மிகவும் இனிப்பாயிருந்த பண்டத்தை மீண்டும் மீண்டும் நினைத்து நாவைச் சப்புக் கொண்டிருப்பது போல, மாமல்லரின் ஓலையில் ஒரு பகுதியைச் சிவகாமி நினைத்து நினைத்து ஆனந்தித்துக் கொண்டே வீடு நோக்கி நடந்தாள். அப்படி அவளை மெய் மறக்கச் செய்தது, ஓலையின் கடைசிப் பகுதியாகும். சக்கரவர்த்தியின் குமாரனாயிராமல் ஆயனரிடம் சிற்பக் கலை கற்கும் சீடனாயிருக்க விரும்புவதாக மாமல்லர் தெரிவித்திருந்தாரல்லவா? "யுத்தம் என்னத்திற்கு? இராஜ்யம் என்னத்திற்கு?" என்றெல்லாம் தோன்றுவதாகவும் எழுதியிருந்தாரல்லவா? ஆகா! இந்த விஸ்தாரமான பரத கண்டத்தில் மூன்றில் ஒரு பாகத்தைத் தனி அரசு புரியும் சக்கரவர்த்தியின் குமாரர், தொண்டைமான் இளந்திரையன் காலத்திலிருந்து பரம்பரையாக வந்த மகத்தான சாம்ராஜ்யத்தை வேண்டா



இசைவாணி கோகிலகான

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின்

"எச். எம். வி." ரிகார்டு சங்கீதம்

N. 18218 { கண்ணெடுத்தாகிலும் —ஹமேந்திரமத்திமம்

N. 18100 { நீ இரங்காயெனில் —அடாணா / வண்டினமுரலும் —தோடி

N. 18208 { மரிதயை —வசந்த

N. 18685 { ஸரகுணபாலிம்ப —கேதாரகௌளம்

N. 18205 { கண்டதுண்டோ / வானத்தின் மீது

N. 18680 { எவ்வாகானு ராமபஜன —பந்துவராளி

எல்லா "எச். எம். வி." கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

அன்னை

கஸ்தூரி பா

ஞாபகார்த்த நிதிக்காக

ஸ்ரீமதி

எம். எஸ். சுப்புலக்ஷ்மி

இசைக் கச்சேரிகள்



★

முனிஸிபல் பப்ளிக் ஹால் - திருச்சி
வெள்ளிக்கிழமை 25 - 8 - 1944 மாலை 6 மணிக்கு

சிந்தாமணி டாக்கீஸ் - மதுரை
வெள்ளிக்கிழமை 1 - 9 - 1944 மாலை 7 மணிக்கு

கர்னாடிக் டாக்கீஸ் - கோயமுத்தூர்
ஞாயிற்றுக்கிழமை 3 - 9 - 1944 மாலை 5-30 மணிக்கு

★

அந்தந்த ஜில்லா வாசிகளும் பக்கத்து ஜில்லாக்களிலுள்ளவர்களும் கச்சேரிகளுக்கு விஜயம் செய்து அன்னை கஸ்தூரிபாயின் ஞாபகார்த்த நிதிக்குத் தாராளமாய்க் கைங்கர்யம் செய்யக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

★

டிக்கெட் விவரங்கள்: ரூ. 25, ரூ. 10, ரூ. 5, ரூ. 2.
கச்சேரிகளுக்கு ரூ. 100/- நன்கொடை அளித்தவர்களுக்குத் தனி இடம் ரிஸர்வ் செய்யப்பட்டிருக்கிறது.

டிக்கெட்டுகள் கிடைக்குமிடம்:

திருச்சி

1. இருநிதி பாங்க் லிமிடெட், சின்னக் கடை வீதி.
2. டாக்டர் பாஜு சக்ஜுரி பெரிய கடை வீதி.
3. சௌத் மதராஸ் எலக்ட்ரிக் கார்ப்பொரேஷன், தென்னூர்.
4. ஜனோபகார நிதி லிமிடெட், ஸ்ரீரங்கம்.

மதுரை

1. காரிக்கார் & ஆரி ஆடிட்டர்ஸ், பாலஸ் ரோடு.
2. கல்கி ஏஜண்டு, மேலக் கோபுர வாசல்.
3. சிந்தாமணி டாக்கீஸ், கீழவெளிவீதி, மதுரை.

கோவை

1. காரிக்கார் & ஆரி, ஆடிட்டர்ஸ், ஜெயில் ரோடு.
2. M. S. கிருஷ்ணசாமி & ஜகன்னாதன், ஆடிட்டர்ஸ், R. S. புரம்.
3. பாரத் பாங்க் லிமிடெட்
4. இந்தியன் பாங்க்.
5. சென்ட்ரல் பாங்க்.
6. கல்கி ஏஜண்டு, கருப்ப கவுண்டன் தெரு.

மைக், ஒலிபெருக்கி ஏற்பாடுகள்: திருச்சி ரேடியோ சேல்ஸ் & சர்வீஸ்.

வான சஞ்சாரம்

" இசைத் தேனீ "

மனுஷன் பிறந்தால், செம்பை வைத்திய நாதய்யரது போன்ற சாரீரத்தோடு பிறக்க வேண்டும். இந்த மாதம் 7உ திருச்சி நிலையத்திலே வெண்கல நாதத்தோடு அவர் செய்த கச்சேரியைக் கேட்டு ஆனந்திக்காமலிருக்க முடியுமோ? 'தாத்ருதாவி பிராத்ருதாவி மாத்ருதாவி' என்ற ஸ்வர உருட்டல்களை அன்று காணோம். அதற்கெல்லாம் அவகாசமில்லை போலும்!

12உ இரவு சென்னையில் தண்டபாணி தேசிகர் கச்சேரி. இந்த அபூர்வ மனுஷருக்கு சரீரம், சாரீரம் இரண்டும் கனம். ஆனால், குரலைச் சவுக்காய்க் கனம் நயம் கொடுத்து, அடிக்கடி நாலைக்கும் பறத்தி விடுகிறார். சரணமாயும் சோகையாயும் சஞ்சாரங்களை அமைத்து, ராகங்களை 1½ ஸ்தாயி பூரணமாய்ப் பாடுகிறார். நாகஸ்வராளியும் பைரவியும் முதல் ஸ்தானத்துக்குப் போட்டி போட்டன. சாஹித்யத் தெளிவு பிரத்யேகம். 'இனியே தொமக்கு நின்னருள் வருமோ' என்ற விருத்தத்தை கேதார கௌளை, கல்யாணி, தன்யாசி இவை கொண்ட ராகமாலிகையாகப் பாடினார். சாஹித்யத்தை அர்த்தபாவத்துக் கேற்ப ராக பாவத்தில் புகுத்தி, மனதை உருகச்செய்யும் வழி இவரிடமுள்ள தனிப்பெருமை.

சென்னையில் 8உ கல்யாண கிருஷ்ணய்யரின் வீணையும் திருச்சியில் 13உ மன்னார்குடி கே. சாவித்திரியம்மாள் கோட்டு வாத்தியமும் நல்ல பாணியுடன் இருந்தன.

கல்யாண கிருஷ்ணய்யர் நல்ல மெருகுடனும் கச்சிதமாயும் தன் கலையை வாய்ப் பாட்டிலும் வீணையிலும் வெளிப்படுத்தினார்.

சாவித்திரி அம்மாள் வாசிப்பு, கமக பூர்வமாயும் அழுத்தமாயும் இருந்தது. மோஹனம், ஸஹானா, பூர்விகல்யாணி, ஸாவேரி முதலிய ராகங்கள் அவர் வீணையிலிருந்து பூர்ண ஸ்வரூபங்களுடன் வெளி வந்தன. ஸஹானாவில் 'ஏமானதிச்சிவோ' என்ற உருப்படியும் கரஹரப்ரியாவில் 'அலையாதே போ மனமே' என்ற தமிழ்ப் பாட்டும் உணர்ச்சி ததும்பியிருந்தன. வீணையுடன் இழையும் குரலுடன் பாடினார்.

பாலா பத்மநாபன் தமக்குத்தான் சாரீரமிருக்கிறதென்று சென்னையில் 10உ மேல் ஸ்தாயிலேயே ராகங்களை ஒரு கை பார்த்தார். திருச்சியில் 11உ எம். எஸ். சௌந்திரம் மாளும் 13உ ஆர். சுப்ரமணியனும் பாடியதிலிருந்து அரியக்குடி வழியில் சிஷ்யர்கள் என்று தோன்றியது. முதலில் சொன்ன அம்மாளுக்கு ஏற்கனவே சன்னக் குரல். அரியக்குடியைவிட அதிகமாய் நாலைக்கும் பண்ணைப் பார்க்கிறார்.

14உ இரவு திருச்சியில் ராஜமாணிக்கம் பிள்ளையவர்களின் பிடில் கச்சேரி அமோகமாய்த்தானிருந்தது. சென்றவாரக் கச்சேரிகளில் எல்லாவற்றிலும் அது உயர்ந்ததாகவே காணப்பட்டது. பேகடா, ஆனந்த பைரவி, மந்தாரி முதலிய ராக ஆலாபனைகள் மனதைக் கவர்ந்தன.

15உ திருச்சி நிலையத்துக்குக் கொஞ்சம் விசேஷயோகம். அங்கு நடந்த மூன்று கச்சேரிகளும் ஜமாவாயிருந்தன. கிருஷ்ணவேணி ராஜகிருஷ்ணன் வாசித்த வீணைக் கச்சேரியில் ஆபேரி, கல்யாணி, ஆனந்த பைரவி ராகங்களும் அவைகளின் உருப்படிகளும் அழகு வடிவங்களாயிருந்தன.

ஏ. வீ. சுப்ரமணியமும் தனக்கு எதுவும் பெரிதில்லை என்ற நிச்சயத்துடனேயே அலக்ஷியமாக ராகங்களையும் உருப்படிகளையும் கையாண்டார்.

கானடா, பைரவி முதலிய ராகங்களை நல்ல அழுத்தமான பிடிகளுடன் பாடிய லக்ஷ்மி ராஜாங்கம்மாளையும் குறிப்பிடாமலிருக்க முடியாது.

வித்வான்களில் தற்போது அதிக ரொக்கம் கொண்ட ஜி. என். பி. க்கு மற்றவர்கள் பிடித்துக் கொள்ளக்கூடிய தனி பாணி இருக்கிறதா? "ஆம்; கட்டாயம் இருக்கிறது!" என்று 16உ சென்னையில் பாடிய அவர் சிஷ்யர் எஸ். பாலசுப்ரமணியன் நிரூபித்தார். குறுகிய நேரத்துக்குள்ளே சாருகேசி ராகத்தைக் கேட்போர் பிரமிக்கும்படி ஒரு விளாசு விளாசிவிட்டார். ராகத்திலும் உருப்படிகளிலும் குருவின் வழி அப்படியே பிரதிபலிக்கிறது—அடுக்கு பிர்க்கா, உருட்டல்கள், பிருவான ஒதுக்கல்கள் எல்லாம் உள்பட. மோஹன உருப்படியின் பல்லவி ஆரம்பமான 'ராமா' என்ற ஒரு வார்த்தையிலேயே ஒரு கொத்து பிர்கா தொங்கிய தென்றால் வேறென்ன வேண்டும்?

கேட்டுப் பாருங்கள்!

ஆகஸ்டு 20உ திருச்சியில் 2 மணிக்கும் 5 மணிக்கும் பாடப்போகும் ஸ்ரீ கே. வி. சுப்பிரமணியம் எப்படி இருப்பார் என்ற சந்தேகம் யாருக்காவது ஏற்பட்டால், தயவு செய்து கீழே உள்ள படத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளவும்.

21உ இரவு திருச்சியில் மதுரை மணி ஐயர் அமோகமாய்ப் பாடப் போகிறார். அதே சமயத்தில் சென்னை ரேடியோவில் 'பெங்கி பெண்ணி கூத்து' நடைபெறுகிறது!

மறுநாள் 22உ ஆலாரம் வெங்கடசாமி நாயுடு சென்னையில் வாசிக்கிறார். அப்போது நல்ல வேளையாகத் திருச்சி ரேடியோவில் கூத்து ஒன்றும் இல்லை.

24உ திருச்சியில் முசிறியின் சிஷ்யர் ஸ்ரீ என். ஸி. சீதாராமன் கச்சேரி செய்கிறார்.



அன்று காலையிலும் மாலையிலும் ஸ்ரீமதி டி. பாலஸரஸ்வதியின் வீணையும் குரலும் சேர்ந்து தமிழிசை பொழிகின்றன.

25உ திருச்சியில் சீர்காழி ஸ்ரீ எஸ். கே. சதாசிவம் பிள்ளையின் கச்சேரி இருபகுதியாக நடைபெறுகிறது.

29உ சென்னையில் முசிறி சுப்பிரமணிய அய்யர்: திருச்சியில் 'மதுரையில் உள்ளபடி.'

வில்லை!" என்று ஏமாற்றத்துடன் முடிவு செய்ய வேண்டியதாயிருக்கும்.

ஜி. என். பி. யின் சாரீரம் இரண்டு கச்சேரியைக் கெடுத்ததென்றால், மூன்றாவது கச்சேரியும் சுகப் படாமல் போனதற்கு ஜி. என். பி. யின் பிர்க்கா மயமான சங்கீத பாணி காரணமாயிருந்தது.

பிர்க்கா சங்கீதத்தில் ஒரு தொந்தரவு என்னவென்றால், குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட பிடிகளில் எதிர்பார்க்கும் சங்கதிகள் விழுந்தேயாக வேண்டும். அப்படி விழாமல் போனால், 'விமரி'கள் உடனே "இன்றைக்குக் கச்சேரி சுகப்படவில்லை" என்று தீர்ப்பளித்து விடுவார்கள்.

அதோடு, சாரீரமும் இடக்குச் செய்து எங்கேயாவது ஒரு இடத்தில் 'இங்கிலீஷ்' பேசிவிட்டால், கச்சேரி தொலைந்தது! அப்புறம், பாடகர் எவ்வளவுதான் 'கொடி' வித்தை செய்தாலும், கச்சேரி களை கட்டுவதில்லை.

ராஜாஜி அன்று சங்கீதத்தைப் பற்றிப் பொதுவாகச் சொன்னார்:— "டாங்கிகளையும் குண்டுகளையும் வைத்துக்கொண்டு நடத்தும் யுத்தத்தைக் காட்டிலும் இந்தச் சங்கீத யுத்தம் ரொம்பக் கடினமானது. அந்த ஆயுத யுத்தத்தில் ஒரு தடவை தோல்வியடைந்தால் இன்னொரு தடவை ஜயிக்கலாம். இந்தச் சங்கீத யுத்தத்திலே ஒரு தடவை தவறிவிட்டால், போயே போச்சு!"

ராஜாஜி மேலே கூறியது, பிர்க்கா பிரதானமான சங்கீத பாணிக்கு மிகவும் பொருந்துவதாகும்.

இந்த இடையூறுகளை யெல்லாம் ஜி. என். பி. கடந்து மேலே வந்துவிட்டார் என்பதை 4—8—11ல் மயிலை சங்கீத சபையில் அவர் செய்த கச்சேரி நிரூபித்தது.

ஜி. என். பி. யின் சாரீரமும் சங்கீத பாணியும் இப்போது அடைந்திருக்கும் மேன்மை அன்று அவர் பைரவி ராக ஆலாபனை செய்தபோது வெளியாயிற்று.

உண்மையான கர்நாடக சங்கீதம் எப்படி இருக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ, அதில் என்னென்ன அம்சங்கள் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறோமோ, அவ்வளவும் அந்த ஆலாபனத்தில் இருந்தன. பைரவி ராகத்தின் ஸ்வரூபத்தை அதில் பூரணமாகக் கண்டோம். நாபீ கமலத்திலிருந்து மேலோங்கி வந்த நாத கம்பீரத்தைக் கண்டோம். அதிசயமான லாகவத்தோடு ஆகாச வெளியில் இப்படி யெல்லாம் சஞ்சரித்து வந்த மனோதர்மத்தைக் கண்டோம். கருவியோடு கலந்து நின்ற கார்வையை ஆங்காங்கு கண்டோம். உசிதமான அளவு மணி உதிர்ப்பதுபோல் உதிர்த்த பிர்க்காக்களையும் கண்டோம்.

இவ்வளவுடன் ஜி. என். பி. யின் சாரீரம் எவ்வளவு தூரம் பதமடைந்து எவ்வளவு விஸ்தாரமும் அடைந்திருக்கிறது என்பதைக் கண்டு வியந்தோம்.

"இப்பொழுதெல்லாம் மூன்று ஸ்தாயிகளில் பாடுகிறவர்களே இல்லை" என்று யாரோ ஒரு உபந்யாசக வித்வான் சொன்னார் அல்லவா? அதைப் பொய்ப் படுத்துவதற்காகவே செய்ததுபோல், ஜி. என். பி. அன்று சில வேலைகளைச் செய்தார். பைரவி ராக ஆலாபனையில் தார ஸ்தாயி மத்தியமத்தில் நின்று அவர் சஞ்சரித்தபோது, சபையோர் "ஹா ஹா" என்றார்கள்.

பிறகு, பஞ்சமத்துக்குப் போய்க் கார்வை கொடுத்து நின்றபோது 'ஹா ஹா ஹா' என்றார்கள். அத்துடன் ஜி. என். பி. கீழே இறங்கினாரா? இல்லை! மேலே, தைவதத்துக்குப் போனார். எல்லாருக்கும் மூச்சு நின்றுவிடும்போல் ஆகிவிட்டது. இன்னும் மேலே சென்று அவர் நிஷாதத்தைப் பிடித்ததும் எல்லாருக்கும் மூச்சே நின்றுபோய்விட்டது! பாடகர் கீழே இறங்கி வந்த பிறகுதான் சபையோர் ஹாய்யாக மூச்சு விட்டார்கள்.

பாலக்காட்டு மணி எந்த வித்வானுக்குப் பக்க வாத்தியம் வாசித்தாலும், கச்சேரி சிறப்பாகி விடுகிறது என்பதில் இரகசியம் ஒன்று மில்லை. என்றாலும், ஜி. என். பி. யின் பாட்டுக்கும் மணியின் மிருதங்கத்துக்கும் விசேஷ பொருத்தம் இருக்கிறதென்பதும் உண்மையே யாகும். ஜி. என். பி யும் மணியும் சேரும் கச்சேரிகளில் பாட்டுக்கு மிருதங்கமும், மிருதங்கத்துக்குப் பாட்டும் ஒன்றுக்கொன்று சோபை அளிக்கின்றன. பாட்டும் பக்க வாத்தியமும் அவ்வளவு ஒற்றுமையாகச் சேர்வது மிகவும் அருமை யென்றே சொல்ல வேண்டும்.

அழகுக்கு அழகு செய்வதுபோல், ஸ்ரீ சௌடய்யாவின் கம்பீர பிடில் நாதமும் ஸ்ரீ வேணு நாயக்கரின் ஜிலுஜிலுப்பான கஞ்சிரா ஒலியும் மேற்படி கச்சேரியை நன்கு சிறப்பித்தன.

ஐந்து ரூபாய் பரிசு சென்ற இதழில் வெளியான "சதுர்ய நடிகன்" என்னும் காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: ஜி. ராஜாராமன், பெங்களூர்.



ஆடல் பாடல்



"கர்நாடகம்"

நாட்டில் பெரியோர்கள் பலர் தங்கள் அபிப்பிராயங்களை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் சங்கீதம் சம்பந்தமாக நான் இரண்டு வருஷத்துக்கு முன்பு கூறிய ஒரு அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டதைப் பகிரங்கப்படுத்த விரும்புகிறேன்.

சங்கீத வித்வான் ஸ்ரீ ஜி. என். பால சுப்பிரமணியத்தைப் பற்றி முன் ஒரு முறை எழுதியபோது, "ஜி. என். பி. நாலு கச்சேரி செய்தால் ஒன்று நிச்சயம் நன்றாயிருக்கும்" என்று எழுதியிருந்தேன்.

இப்போது, "ஜி. என். பி. நாலு கச்சேரி செய்தால், அவற்றில் மூன்று நிச்சயம் நன்றாயிருக்கும்" என்று சொல்லும்படி ஆகிவிட்டது.

இரண்டு வருஷத்துக்குள்ளே இவ்வளவு சிறந்த அபிவிருத்தி — மூன்று மடங்கு அபிவிருத்தி — ஜி. என். பி. அடைந்திருப்பது குறித்து எனக்கு அளவில்லா ஆனந்தம் ஏற்படுகிறது.

இந்த அபிவிருத்திக்கு — இரண்டு வருஷத்துக்கு முன்னால் நான் சற்றும் எதிர்பாராத அபிவிருத்திக்கு — முக்கிய காரணம் ஜி. என். பி. யின் சாரீரத்திலும் சங்கீத பாணியிலும் ஏற்பட்டிருக்கும் அதிசயிக்கத் தக்க மாறுதல்தான்.

'இமிடேஷன்' வைரமானது வாங்கியவுடனே பளபளவென்று பிரகாசிக்கிறது. சிறிது சிறிதாகப் பல்லிளித்துக் கொண்டு வந்து கடைசியில் அதன் உண்மை ஸ்வரூபத்தை — அதாவது தான் வெறும் கண்ணாடித் துண்டு என்பதை — காட்டிவிடுகிறது.



உண்மையான வைரமோ அதனுடைய இயற்கை நிலையில் பிரகாசமின்றி மங்கிக் கிடக்கிறது. அதைப் பட்டை தீர்க்கத் தேய்க்கத் தேய்க்கப் பிரகாசம் பெற்று சுகமான வர்ண ரேகைகள் வீசி ஜாஜ்வல்யமாய்த் திகழ்கிறது.

இமிடேஷன் வைரத்தைப் போல் முதலிலே நன்கு பிரகாசித்துப் பிறகு மங்கிவிடும் வித்வான்களின் சாரீரத்தை நாம் பார்த்து அனுதாபப் பட்டிருக்கிறோம்.

ஆனால், உண்மையான வைரத்தைப் போல் நாளாக ஆக மெருகு ஏறிப் பிரகாசிக்கும் சாரீரத்தை அவ்வளவு சுலபமாக நாம் பார்ப்பது கிடையாது.

சமீபகாலத்தில் இரண்டு சிறந்த சங்கீத வித்வான்களின் விஷயத்தில் அந்த அருமையான காரியம் நடந்திருப்பது குறித்து நாம் பெரிதும் சந்தோஷப்பட வேண்டும்.

ஜி. என். பி. விஷயத்திலும், மதுரை மணி ஐயர் விஷயத்திலும் இந்த அதிசயம் நடந்திருக்கிறது.

நாலு வருஷத்துக்கு முன்னால் அவர்களுடைய பாட்டைக் கேட்கும்போது, "ஆஹா! இப்பேர்ப்பட்ட சங்கீத சம்பத்து உள்ளவர்களுக்குக் குரலில் இனிமையும் சுகபாவமும் இருந்தால் எவ்வளவு உயர்வாயிருக்கும்?" என்று பரிதாப மடைந்தோம்.

இப்போது, அவர்கள் இருவருடைய சாரீரமும் எப்படி இனிமையும் சுகபாவமும் ஏறி, மிக மிக அபூர்வமான இடங்களில் எல்லாம் சிறிதும் தடுமாறாமல் சஞ்சரிக்கக் கூடியவையாயிருக்கின்றன என்பதைக் கண்டு அதிசயித்து மகிழ்கிறோம்.

ஜி. என். பி. யின் சாரீரம் இரண்டு வருஷத்துக்கு முன்புகூட இவ்வளவு பதமடைந்து சுகபாவம் பெற்றிருக்கவில்லை. காலிலே இரண்டு கச்சேரியில் "இன்று சாரீரம் ஒத்துக் கொள்ள

என்றாலும், சுதேச சமஸ்தானம் ஒன்றில் திவானாக இருக்கும் வரையிலாவது ஸர் சி. பி. இந்தியா தேசத்து விவகாரங்களில் தலையிடாமலிருந்தால், அவருக்கும் க்ஷேமம்; சமஸ்தானங்களுக்கும் க்ஷேமமாயிருக்கும்.

"பாகிஸ்தான் ஏற்பட்டால் குடி கெட்டுப் போகும்" என்று ஸர் சி. பி. பிரசாரம் செய்யும்போது, இந்தியாவில் தனி ஆட்சி பெற்ற நாற்பைப்பது சமஸ்தானங்கள் இருப்பதைப் பொதுமக்களுக்கு ஞாபகப் படுத்துகிறார்.

இந்த சமஸ்தானங்கள் எல்லாம் எதற்காகத் தனி ஆட்சி உரிமை பெற்றிருக்கின்றன?

திருநெல்வேலியும் மலையாளமும் சென்னை மாகாணத்தில் சேர்ந்த ஜில்லாக்களாயிருக்கும்போது, திருவாங்கூரும் கொச்சியும் எதற்காகத் தனி இராஜ்யங்களாயிருக்க வேண்டும்?

அதற்கு என்ன முகாந்திரம் அல்லது நியாயம் இருக்கிறது?

இந்தியா முழுவதும் ஒரு காலத்தில் இந்திய ராஜாக்கள் அல்லது பாதுஷாக்களின் ஆட்சியில் இருந்தது.

பெரும் பகுதியில் இருந்த ராஜாக்களும், பாதுஷாக்களும் பிரிட்டிஷாரோடு போர் செய்து இறந்தார்கள். அவர்களுடைய ராஜ்யங்கள் தான் 'பிரிட்டிஷ் இந்தியா' ஆயின.

சில பிரதேசங்களின் ராஜாக்கள் பிரிட்டிஷாரிடம் சரணாகதி அடைந்தோ, சிநேக பாவத்துடன் அவர்களுக்குப் பணிந்தோ தங்கள் ராஜ்யங்களைக் காப்பாற்றிக் கொண்டார்கள். எனவே, இப்போது இந்தியாவில் பல 'சமஸ்தான்'கள் இருப்பதற்கு நியாயம், சரணாகதி நியாயமே யாகும்.

இந்த நியாயத்தைப் போதிய காரணமென்று இந்தியப் பொது மக்கள் ஒரு நாளும் ஒப்புக்கொள்ள முடியாது.

எனவே, பாகிஸ்தானுக்கு நியாயமில்லை யென்றால், சமஸ்தானுக்குக் கொஞ்சம் கூட நியாயம் கிடையாது.

ஆகவே, அரசியல் வாதியான ஸர் சி. பி.க்கு எவ்வளவு ஆத்திரமிருந்தாலும், திவான் ஸர் சி. பி. கொஞ்சம் வாயை மூடிக் கொண்டிருப்பது சர்வ க்ஷேமமாயிருக்கும்!

• • •

போதும்! இந்த மகானுபாவர்களைப் பற்றிய ஆராய்ச்சியை இன்றைக்கு இத்துடன் நிறுத்துவதே க்ஷேமமல்லவா?

சொல்கிறேன் கேளும். வெற்றிக்காக வணங்கும்; வணங்கிக் கொடுத்து வெற்றியடையும்; வணங்கினால் வெற்றி நிச்சயம்'' என்றார்.

அது போலவே, வேவலையும் சர்ச்சிலையும் பார்த்து இந்தியாவின் அரசியல் பிரச்னையைத் தீர்த்து வைக்கும்படி வேண்டிக் கொண்டார்.

சிறையிலிருந்து மகாத்மா வெளி வந்ததும், சாஸ்திரியாரின் உபதேசத்தைத்தான் கடைப்பிடித்தார். மகாத்மா வணங்கிக் கொடுக்க வில்லை யென்ற பழியை அவர் மீது யாரும் சொல்ல முடியாது.

ஆனால் வேவல் என்ன செய்தார்? சர்ச்சில் என்ன செய்தார்? அமெரி என்ன செய்தார்! — அவர்கள் ஒன்றும் செய்யாதது குறித்து மகாகனம் சாஸ்திரியார் என்ன செய்தார்?

மகாத்மா வணங்கிக் கொடுத்து விட்டதிலேயே சாஸ்திரியாருக்குத் திருப்தியா? பேலே, இந்தியா சுதந்திரம் பெறும் மார்க்கத்தைத் தேட வேண்டுமா, வேண்டாமா?

அதற்குப் பெருந்தடையா யிருக்கும் ஹிந்து - முஸ்லிம் வேற்றுமையைத் தீர்க்க அடுத்தபடியாக மகாத்மா முயலுகிறார். இன்னும், சாஸ்திரியாரின் உபதேசத்தைக் கடைப் பிடித்து, வணக்கத்தினால் வெற்றிபெறப் பார்க்கிறார்!

அதைக் கண்டு சாஸ்திரியார் இப்படி ஒரே யடியில் விசுவாமித்திரராகவும் அரிச்சந்திரனாகவும் சந்திரமதியாகவும் லோகிதாட்சனாகவும் ஆகி விட்ட அதிசயத்தை என்ன வென்று சொல்வது?

அலறலும் அழுகுரலும் சேர்ந்த சாஸ்திரியாரின் திருவாக்கைக் கேளுங்கள்:—

'' ஐயோ! ஐயையோ! ஜின்னா ஜயித்து விட்டாரே! காந்தி நம்மைக் காட்டிக் கொடுத்து விட்டாரே! அநியாயம்! அக்கிரமம்!

'' இந்த காந்தி — ஸி. ஆர். திட்டம் நடக்கிற காரியமா? இதை ஜின்னா ஒப்புக் கொள்வாரா? அவர் ஒப்புக் கொண்டாலும் பஞ்சாப் ஹிந்துக்களும், சீக்கியர்களும் ஒப்புக் கொள்வார்களா? அவர்கள் ஒப்புக் கொண்டாலும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஒப்புக் கொள்வார்களா? அவர்கள் ஒப்புக் கொண்டாலும், அதைப் பார்க்க நான் உயிரோடிருப்பேனா? பாரத நாட்டைப் பிளப்பதற்கு முன்னால், என் இருதயம் வெடித்து விடாதா? என் நெஞ்சு பிளந்து விடாதா? ஐயோ! ஒன்றான, ஏகமான, பாரதமாதாவை என் கனவிலே கண்டு ஆனந்திக்கேனே? ஏக பாரத நாட்டின் பிரதிநிதிகளாக மகாத்மாவும் ஜவாஹரும் சமாதான மகாநாட்டுக்குப் போவார்கள் என்று கனவு கண்டேனே! எல்லாம் போச்சே! இந்த கதி ஆச்சே!'' என்று கண்ணீர் விட்டு மார்பில் அடித்துக்கொண்டு கதறி அழுகிறார் சாஸ்திரியார்.

நாடகமேடையில் தரையில் மெத்தை விரித்திருக்கிறதா என்று பார்த்துக் கொண்டு மூர்ச்சையடைந்து விழும் போலி நடிப்பை சாஸ்திரியார் அரசியலில் கையாண்டு வருவது மிகவும் வருந்தத் தக்கதாகும்.

இந்தியாவின் தேசசரித்திரம் சாஸ்திரியாருக்குத் தெரியுமா? இந்தியா ஆங்கிலேயருக்கும் ஆங்கில பாஷைக்கும் 'வெப்ஸ்டர்' அகராதிக்கும் அடிமைப் படுவதற்கு முன்னால், இந்தியா முழுவதிலும் எப்போதும் ஒரே இராஜ்யம் தான் நடந்து வந்ததா?

இந்தியா ஐம்பத்தாறு தேசங்களாகவும், ஐந்நூறு இராஜ்யங்களாகவும் பிரிந்திருந்தபோதெல்லாம், பாரதமாதா துண்டிக்கப்பட்டுத்தானா கிடந்தாள்?

அவுரங்கஜீப்பின் ஆட்சியின் கீழ் இந்தியா ஏறக்குறைய ஒரே இராஜ்யமா யிருந்த காலத்தில், சிவாஜி தனி ராஜ்யத்தை ஸ்தாபிக்க முயன்றாரே. அவர் பாரதமாதாவைப் பிளந்தாரா?

ஒரு தாயின் வயிற்றில் பிறந்த சகோதரர்கள் — சாஸ்திரியாரும் அவர் சகோதரர்களும் என்றே வைத்துக் கொள்ளலாம் - பித்ரார்ஜித சொத்தைப் பாகம் செய்துகொண்டு தனித் தனி வீட்டிலிருந்தால், அவர்கள் தங்கள் தாயாரை வெட்டிப் பிளக்கிறார்கள் என்று அர்த்தமா?

சாஸ்திரியாரிடம் நமக்குப் பெருமதிப்புண்டு. அவருடைய சிறந்த கல்வி, பண்பாடு, மேதை ஆகியவற்றிடம் நமக்கு மிக்க மரியாதை உண்டு.

வெகு காலமாக அவரை நாம் பீஷ்மருக்கும் துரோணருக்கும் ஒப்பிட்டதுமுண்டு. ஆனால், சாஸ்திரியார் ராஜேஜாஜின் நடத்திய கடைசி நாடகத்துக்குப் பிறகு, பீஷ்மருக்கும் துரோணருக்கும் அவரை ஒப்பிடுவதைக் காட்டிலும், திருதராஷ்டிரனுக்கு ஒப்பிடுவதே பொருத்தமாகத் தோன்றுகிறது.

* * *

சென்னையிலே சாஸ்திரியார் பாடிய பல்லவிக்குத் திருவனந்தபுரத்திலிருந்து ஸர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் பக்க வாத்தியம் வாசிக்கிறார்.

ஆனால், ஸர் ஸி. பி. பக்க வாத்தியக்காரர் மட்டுமல்ல; தனிக் கச்சேரியே செய்யக்கூடிய வித்வான்தான்.

வந்ததுமே, மேற்படி சட்டி உடைக்கும் புண்ணியவான்கள் தங்கள் திருத்தொண்டை ஆரம்பித்தார்கள். முதலிலே, அவர்களுடைய கூக்குரல் முறை முறையாய் பிறந்தது. பிறகு, பத்திரிகைகளின் உதவியால் பெருங் குரலாயிற்று. மகாத்மாவும் ஜின்னாவும் சந்திக்கப் போகும் செய்தி வந்ததிலிருந்து அவர்களுடைய அழுகுரலும் ஒப்பாரியும் பிரம்மாண்டமான ரூபத்தை அடைந்து நம் காதுகளைக் குடைந்து வருகின்றன.

இந்த ஒப்பாரிப் பட்டாளத்தின் முன்னணியில் முதன்மையாக நிற்பவர் வீர சவர்க்கர். தேச சேவையில் இவர் வீரராயிருந்த காலமெல்லாம் போய் இப்போது சாபங் கொடுப்பதில் வீராதி வீரராய் விளங்குகிறார். மகாத்மா காந்தியின் பேரில் இவர் சமீபத்தில் பொழிந்திருக்கிற சாபமாரியைக் கேட்டால் கோப முனிவர்களான கௌசிகரும் துர்வாசரும் வெட்கித் தங்களையே சபித்துக் கொள்வார்கள்.

ஆனால் வீர சவர்க்கர் மீதும், அவர் போன்ற ஹிந்து மகா சபைக்காரர்கள் மீதும் நமக்கு அவ்வளவாக வருத்தம் கிடையாது. ஏனென்றால், அவர்களில் பெரும்பாலோர் உண்மை உள்ளத்தினர்கள். "இந்தியா ஹிந்துக்களுடைய தனி சொத்து" என்ற ஆசையும், முஸ்லிம்களிடம் கொண்டுள்ள அச்சமும் சேர்ந்து, அவர்களை இப்படி வெறி பிடித்தவர்களாக்கி, தேசத்தின் உண்மையான நன்மை எது என்பதை மறக்கச் செய்திருக்கிறது!

ஆனால், வயதிலும் அநுபவத்திலும் முதிர்ந்து ஞானத்துக்குப் பெயர்போன பிரமுகர்கள் அலறிப் புடைத்துக் கொண்டு மார்பில் அடித்துக்கொண்டு புலம்புவதைப் பற்றி நாம் என்னவென்று சொல்வது? அவர்களுடைய பேச்சுத் திறமையையும் நாடகத் திறமையையும் இந்தமாதிரி தேசத்தை உருப்படாமல் அடிக்கும் காரியத்திலே காட்டுவதைப் பற்றி நாம் எவ்வாறு பொறுமை கொள்வது?

இத்தகைய முதிர்ந்த மகாநுபாவர்களுக்குள்ளே தலைமையான மகாநுபாவராக விளங்குகிறவர் யார் என்று நேயர்களுக்கு நாம் சொல்ல வேண்டியதில்லை.

அந்தத் தனி மகத்துவம் பொருந்திய ஸ்தானத்தை 'காபினெட்' பதவியுடன் வெகு காலமாக அநுபவித்து வருகிறவர் மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரியார்தான்.

தேசத்திலே காங்கிரஸுக்கும் கவர்ன்மெண்டுக்கும் தீவிரமான போராட்டம் நடக்கும் ஒவ்வொரு நெருக்கடியான சந்தர்ப்பத்திலும், மகாகனம் சாஸ்திரியார் அசையாமல் தலையிட்டு தர்ம நியாயம் பேசுகிற தோரணையில், காங்கிரஸுக்குப் பாதகமாகவும் சர்க்காருக்குச் சாதகமாகவும் ஏதாவது சொல்லாமலிருப்பதில்லை.

போராட்டம் நடக்கும் போதுதான் இப்படியென்றால், சமரசப் பேச்சு நடக்கிறபோதும், மகாகனம் சாஸ்திரியார் ஒவ்வொரு தடவையும் புகுந்து சட்டியை உடைக்கத் தவறுவதில்லை. இந்தப் புண்ணிய கைங்கரியத்தில் மட்டும் அவருக்கு ஞாபக மறதி, தேக பலவீனம், வெப்பம், அசதி—ஆகிய எதுவும் குறுக்கிடுவதில்லை.

சிறையிலே இருந்த மகாத்மாவைப் பார்த்து அவர், "ஓ மகாத்மாவே! நான்

ஜுரமும் அசுரமும்

காயிதே ஆஜம் ஜின்னாவுக்கு ஜுரம் வந்துவிட்டபடியால், அவரும் காந்திஜியும் சந்திப்பது ஒத்திப் போடப் பட்டிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

இந்தச் செய்தி கொஞ்சம் முன்னால் கிடைத்திருந்தால், நாமும் நமது 19ம் பிரார்த்தனையைத் தள்ளிப் போட்டிருப்போம்.

அதோடு, ஜனாப் ஜின்னாவும் இவ்வளவு அவசர அவசரமாக மகாத்மாவுக்குத் தாம் அனுப்பிய "நன்றி" என்ற பதிலைப் பிரசுரித்திருக்க மாட்டார்!

எவ்வளவு கணக்காக 'டைம் பாம்' போட்டதுபோல் 18ம் பக்கத்து ஜின்னாவின் பதில் பிரகாசமாயிற்று, பாருங்கள்!

நமது தலையங்கத்தில் குறிப்பிட்ட மற்ற எல்லா மகாநுபாவர்களையும், மகாநுபாவர் ஜின்னா அல்லவா தூக்கி அடித்து விட்டார்!

மகானுபாவர்கள்!

எல்லாக் கண்களும் இன்று பம்பாயை நோக்குகின்றன.

நல்லவர்களின் உள்ளமெல்லாம் இன்று கடவுளைப் பிரார்த்திக்கின்றன.

இந்தியா தேசமெங்கு முள்ள தேச பக்தர்கள், இன்றைக்கு, "இத்தனை நேரம் மகாத்மா பம்பாய் போயிருப்பார்; இத்தனை நேரம் ஜின்னாவின் வீட்டை அடைந்திருப்பார்; இத்தனை நேரம் பேச்சு ஆரம்பமாகி யிருக்கும்" என்று எண்ணமிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நாளது ஆகஸ்டு மீ 19உ சனிக்கிழமை யன்று மகாத்மா காந்தியும், காயிதே ஆஜம் ஜின்னாவும் பம்பாயிலே சந்திப்பது அவ்வளவு முக்கியமான சம்பவமாகும்.

இந்தச் சந்திப்பிலே இந்தியாவின் வருங்கால வாழ்வு நிர்ணயிக்கப்படப் போகிறது.

இந்தச் சந்திப்பு வெற்றி பெற்றால், இந்தியா சுதந்திரம் அடைவதற்கு ஒரு மகத்தான பெருந்தடை நிவர்த்தியாகி விடும்.

அதன் பிறகு, மற்றச் சிறு தடைகளையெல்லாம் அப்புறப் படுத்துவதும் சுலபமாகி விடும்.

நம்முடைய ஆயுட் காலத்திலே நம்முடைய கண் முன்னே பாரதத் தாய் மணி முடி தரித்துச் சுதந்திர தேவியாய் வீற்றிருப்பதைப் பார்க்கலாம்.

* * *

இவ்வளவு முக்கிய சம்பவமாயிருக்கிறபடியாலேதான், அதன் வெற்றிக்காகப் பிரார்த்தனை செய்யும்படி மகாத்மா காந்தி நம்மை வேண்டிக் கொண்டிருக்கிறார்.

காயிதே ஆஜமும் அவ்வாறே நமது விருப்பத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

இங்கிலாந்தின் பெரிய பாதிரியாரான காண்டர்பரி ஆர்ச் பிஷப்பும், இந்தியாவின் பெரிய பாதிரியாரான கல்கத்தா மெட்ரபாலிடனும் அன்றையதினம் கடவுளைப் பிரார்த்திக்கும்படி நம்மை வேண்டிக்கொண்டிருக்கிறார்கள்.

காக்ஸார் தலைவரான அல்லாமா மஷ்ரிக்கியும் நம்மை அவ்வாறே வேண்டிக் கொண்டிருக்கிறார்.

இவ்வளவு பெரியவர்களுடைய ஒருமுகமான வேண்டுகோளுக் கிணங்க, நாமும் ஆண்டவனிடம் நமது பிரார்த்தனையைச் செலுத்துகிறோம்.

பம்பாயில் ஸ்திரவாரத்தில் ஆரம்பமாகும் காந்தி-ஜின்னா சந்திப்பினால் ஸ்திரமான ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை ஏற்பட வேண்டுமென்றும், அதன் பயனாகத் தேசத்துக்கு நிரந்தரமான க்ஷேமம் ஏற்பட வேண்டுமென்றும் கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

* * *

பெரியவர்களின் யோசனைக் கிணங்க நாம் கடவுளைப் பிரார்த்திக்கும் போதும், நம் உள்ளத்தில் ஒரு சந்தேகம் ஜனிக்கத்தான் செய்கிறது.

"கடவுளுக்கு அவருடைய கடமை தெரியாதா? நாம் ஞாபகப் படுத்தித்தான் ஆகவேண்டுமா?" என்பதுதான்.

நம்மைப் பொறுத்த வரையில், இந்த காந்தி-ஜின்னா சந்திப்பையே நாம் ஒரு பெரிய வெற்றியாகக் கருதுகிறோம்.

அதனால் உடனே உத்தேசித்த பலன் கிடைக்காமற் போனாலும், கூடிய சீக்கிரத்தில் மகத்தான நன்மை தேசத்துக்கு விளையப்போகிற தென்பதில் நமக்கு எள்ளளவும் ஐயமில்லை.

இன்றைக்கு மகாத்மாவின் நேர்மையான திட்டத்தை ஜனாப் ஜின்னா நிராகரித்தால் இரண்டு வருஷங்களுக்குப் பிறகு இந்திய முஸ்லிம்கள் ஜனாப் ஜின்னாவை நிராகரித்துவிட்டு அத்திட்டத்தை ஒப்புக்கொள்வார்கள் என்பது நமக்குச் சர்வ நிச்சயம்.

எனவே, ராஜாஜியின் சமரசத் திட்டத்தை மகாத்மா ஒப்புக் கொண்டு அதனுடன் ஜனாப் ஜின்னாவைச் சந்திப்பதையே தேசத்துக்கு ஒரு பெரும் வெற்றியாகக் கருதுகிறோம்.


சந்திப்பின் விளைவைப் பற்றிக் கொஞ்சம்கூடக் கவலைப்படவில்லை.

* * *

ஆனால், எதைக் குறித்துக் கவலைப்படுகிறோம் என்றால், தேசம் சுதந்திரம் அடைவதற்கு அநுகூலமான ஏதாவது ஒரு காரியம் நடந்து விடும்போல் தோன்றினால், அந்தச் சமயம் பார்த்துக் காரியத்தைக் குட்டிச்சுவரா யடிப்பதற்கென்று சில மகானுபாவர்கள் கிளம்புகிறார்களே, அவர்களுக்காகத்தான்!

ராஜாஜி திட்டத்தை மகாத்மா ஒப்புக் கொண்டு விட்டார் என்ற செய்தி

-உம்மன்


அதே சமயத்தில் இந்தியாவில் வீர சவர்க்கர் கோபாக்கினியில் வெந்து கொண்டிருப்பார்.
ஸர் சி.பி.யோ சமஸ்தானங்களுக்கும் பாகிஸ்தான் வாங்கிக் கொடுப்பதற்காகப் பழைய ஒப்பந்தங்களை ஆராயலாம்.
காங்கிரஸ்காரர்களும் முஸ்லிம்லீகர்களும் ஒருவர் மனத்தை ஒருவர் அறிந்துகொள்ள ஆவலாயிருப்பார்கள்.
இந்தியப் பொதுமக்களோ காந்தி-ஜின்னா பேச்சு வார்த்தைகள் வெற்றியில் முடியவேண்டும் என்று வேண்டிக் கொண்டிருப்பார்கள்.

நிகழ்ச்சிச் சித்திரம்



கல்கி

மலர் 4 | தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 3

என்ன சேதி?

இரட்டை லாபம்

ஒருவர் பணம் படைத்திருப்பதனால் அடையக் கூடிய சிறந்த பலன் அன்னை கஸ்தூரிபா நிதிக்குப் பணம் உதவுவதே யாகும். காது படைத்திருப்பதனால் அடையக்கூடிய சிறந்த பலன் நல்ல சங்கீதத்தைக் கேட்டு இன்புறுவதே யாகும். இந்த இரண்டுவித லாபங்களையும் ஒரே சமயத்தில் அடைவதற்குரிய சந்தர்ப்பம் திருச்சி, மதுரை, கோயமுத்தூர் வாசிகளுக்குச் சமீபத்தில் கிடைக்கப் போகிறது. அன்னை கஸ்தூரிபா நிதிக்காக ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் இன்னிசைக் கச்சேரி திருச்சியில் இம்மாதம் 25உ நடைபெறுகிறது. மதுரையில் செப்டம்பர் முதல் தேதியும் கோயமுத்தூரில் 3உயும் நடைபெறுகின்றன. மேற்படி மூன்று நகரங்களும் பண வசூல் விஷயத்தில் சென்னையைத் தோற்கடிக்கு மென்று எதிர்பார்க்கிறோம். அன்னையின் கைங்கரியத்தில் ஆர்வம் காரணமாக ஸ்ரீமதி எம். எஸ். செய்யப் போகும் கச்சேரிகளானபடியால், ஒன்றை விட ஒன்று மேன்மையாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.


போட்டிக் கதைகள்

நமது சிறு கதைப் போட்டிக்கு வந்த கதைகளின் பூர்வாங்க பரிசீலனை முடிந்துவிட்டதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். தற்சமயம் நீதிபதிகள் சென்னையில் கூடிப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுப்பதில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகஸ்டு மீ 27உ "கல்கி" இதழில், போட்டியின் முடிவை அறிவிப்பது சாத்தியமாயிருக்கு மென்று நம்புகிறோம்.

வார்ஸா விபரீதம்

இந்த யுத்தத்தில் முதன் முதலில் ஜெர்மன் பயங்கரத் தாக்குதலுக்கு ஆளான நகரம் போலந்தின் தலைநகரான வார்ஸா ஆகும். சமீபத்தில் ருஷியப் படைகள் போலந்தில் புகுந்து அதி வேகமாக முன்னேறி மேற்படி வார்ஸா நகருக்கு அருகாமையில் வந்திருக்கின்றன. ஆனால் வார்ஸா நகரைத் தாக்கி அதைக் கைப்பற்றவில்லை. இதற்கிடையில் வார்ஸா நகருக்குள்ளே ஒரு விபரீதம் நடந்து விட்டது. அங்கிருந்த போலிஷ் ஜனங்கள் நாஜிகளுக்கு விரோதமாகக் கலகம் கிளப்பினார்கள். நாஜிகள் அக் கலகத்தைப் பயங்கர முறைகளினால் அடக்கி விட்டார்கள். வார்ஸா ஜனங்கள் கலகமாகக் கிளம்பிய போது ருஷிய சர்க்கார் அவர்களுக்கு உதவி செய்யவில்லையென்று நேச நாடுகளில் புகார் கிளம்பியிருக்கிறது.

ருஷிய சர்க்காரோ, வார்ஸா ஜனங்களை அவசரப்பட்டுக் கலகம் செய்யத் தூண்டியது லண்டனிலுள்ள 'போலி' போலிஷ் சர்க்கார் என்றும், ருஷியாவுக்கு விரோதமாக வார்ஸாவைத் தங்கள் ஆதிக்கத்துக்கு உட்படுத்துவதற்காகவே அவ்விதம் செய்து விட்டார்கள் என்றும் சொல்கிறார்கள். மொத்தத்தில், நேச நாடுகளுக்குள் அவ்வளவு ஒற்றுமை மனோபாவம் நிலவி வரவில்லையென்பதை மேற்படி வார்ஸா விபரீதம் ஞாபகப்படுத்துகிறது. ருஷியா யுத்தத்தில் ஜயித்துக் கொண்டே ஐரோப்பாவில் தனது ஆதிக்கத்தை நிலை நாட்டப் பார்க்கிறது என்பது வெளிப்படை. இந்த யுத்தம் முடிவதற்குள்ளாகவே அடுத்த யுத்தத்துக்கு விதை போடப் படாமலிருக்க வேண்டுமென்றுதான் கவலைப்படுகிறோம்.


சுயமாக வெளுக்கும் நுரையைப் பற்றின உண்மை என்ன?

கல்கி
பொருளடக்கம்

மலர் 4 } 1944 ஆகஸ்டு 20 { தாரண
இதழ் 3 } { ஆவணி 5

'கல்கி'யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

"தொண்டையைக் கனைத்துக் கொள்ள விரும்புகிறவர்கள் கனைத்துக் கொண்டு விடுங்கள். இரும விரும்புகிறவர்கள் இருமி விடுங்கள். தும்ம விரும்புகிறவர்கள் தும்மி விடுங்கள். இந்தக் காரியங்களுக்காக இரண்டு நிமிஷ அவகாசம் கொடுக்கிறேன். அதற்குப் பிறகு ஒரே நிசப்தந்தான் நிலவ வேண்டும்." — இந்தப் பூர்வ பீடிகையுடன் யாராவது ஒரு பிரசங்கி தம் பிரசங்கத்தை ஆரம்பித்தால் இப்படியும் ஒரு பிரகிருதி இருக்குமா என்று நினைப்பீர்கள் அல்லவா? ஆனால் இப்படியும் ஒரு பிரகிருதி உண்மையில் இருக்கிறார். மான்ட்டி என்று அழைக்கப்படும் ஜெனரல் மான்ட்கோமரிதான் அவர்.



ஒரு சமயம் மான்ட்டி "படைத் தலைவர்கள் என்ன சாமர்த்தியமாகச் சண்டை போட்டு என்ன? வெற்றி சம்பாதித்துக் கொடுக்கும் வரையில்தான் மேலே யுள்ளவர்கள் வைத்துக் கொள்ளுகிறார்கள். தோல்வி ஏற்பட்டதோ கழித்துத் தள்ளிவிடுகிறார்கள்" என்று வருத்தப்பட்டுக் கொண்டாராம். அப்போது பக்கத்தில் இருந்த ஒரு ஜெனரல், "ஏன், இப்படிக் கவலைப் படுகிறீர்கள்? தாங்கள்தான் ஜமாய்த்துக் கொண்டிருக்கிறீர்களே!" என்றாராம். அதற்கு மான்ட்டி, "நான் என்னைப் பற்றிச் சொல்லவில்லை. பாவம், ரோம்மெலைப் பற்றிச் சொன்னேன்!" என்றாராம்.

இந்த மான்ட்டிதான் இப்பொழுது நார்மண்டி போர்முனையில் பிரிட்டிஷ் படைகளுக்குத் தலைவராக விளங்குகிறார். நம் அட்டைப் படத்திலும் அழகாக விளங்குகிறார்.